ஈஸாவின் இஞ்ஜீல்

வாழும் இறைவாக்கு
விளக்க மொழிபெயர்ப்பு

ஈஸாவின் இஞ்ஜீல்

வாழும் இறைவாக்கு
விளக்க மொழிபெயர்ப்பு

Copyright © 1987 Living Bibles International
All rights reserved
First edition August 1987
Published by Living Bibles Lanka
Printed at Tisara Press,
129, Dutugemunu Street, Dehiwala,
Sri Lanka.

வாசிப்பவர்களுக்கு..................

''இஞ்ஜில்'' வேதத்தினைப்பற்றி பலருக்குத் தெரிந்திருந்த பொழுதிலும்; ஒரு சிலரே இதனை வாசித்திருக்கிறார்கள். இந்த அருமையான புத்தகத்தின் பிரதியொன்றினை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்று விரும்பிய பலரைச் சந்தித்ததின் விளைவாக. இஞ்ஜில் வேதத்தில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை அறிய விரும்பிய அனைவருக்காகவுமே இதனை வெளியிடுவதாகத் தீர்மானித்தோம்.

இந்த மொழிபெயர்ப்பு கிரேக்க மூல மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதோடு, நடைமுறையிலுள்ள வேறு மொழிபெயர்ப்புகளோடும் ஒப்பிட்டு, ஆராய்ந்தே எழுதப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பின் நோக்கம் மூல மொழியிலுள்ள இறைவனின் வார்த்தைகளை இலகுவான தமிழில் கொடுப்பதேயாகும்.

இஞ்ஜில் வேதம் கிரேக்க மூல மொழியில் எழுதப்பட்டுள்ளது; ஈஸாமஸீஹ் இன் காலத்தில் வியாபாரத்திலும், வர்த்தகத்திலும் நடைமுறையில் பாவிக்கப்பட்டு வந்த இந்தத் தேசிய மொழியை மேற்கு ஆசியாவிலும், மத்திய கடலைச் சுற்றியிருந்த இடங்களிலும் பெரிதும் பயன்படுத்தி வந்தார்கள். இதனால் இஞ்ஜிலில் ஈஸாமஸீஹ் வெளிப்படுத்தும் செய்தி மிகவும் திடமாக உலகத்திற்குக் கொடுக்கப்பட்டது.

இஞ்ஜில் கிரேக்க மொழியில் எழுதப்பட்டாலும் இதில் எபிரேய தீர்க்கதரிசிகளின் வெளிப்படுத்துதலும் அடங்கியுள்ளது. அத்தோடு இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பலஸ்தீனாவில் ஈஸாமஸீஹ் வாழ்ந்த காலத்தில் பனீஇஸ்ரூயேல் மக்களின் மொழியும், கலாச்சாரமும் ஒன்றாகக் காணப்பட்டது.

இந்த மொழிபெயர்ப்பில் மூலமொழியிலுள்ள கருத்து முழுமையாக வெளிப்படுவதற்காக இலகுவான தமிழைப் பாவித்திருக்கிறோம். அத்துடன் தமிழ்ச் சொற்றொடர்களின் மூலம் அதன் உட்கருத்தை எடுத்துக்காட்ட முடியாத இடங்களில், மத்திய கடலைச் சுற்றியுள்ள நாட்டு மக்களின் கலாச்சாரத்தை அறிந்தவர்கள் விளங்கிக்கொள்வதற்காக, இடையிடையே அரபு சொற்களைப் பாவித்து இக்கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளோம்.

நம்பத்தகுந்த மூலமொழியிலிருந்து மொழிபெயர்த்து இந்த விலை மதிப்புள்ள மகா உன்னதமான இறைவனின் ''இஞ்ஜில்'' வேதத்தை அதிக மனமகிழ்ச்சியுடன் தருகிறோம்.

இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது ஏதேனும் கேள்விகள் எழுமாயின் வெளியிடுவோரின் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்வதை வரவேற்கிறோம்.

''ஈஸாவின் இஞ்ஜில்''
த.பெ. இல. 1868
கொழும்பு.



கி. பி. 3ம் நூற்றுண்டில் கிரேக்க மொழியில் பைப்ரடிஸ் என்னும் தாளில் பிரதிபண்ணப்பட்ட 'இஞ்ஜில்' இன் ஒரு பகுதி. இஞ்ஜில் *16 : 9 – 21.*

ஈஸாவின் இன்ஜீல்

அர்ப்பணம்

1 மதிப்புக்குரிய தெயோப்பிலுவே! எங்களிடையே
நடந்தேறிய சம்பவங்களை, தொடக்கமுதல் கண்கூடா
கக் கண்டவர்களிடமிருந்தும், இறைவார்த்தையைப்
போதித்தவர்களிடமிருந்தும் நாம் கேட்டறிந்த
அல்லாஹ்வின் செய்தியைத் தொகுத்து எழுதப் பலர்
முற்பட்டுள்ளனர்.* எனினும் இவர்கள் எழுதிய 3
வரலாறுகளைத் திரும்பவும் நன்கு ஆராய்ந்து பார்த்து,
ஆரம்பமுதல் இறுதிவரை திட்பநுட்பமாய் ஆராய்ச்சி
செய்த பின்பு, சுருக்கமாகத் தொகுத்து உங்களுக்கு
எழுதுவது நலமென்று கருதினேன்.* நீங்கள் கேட்டு 4
அறிந்தவை அனைத்தும் உண்மையென உறுதிப்படுத்து
வதே எனது நோக்கமாகும்.*

யஹ்யா (அலை) அவர்களின் பிறப்பு – முன்னறிவிப்பு

ஏரோது, யூதேயாவின் அரசனுயிருந்த காலத் 5
தில் ஸகரியா எனும் பெயருடைய யூத ஆலிம் இருந்
தார். இவர் ஆலயப் பணியில் ஈடுபடும் அபியாவின்
பிரிவைச் சேர்ந்தவர். இவர் மனைவி எலிசபெத்தும்
ஹாரூன் நபி (அலை) அவர்களின் வம்சத்தைச் சேர்ந்த
யூத ஆலிம் மரபைச் சேர்ந்தவள்.* ஸகரியாவும், எலிச 6
பெத்தும் இறைவனின் கட்டளைகளின்படி உள்ளத்தி
லும், செயலிலும் ரப்புல் ஆலமீனுக்குக் கீழ்ப்படிந்து,
எவரும் குற்றங்காண முடியாத வகையில் வசித்து
வந்தவர்கள். இவர்கள் இறைவனின் பார்வையில் நீதி
யுள்ளவர்களாய் இருந்தார்கள்.* ஆனுல் இவர்களுக் 7
குப் புத்திரபாக்கியம் இல்லாதிருந்தது. ஏனெனில்,
எலிசபெத்து மலடியாயிருந்தாள். இருவரும் அப்
பொழுது முதிர்வயதானவர்கள்.*

ஸகரியாவின் பிரிவிற்கு ஆலயப்பணியை நிறை 8, 9
வேற்றும் முறை வந்தது. பைத்துல் முகத்தஸின் பரிசுத்த
உட்பிரகாரத்தினுள் சென்று தூபங்காட்டுவது யார்
என்பதைத் தெரிந்துகொள்ளச் சீட்டுக் குலுக்குவது
வழக்கம். அப்படிச் செய்தபோது, ஸகரியாவின் பெய
ருக்குச் சீட்டு விழுந்தது.* ஸகரியா உள்ளே சென்று 10
தூபங்காட்டும் வேளையில், மக்கள் எல்லோரும் கூட்ட
மாய் வெளியே நின்று, வழக்கம்போல் துஆச் செய்து
கொண்டிருந்தனர்.* ஸகரியா பைத்துல் முகத்தஸின் 11
உட்பிரகாரத்தில் தூபங்காட்டிக் கொண்டிருந்த
போது, திடீரென்று மலக்கு ஒருவன் தூபபீடத்தின்
வலது பக்கத்தில் தோன்றினார்.* ஸகரியா அம்மலக் 12
கைக் கண்டதும் அஞ்சி, நடுநடுங்கினார்.* ஆனால், 13
அம் மலக்கு அவரைப் பார்த்து, ''ஸகரியாவே! அஞ்சா
தீர்! ஏனெனில், நான் உமக்கு வஹீயை அறிவிக்க வந்துள்
ளேன். இறைவன் உமது விண்ணப்பத்தைக் கேட்டான்.
உமது மனைவி எலிசபெத்து, ஒரு மகனைப் பெறுவாள்.
நீர் அவருக்கு யஹ்யா என்று பெயரிட வேண்டும்.*
உங்கள் இருவருக்கும் அவரது பிறப்பினால் பெரும் 14
மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடன் சேர்ந்து அநேகர்
அவர் பிறப்பிற்காக மகிழ்ச்சி அடைவார்கள். * ஏனெ 15
னில், அவர் ரப்புல் ஆலமீனின் பார்வையில் மேன்மை
மிக்கவராய் இருப்பார். அவர் திராட்சை ரசமோ,
மதுபானமோ தொடுவதில்லை. தம் தாய் வயிற்றில் கரு
வாயிருக்கும் போதே, இறைவனின் ரூஹுல்குதுஸ்
நிறைந்தவராய் இருப்பார்.* அவர் பனீஇஸ்ராயீல் 16
மக்கள் பலரைத் தம் ரப்புல் ஆலமீனாகிய இறைவனிடம்
திரும்பும்படி வற்புறுத்துவார்.* அவர் இல்யாஸ் 17
நபிக்கு இருந்த ரூஹையும், வல்லமையையும் பெற்ற
வராயிருப்பார். அவர் ரப்புல்ஆலமீனின் வருகைக்கு
முன்னோடியாக வந்து, அவனின் வருகைக்காக மக்களை
ஆயத்தம் செய்வார். வளர்ந்தோரின் கல்மனதை
இளகச் செய்து, சிறுபிள்ளைகளைப்போல் ஒரே சிந்தை
யுடையவர்களாய் ஒன்றி வாழச்செய்வார். இறை
வனுக்குக் கீழ்ப்படியாதவர்களை மனமாற்றமடையச்
செய்து, விசுவாசத்தின் ரூஹுக்குள் வழிநடத்துவார்''
என்றார்.* அப்பொழுது ஸகரியா அம்மலக்கிடம், 18
''ஆனால், இது எவ்வாறு நிறைவேறும்? நானும் என்
மனைவியும் வயதுபோனவர்களாய் இருக்கிறோமே?''

என்றார்.* அதற்கு அம்மலக்கு, ''என் பெயர் ஜிப்ரீல். 19
நான் இறைவனது முன்னிலையில் நிற்பவன். இறைவனே
இந்த வஹீயை உமக்கு அறிவிக்கும்படி என்னை உம்மிடம்
அனுப்பினான்.* உரிய காலத்தில் நான் கூறிய வார்த் 20
தைகள் நிறைவேறும்; நீரோ இதை நம்பவில்லை. எனவே,
இவை நிறைவேறுமளவும் உமது நாவு கட்டுப்படும்.
நீர் பேச முடியாதவராய் இருப்பீர்'' என்றார்.*

இந்த வேளையில் மக்கள் கூட்டம் ஸகரியாவுக் 21
காக பைத்துல் முகத்தஸின் முற்றத்தில் காத்திருந்தது.
அவர் பைத்துல் முகத்தஸிலிருந்து வெளியே வர நேரம்
சென்றதையிட்டு அவர்கள் வியப்புற்றார்கள்.* கடை 22
சியில் ஸகரியா வெளியே வந்தபோது, அவரால் அவர்
களிடம் பேசமுடியவில்லை. அவருடைய சைகையிலி
ருந்து அவர் பைத்துல் முகத்தஸில் தரிசனம் ஒன்றைக
கண்டார் என்பதை அறிந்தனர்.* அதுமுதல் அவர் 23
ஊமையாகவே இருந்து வந்தார். அவர் தம் ஆலயப்
பணிவிடைக் காலம் முடியும்வரை பைத்துல் முகத்தஸி
லேயே தங்கியிருந்தார். அதன் பின்னர், அவர் தன் வீடு
திரும்பினார்.* அவர் மனைவி எலிசபெத்து விரைவில் 24
கருவுற்றாள். அவள் ஐந்து மாதங்கள் பிறர் கண்களில்
படாதவாறு பார்த்துக்கொண்டாள்.* ''ரப்புல் ஆல 25
மீன் மிகுந்த இரக்கமுள்ளவன், அவன், மக்களிடையே
எனக்கிருந்த 'மலடி' என்ற பழிச்சொல்லை, இவ்வாறு
அகற்றி விட்டான்'' என்று சொல்லிக் கொண்டாள்.*

ஈஸாவின் பிறப்பு – முன்னறிவிப்பு

அதற்கு அடுத்த மாதம் (ஆறும் மாதம்) ஜிப்ரீல் 26
(அலை) அவர்கள் என்னும் மலக்கை இறைவன் கலிலேயா
விலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலுள்ள ஒரு கன்னி
யிடம் அனுப்பினான்.* அவள், தாவூது நபி (அலை) 27
அவர்களின் வம்சத்திலே பிறந்த யூஸுபு என்னும் பெய
ருடைய ஒருவரை நிக்காஹ் செய்யும்படி நிச்சயிக்கப்
பட்டிருந்தாள். அவள் பெயர் மர்யம் (அலை) அவர்கள்*
அம்மலக்கு அவள் முன் தோன்றி, ''அருள்பெற்ற 28
மங்கையே! ஸலாம்! ரப்புல்ஆலமீன் உம்மோடு
இருக்கிறான். பெண்களுக்குள் நீர் பரக்கத்துப்
பெற்றவள்'' என்று வாழ்த்தினார்.* மர்யம் (அலை) அவர் 29
களோ கலக்கமுற்றவளாய், ''மலக்கு கூறிய வார்த்தைகள்
எதைக் குறிக்கும்?'' என்று சிந்திக்கத் தொடங்கினாள்.*

அப்பொழுது, மலக்கு அவளிடம், ''மர்யமே! நீர் 30
பயப்படவேண்டாம், ஏனெனில், இறைவன் உமக்கு
பரக்கத்துகளை அருளத் தீர்மானித்துள்ளான்.* இதோ! 31
நீர் கருத்தரித்து ஒரு ஆண்குழந்தையைப் பெற்றெடுப்
பீர். அக்குழந்தைக்கு நீர் 'ஈஸா' என்று பெயரிடுவீர்.* 32
அவன் மேன்மைமிக்கவனுய் இருப்பான். 'அல்லாஹுதஆலாவின் குமாரன்' என்றழைக்கப்படுவான். ரப்புல்
ஆலமீனுகிய இறைவன் அவனின் முன்னேரான தாவூது
நபியின் சிங்காசனத்தை அவனுக்களிப்பான்.* அவன் 33
பனீஇஸ்ராயீல் சந்ததியினரை என்றென்றைக்கும் அர
சாளுவான். அவனது இராட்சியத்திற்கு முடிவேயில்லை''
என்ருர்.*

மர்யம் (அலை) அம்மலக்கிடம். ''நான் கன்னிகை 34
யாய் இருக்கிறேன்! எனக்கு எப்படிக் குழந்தை பிறக்
கும்?'' என்று கேட்டாள்.* அதற்கு அம்மலக்கு, 35
'' ரூஹுல் குதுஸானவன் உம்மேல் தங்குவான்.
அல்லாஹுதஆலாவின் வல்லமை உம்மேல் நிழ
லிடும். எனவே உமக்குப் பிறக்கும் குழந்தையும் குத்தூ
ஸானது. அக்குழந்தை 'இறைவனின் குமாரன்' எனப்
படுவான்.* மேலும், 'மலடி' என்றழைக்கப்பட்ட உமது 36
உறவினள் எலிசபெத்தும் தம் முதுவயதில் கருத்தரித்
திருக்கிருள். அவளுக்கு இது ஆரும் மாதம்.* இறை 37
வனுல் இயலாதது ஒன்றுமில்லை'' என்ருர்.*

அதற்கு மர்யம் (அலை), ''இதோ! நான் ரப்புல் 38
ஆலமீனின் அடிமை. அவன் விரும்பியதைச் செய்ய
ஆயத்தமாயிருக்கிறேன். நீர் கூறியதெல்லாம் நிறை
வேறட்டும்'' என்ருள். அப்பொழுது மலக்கு அவளிட
மிருந்து மறைந்தார்.*

மர்யம் (அலை) அவர்களும் எலிசபெத்தும்

சிலநாட்களின் பின் மர்யம் (அலை), யூதேயாவின் 39, 40
மலைப்பிரதேசத்திலுள்ள ஒரு பட்டணத்தில் வசித்து
வரும் ஸகரியாவின் வீட்டிற்கு, எலிசபெத்தைச் சந்திக்
கச் சென்ருள்.* மர்யம் (அலை) அவளுக்கு ஸலாம் 41
சொல்லியதைக் கேட்டதும், எலிசபெத்தின் வயிற்றி
லுள்ள குழந்தை துள்ளிற்று. அவளும் ரூஹுல் குது
ஸானவனுல் ஆட்கொள்ளப்பட்டாள்.* அப்பொழுது 42
எலிசபெத், ''பெண்களுள் நீங்கள் பரக்கத்துப் பெற்ற

வர்கள். உங்கள் பிள்ளேயும் இறைவனின் மாபெரும்
புகழ்ச்சியைப் பெறுவான்.* என் ஆண்டவனின் தாய் 43
என்னேக் காணும்படி தேடிவந்து, எனக்கருளிய மதிப்
புத்தான் என்னே!* நீங்கள் உள்ளே வந்து எனக்கு 44
ஸலாம் சொல்லியதை நான் கேட்டதும், என் வயிற்
லுள்ள பிள்ளே களிப்புடன் துள்ளிற்று.* நீங்கள், 45
ரப்புல் ஆலமீன் கூறியவை நிறைவேறுமென்று விசுவா
சம் கொண்டீர்கள். எனவே, அவன் இவ்வியப்பு
மிக்க பரக்கத்தை உங்களுக்கு அருளினன்'' என்ருள்.*

மர்யம் (அலே) அவர்களின் துதிப்பாடல்

அதைக்கேட்ட மர்யம் (அலே), ''என் உள்ளம் 46
ரப்புல் ஆலமீனேப் புகழ்ந்து போற்றுகிறது.* என் இரட் 47
சகனுகிய இறைவனில் என் மனம் மகிழ்கிறது.* ஏனெ 48
னில், அவன் தன் அடிமையின் தாழ்நிலேயைக் கண்
நோக்கினன். இதோ! இதுமுதல் எல்லாத் தலேமுறை
யினரும் என்றென்றும் என்னேப் பரக்கத்துப் பெற்றவள்
என்பார்கள்.* ஏனெனில், வல்லமையுள்ள குத்தூஸ் 49
எனக்கு மேன்மையானவற்றைச் செய்தான்.* அவனு 50
டைய இரக்கம் அவனுக்குப் பயப்படுவோருக்குத் தலே
முறை தலேமுறையாக நிலேத்து நிற்கும். * அவன் வல்ல 51
மையான புயம் எவ்வளவு வலிமையுள்ளது. அவன்,
இருதயத்தில் இறுமாப்பும் அகந்தையுமுடையவர்களே
எவ்வாறு சிதறடித்தான்.* ஆட்சிபுரியும் வல்லுநர் 52
களேச் சிங்காசனங்களினின்று தள்ளினன். தாழ்நிலே
யிலுள்ளோரை உயர்த்தினன்.* ஆன்ம பசியுள்ளவர் 53
களே நன்மைகளினுல் நிரப்பினன். செல்வமுள்ளோரை
வெறுமையாய் அனுப்பிவிட்டான்.* நம் முன்னேருக்கு 54, 55
வாக்களித்தபடியே இப்ருஹீம் நபி (அலே) அவர்களுக்
கும், அவர் சந்ததிக்கும் என்றென்றும் இரக்கங்காட்ட
நினேத்து தன் அடியானுகிய பனீஇஸ்ராயீலுக்கு ஆதர
வளித்தான்'' என்ருள்.* மர்யம் (அலே) ஏறக்குறைய 56
மூன்று மாதம் எலிசபெத்துடன் தங்கியபின் தன் வீடு
திரும்பினள்.*

யஹ்யா (அலே) அவர்களின் பிறப்பு

எலிசபெத்துக்கு நிபாஸுடைய காலம் வந்த 57
போது, அவள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்

தாள்.* இச்செய்தி உற்ருர் உறவினர், அயலவர் 58
எல்லோருக்கும் விரைவில் எட்டியது, அப்பொழுது,
ரப்புல்ஆலமீன் அவள்மேல் தனது பேரிரக்கத்தைக்
காட்டினுன் என்பதை அறிந்த அவர்கள், அவளுடன்
மகிழ்ந்து கொண்டாடினுர்கள்.* குழந்தை பிறந்து 59
எட்டாம் நாள் குழந்தையின் கத்ன மஜ்லிஸுக்கு உற்
ருர் உறவினர் வந்து சேர்ந்தனர். அவர்கள் எல்லோ
ரும் தங்களின் பாரம்பரியத்தின்படி, தகப்பனுரின்
பெயர் ஸகரியா என்றதனுல், அப்பெயரையே குழந்
தைக்கு இட நினைத்தனர்.* ஆனுல், அவர் தாய் எலிச 60
பெத் அவர்களிடம், ''வேண்டாம், அவனுக்கு 'யஹ்யா'
என்று பெயரிட வேண்டும்'' என்ருள்.* அதற்கு அவர் 61
கள், ''ஏன்? உன் குடும்பத்தில் அப்பெயருடையவர்
எவரும் இல்லையே!'' என வியப்புடன் கேட்டனர்.*
பின்பு ஸகரியாவிடம் சைகைமூலம் அவர் குழந்தைக்கு 62
இட விரும்பும் பெயர் யாது என வினவினுர்கள்.* அவர் 63
ஓர் எழுதுபலகையைக் கேட்டு வாங்கி, ''இவர்
பெயர் யஹ்யா'' என்று எழுத எல்லோரும் வியப்புற்ற
னர்.* அந்நேரமே ஸகரியாவின் வாய் திறக்கவும், 64
நாவு கட்ட விழ்ந்தது. அவர் இறைவனைப் போற்றிப்
புகழ்ந்தார்.* அண்டை அயலில் வாழ்ந்தயாவரும் 65
ஆச்சரியமும் அச்சமும் கொண்டனர். அங்கு நடந்த
வற்றின் செய்தி யூதேயாவின் மலைநாடெங்கிலும் பர
விற்று.* அவற்றைக் கேள்விப்பட்டவர்கள் எல் 66
லோரும் தங்கள் மனதிலே அவற்றை வைத்துக்
கொண்டு. ''இந்தப் பிள்ளை எத்தகையவராவாரோ?
ஏனெனில் நிச்சயமாக ரப்புல்ஆலமீனின் கரம் இவர்
மேல் இருக்கிறது'' என்றனர்.*

ஸகரியாவின் துதிப்பாடல்

அப்பொழுது யஹ்யாவின் தகப்பனுகிய ஸகரியா, 67
ரூஹுல் குதுஸானவனுல் ஆட்கொள்ளப்பட்ட
வராய் கூறிய தீர்க்கதரிசனமாவது:* ''பனீஇஸ்ராயீ
லின் இறைவனுகிய ரப்புல்ஆலமீனைப் போற்றிப் 68
புகழுங்கள். ஏனெனில், அவன் தன் மக்களைத் தேடி
வந்து அவர்களை விடுவித்தான்.* தனது பரிசுத்த 69, 70
நபிமார்கள்மூலம் நெடுங்காலத்திற்கு முன் வாக்களித்த
படியே தனது அடியானுகிய தாவூது நபி (அலை) அவர்
களின் அரச வம்சத்திலே, நமக்காக வல்ல இரட்சகனை

அனுப்புகிருன்.* அவன் நம்முடைய எதிரிகளின்றும், 71
நம்மை வெறுக்கும் யாவரின் கைகளினின்றும் நம்மை
விடுவிப்பான்.* நம்முடைய மூதாதையருக்கு இரக்கம் 72, 73
காட்டினுன். இப்ருஹீம் நபி (அலை) அவர்களுக்கு
அளித்த வாக்குறுதியையும், பரிசுத்த, உடன்படிக்கை
யையும் நினைவு கூர்ந்தான். * நம்முடைய பகைவரின் 74
கைகளினின்று, நம்மை விடுவித்து அச்சமின்றி இறை
வனுக்குச் சேவை செய்ய நமக்குச் சிறப்புரிமையையும்
அளித்தான்.* நம்மைப் பரிசுத்தமும், தகுதியும் உள்ள 75
வர்களாக்கி, இறைவனின் முன்னிலையில் என்றென்றும்
நிற்கும்படி ஆயத்தம் செய்தான்.* பாலகனே! நீரோ 76
அல்லாஹுத ஆலாவின் நபி என்றழைக்கப்படுவீர்.*
ஏனெனில், நீர் ஆண்டவனின் வழியை ஆயத்தம் 77
செய்வீர். பாவங்களினின்று மன்னிப்புப் பெறுவதினுல்
வரும் இரட்சிப்பை எப்படிப் பெறலாம் என்பதை
இறைவனுடைய மக்களுக்கு அறிவிப்பீர். * இருளிலும், 78, 79
மரண நிழலிலும் இருப்போருக்கு ஒளியைக் கொடுக்க
வும், நம்மைச் சாந்தி வழியில் வழிநடத்தவும், நமது
இறைவனின் இரக்க மிகுதியினுல், விண்ணிலிருந்து
இரட்சகனுகிய விடிவெள்ளி நம்மேல் எழுந்தருளுவான்.''
என்ருர்.*

அப்பிள்ளையோ, ஆத்மீகத்திலும், உடலிலும் 80
நாளுக்குநாள் வலுவடைந்து வளர்ந்து வந்தார். அவர்
பனீ இஸ்ராயில் மக்களிடையே தமது ஊழியம் ஆரம்ப
மாகும் வரையும் தனிமையாகப் பாலைவனத்திலே
வசித்து வந்தார்.*

ஈஸாவின் பிறப்பு

2 அந்நாட்களில் அகுஸ்து என்னும் ரோமப் பேர
ரசன், நாடெங்கும் குடிசன மதிப்பீடு எடுக்கப்
படவேண்டும் என்று கட்டளை இட்டார்.* சீரியா நாட் 2
டில் குயிரினியு என்பவன் தேசாதிபதியாய் இருந்த
காலத்தில், இந்த முதலாம் குடிசன மதிப்பீடு
எடுக்கப்பட்டது.*

அனைவரும் தங்கள் பெயரைப் பதிவு செய்யும்படி, 3
தங்கள் முன்னேர்களின் சொந்த ஊருக்குப் போக
வேண்டியிருந்தது.* யூஸுபு, தாவூது நபி (அலை) அவர் 4

களின் வம்சத்தைச் சேர்ந்தவர். எனவே, தாவூது நபி
(அலை) அவர்களின் ஊராகிய யூதேயாவிலுள்ள பெத்ல
கேமுக்குத் தமது பெயரைப் பதிவு செய்வதற்காகச்
சென்றார்.* அவர் தமக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டி 5
ருந்த மர்யம் (அலை) அவர்களையும் அழைத்துச் சென்றார்.
அப்பொழுது அவள் கருவுற்றிருந்தாள்.*

அவ்விடத்தில் அவர்கள் தங்கியிருக்கையில் அவ 6
ளுக்குப் பிரசவவேளை வந்தது.* அவள் தன்தலைப் 7
பேறாக ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அவள் குழந்
தையைத் துணியில் சுற்றித் தொழுவத்தின் முன்ன
ணையில் கிடத்தினாள். ஏனெனில், தங்குவிடுதியில் அவர்
களுக்கு இடங்கிடைக்கவில்லை.*

மேய்ப்பரும் மலக்குகளும்

அன்றிரவு, கிராமத்துக்கு வெளியே இருந்த 8
வயல் வெளியில், சில மேய்ப்பர் தம் மந்தையைக் காத்
துக்கொண்டிருந்தனர்.* திடீரென, அவர்கள் மத்தியில் 9
ஒரு மலக்கு தோன்றினார். அப்பிரதேசம் முழுவதும்
ரப்புல்ஆலமீனின் மாட்சிமையினால் நிரம்பிப் பிரகா
சித்தது. அவர்கள் மிகவும் அஞ்சினார்கள்.* ஆனால் 10
மலக்கு அவர்களிடம், ''பயப்படவேண்டாம்! இதோ!
நான் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும், ஒப்பற்ற நல்மா
ராயமான வஹீயைக் கொண்டுவந்திருக்கிறேன். இது
எல்லா மக்களுக்கும் உரியது.* தாவூதின் நகரிலே 11
இன்று உங்களுக்கு இரட்சகன் பிறந்திருக்கிறான். அவனே
மஸீஹ் எனும் ரப்புல்ஆலமீன்.* குழந்தையைத் 12
துணியிற் சுற்றி தொழுவத்தின் முன்னணையில்
கிடத்தியிருப்பதை நீங்கள் காண்பீர்கள். இதுவே,
உங்களுக்கு அடையாளம்'' என்றார்.*

அதே நேரத்தில் திடீரென வானசேனை கூட்ட 13
மாக அம்மலக்குடனே தோன்றி, ஒன்று சேர்ந்து
இறைவனை போற்றிப்புகழ்ந்தனர்.* ''உயர் விண்ணிலே 14
இறைவனுக்கு மாட்சிமை, உலகில் அவனை ஏற்றுக்
கொண்ட அவனுக்குப் பிரியமான மனிதரிடையே
சமாதானம், மனிதர் மேலே அவனுக்குப் பிரியம்'' என்று
இறைவனைப் புகழ்ந்தனர்.*

அம்மலக்கு அவர்களைவிட்டு இறைவனிடம் 15
திரும்பியபின், மேய்ப்பர்கள் ஒருவரையொருவர்
பார்த்து, ''வாருங்கள்! நாம் பெத்லகேம் ஊருக்குச்
சென்று ரப்புல் ஆலமீன் நமக்கு அறிவித்த இவ்வதிசய
சம்பவத்தைக் காண்போம்'' என்றனர்.* அவர்கள் 16
அக்கிராமத்திற்கு விரைந்து சென்று, அங்கு மர்யம்(அலை)
அவர்களையும் யூஸுஃபையும் தொழுவத்தின் முன்னிலை
யில் கிடத்திய குழந்தையையும் கண்டார்கள்.* நடந் 17
தவற்றையும், மலக்கு அப்பாலகனைப் பற்றித் தங்
களுக்கு அறிவித்ததெல்லாவற்றையும் எல்லாருக்கும்
அவர்கள் கூறினார்கள்.* மேய்ப்பர்கள் கூறியவற் 18
றைக் கேட்ட யாவரும் வியப்புற்றனர்.* மர்யம் 19
(அலை) அவர்களோ இவை எல்லாவற்றையும் தம்
நினைவில்வைத்திருந்து அடிக்கடி அவற்றைப் பற்றிச்
சிந்தித்து வந்தாள்.*

பின்பு மேய்ப்பர்கள் மலக்கு தங்களுக்குத் 20
தரிசனமளித்ததற்காகவும், அம்மலக்கு கூறியவாறே
குழந்தையைக் கண்டதற்காகவும், இறைவனைப் புகழ்ந்து
போற்றியவாறு தங்கள் மந்தையிடம் திரும்பிச்
சென்றனர்.* குழந்தை பிறந்த எட்டாம் நாள், 21
'கத்னு' செய்தார்கள், குழந்தை தாயின் வயிற்றில்
உற்பவிப்பதற்கு முன்பு, மலக்கு கொடுத்த 'ஈஸா'
என்ற பெயரைச் சூட்டினார்கள்.*

குழந்தையை பைத்துல்முகத்தஸுஃக்கு எடுத்துச் செல்லல்

மூஸா நபி (அலை) அவர்களின் ஷரீஅத் சட்டத் 22
தின்படி குழந்தை பிறந்தபின் தாய் அனுசரிக்கவேண்டிய
சுத்திகரிப்பு நாட்கள் கழிந்தன. அதன்பின் மர்யம் (அலை)
அவர்களின் சுத்திகரிப்புக் காணிக்கையைச் செலுத்து
வதற்காகவும், குழந்தையை ரப்புல்ஆலமீனுக்கு ஒப்ப
டைப்பதற்காகவும், குழந்தை ஈஸாவுடன் பைத்துல்
முகத்தஸுஃக்கு அவர்கள் சென்றார்கள்.* ஏனெனில், ஒரு 23
பெண்ணின் தலைப்பேறு ஆண்குழந்தையாயிருப்பின், ரப்
புல்ஆலமீனுக்கு உரியதென ஒப்படைக்கப்பட வேண்
டும் என்று இறைவன் ஷரீஅத்தில் கூறியுள்ளான்.* அவ் 24
வேளையில், '' ஒருசோடி காட்டுப்புறாக்களையோ, இரு
புறாக் குஞ்சுககளையோ காணிக்கையாகச் செலுத்த

வேண்டும்'' என்று ஷரீஅத்தில் சொல்லியிருக்கிற வாறு அவற்றைச் சுத்திகரிப்புக் காணிக்கையாக எடுத்துச் சென்றனர்.*

அன்று ஜெருசலத்தில் வசிக்கும் சிமியோன் 25
எனும் பெயர் கொண்ட ஒருவர் இருந்தார். அவர் நேர்
மையும், இறைவனில் பற்றும் உள்ளவராயிருந்தார்.
ரூஹுல் குதுஸானவனுல் ஆட்கொள்ளப்பட்டவரா
யும் இருந்தார். பனீஇஸ்ராயீல் மக்களுக்கு வாக்
களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்து அவர் காத்தி
ருந்தார்.* எனெனில், ரப்புல் ஆலமீனின் மஸீஹ் 26
என்பவனைக் காணுமுன் சிமியோன் இறப்பதில்லை
என்று ரூஹுல் குதுஸானவன் அவருக்கு வெளிப்படுத்தி
இருந்தான்.* அன்று பைத்துல் முகத்தஸக்குப் 27
போகும்படி ரூஹுல் குதுஸானவனுல் தூண்டப்
பட்டார். அதனுல் அவர் அங்கு சென்ருர். எனவே,
ரப்புல் ஆலமீனின் கட்டளையை நிறைவேற்றும்படி
மர்யம் (அலை) அவர்களும், யூஸுபும் குழந்தை ஈஸாவைக்
கொண்டுவந்தபோது, சிமியோன் அங்கிருந்தார்.
சிமியோன், பிள்ளையைக் கைகளில் தூக்கியவாறு 28
இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்.*

அவர், ''யாராப்பீ! இப்பொழுது நான் மனநிறை 29–31
வுடன் இம்மையை விட்டு மறுமையை அடையலாம்.
ஏனெனில், நீ எனக்கு வாக்களித்தபடியே நான் அவ
னைக் கண்டேன். நீ உலகிற்கு அருளிய இரட்சகனை
என் கண்கள் கண்டன.* உலகோர் யாவர் மேலும் 32
பிரகாசிக்கிற ஒளியாகவும், உனது மக்களாகிய பனீ
இஸ்ராயீலரின் மாட்சிமையாகவும் அவன் விளங்கு
வான்'' என்ருர்.* குழந்தை ஈஸாவைக் குறித்துச் 33
சிமியோன் கூறியவற்றைக் கேட்ட யூஸுபும், அவ
னுடைய தாய் மர்யம் (அலை) அவர்களும் அங்கே
வியப்புமேலிடமலைத்து நின்றனர்* சிமியோன் அவர் 34 35
களை ஆசிர்வதித்த பின்பு, குழந்தையின் தாயாகிய
மர்யம் (அலை) அவர்களிடம், ''இதோ! இக்குழந்தை
யைப் பனீஇஸ்ராயீல் மக்களில் அநேகர் ஏற்க
மறுப்பர். அவர்கள் அழிவுக்குள் விழுவதற்கும், பலர்
(அவனுல்) இரட்சிக்கப்படுவதனுல் மகிழ்ச்சி அடை
வதற்கும் இறை அருளின் அடையாளமாய் இக்குழந்தை
இருக்கும். எனினும் உம் உள்ளத்தையும் ஒரு வாள்

ஊடுருவிப் பாயும். இதனால், பலருடைய இருதய சிந்தனைகள் வெளியாக்கப்படும்'' என்றார்.*

ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் 36, 37
மகளாகிய ஹன்னா என்னும் தீர்க்கதரிசனம் கூறும் பெண் அங்கு இருந்தாள். அவள் மணமுடித்து ஏழு வருடங்கள் கணவனோடு வாழ்ந்தபின் விதவையானவள். அவள் எண்பத்து நான்கு வயதானவளாயிருந்தாள். அவள் பைத்துல் முகத்தஸை விட்டு ஒரு பொழுதும் எங்கும் போகாது, நோன்பு பிடித்தும், துஆ செய்தும், இறைவனை இரவு பகல் வழிபட்டு
வந்தாள்.* சிமியோன், மர்யம் (அலை) அவர்களுடன் 38
பேசிக்கொண்டிருந்த வேளை, அவளும் அங்கு வந்து இறைவனைப் புகழத் தொடங்கினாள். ஜெரூசலத்தில் இரட்சகனின் வருகைக்காக எதிர்ப்பார்த்திருந்த யாவரிடமும், ''மஸீஹ் வந்துவிட்டான்'' என எடுத்து உரைத்தாள்.*

நாசரேத்துக்குத் திரும்புதல்

இறைவனின் ஷரீஅத்தின்படி எல்லாவற்றையும் 39
ஈஸாவின் பெற்றோர் நிறைவேற்றியபின்பு, கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத்
திரும்பிச் சென்றார்கள்.* அங்கு குழந்தை ஈஸா, 40
வலிமையும், திடகாத்திரமும் உள்ள பிள்ளையாக வளர்ந்தான். அவனுடைய ஞானம் வயதுக்கு மேலானதாகக் காணப்பட்டது. இறைவன் அவன்மேல் தன் ரஹ்மத்தையும், பரக்கத்தையும் அளவிடாது அருளினான்.*

பைத்துல் முகத்தஸில் ஈஸா

வருடந்தோறும் ஈஸாவின் பெற்றோர் ஈதுல் 41, 42
பஸ்கு திருநாளுக்காக ஜெரூஸலத்துக்குப் போவது வழக்கம். ஈஸாவுக்குப் பன்னிரண்டு வயதாயிருக்கையில் இதற்காகத் தன் பெற்றோருடன் சென்றான்.*
கொண்டாட்டங்கள் முடிந்தபின்னர், அவர்கள் எல் 43
லோரும் நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். ஆனால், ஈஸாவோ ஜெரூஸலத்திலேயே தங்கிவிட்டான். இதை அவனுடைய பெற்றோர் அறியவில்லை.* அவன்
மற்ற யாத்திரிகர்கள் மத்தியில், சிநேகிதருடனே, 44

உற்றார் உறவினருடனே இருப்பான் என்று அவர்
கள் நினைத்தனர். அவர்கள் ஒரு நாட்பிரயாணத்தின்
பின்னர், அவனைக் காணாததால் தேடத் தொடங்கினார்
கள்.* அவர்கள் அவனை எங்கு தேடியும் காணாதபடி 45
யால், தேடியவாறே ஜெரூஸலத்துக்குத் திரும்பிச்
சென்றார்கள்.*

மூன்று நாட்களின் பின்னர், அவர்கள் அவனை 46, 47
பைத்துல் முகத்தஸில் கண்டனர். அங்கே அவன்,
உஸ்தாதுமார்கள், புக்கஹாக்கள் மத்தியில் உட்கார்ந்து
பல ஆழ்ந்த கருத்துள்ளவற்றையிட்டு அவர்களுடன்
கலந்துரையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய
அறிவுத் திறனையும், அவனளித்த விடைகளையும் கேட்ட
அனைவரும் வியப்பு மேலிடத் திகைத்தனர்.* அவன் 48
அங்கிருந்த நிலையைக் கண்ட பெற்றோருக்கு தங்கள்
கண்களையே நம்ப முடியவில்லை. அவர்கள் அதிக வியப்
புற்றார்கள். அவனது தாய் அவனிடம், ''மகனே! எங்
களுக்கு நீ ஏன் இப்படிச் செய்தாய்? உன் தகப்பனும்,
நானும் மிகுந்த கவலையுடன் எங்கும் தேடி, உன்னைக்
காணாது வருந்தினோமே!'' என்றாள்.* அதற்கு ஈஸா, 49
''நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவின்
வீடாகிய இந்த பைத்துல் முகத்தஸில் இருப்பேன் என்
பதை நீங்கள் அறியீர்களா?'' என்று கேட்டான்.*
ஆனால், அவன் சொன்ன கருத்தை அவர்கள் புரிந்து 50
கொள்ளவில்லை.*

அதன் பின்பு, அவன் அவர்களுடன் நாசரேத்துக் 51
குச் திரும்பிச் சென்று, அவர்களுக்குக் கீழப்படிவுள்ள
பிள்ளையாக வளர்ந்தான். ஆனால் ஈஸாவுடைய தாயாகிய
மர்யம் (அலை) இவற்றைத் தன் உள்ளத்தில் இருத்தி
வைத்துக்கொண்டாள்.* இப்படியே ஈஸா வளர 52
வளர ஞானத்தில் முதிர்ந்தும், இறைவனுக்கும் மனி
தருக்கும் பிரியமுள்ளவன் ஆனான்.*

யஹ்யா (அலை) அவர்களின் அறிவிப்பு

3 ரோமப் பேரரசன் திபேரியுவின் ஆட்சியின்
பதினைந்தாம் வருடம், ஸகரியாவின் மகன் யஹ்யா
(அலை) பாலைநிலத்தில் வசித்துக்கொண்டிருந்தார்.
அப்பொழுது, அவருக்கு இறைவனின் வஹீ வந்தது.

அந்நாட்களில் பிலாத் என்பவர் யூதேயாவின் தேசாதிபதியாகவும், ஏரோது கலிலேயாவில் சிற்றரசனும், அவன் சகோதரன் பிலிப்பு. இத்துரேயா, திராகொனித்து நாடுகளில் சிற்றரசனும், லிசானியா, அபிலேனேயுவில் சிற்றரசனும் இருந்தார்கள்.* அந்நாட் 2
களில் அன்னவும், காய்பாவும் யூதமத பிரதம தலைமை உலமாக்களாயும் இருந்தனர்.* அப்பொழுது, 3
யஹ்யா, (அலை) ஜோர்தான் நதியின் இருமருங்கிலும் உள்ள இடங்களுக்குச் சென்று, மனந்திரும்பும்படி பிரசங்கித்தார். அவர் மக்களைப் பாவங்களிலிருந்து விலகி, மனந்திருந்தி இறைவனிடம் திரும்பியதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று அவர்களுக்குப் போதித்தார்.*

யஹ்யா (அலை) அவர்களைக் குறித்து ஏஷஃயா 4–6
(அலை) எழுதியதாவது: தரிசான பாலைவனத்தில் கூக்குரலிடுகிறவனின் தொனியானது, ரப்புல்ஆலமீனுக்கு வழியை ஆயத்தம் செய்யுங்கள்; அவனுக்கென்று பாதையை விசாலமாக்குங்கள்; பள்ளங்கள் எல்லாம் நிரப்பப்படும், மலைகள், குன்றுகள் சமமாக்கப்படும்; கோணலானவை நேராக்கப்படும்; கரடுமுரடானவை அழுத்தந் திருத்தமாக்கப்படும். அப்பொழுது மனுக்குலமெல்லாம் இறைவனிடமிருந்து அனுப்பப்பட்ட இரட்சகனைக் காண்பார்கள்.'*

யஹ்யா (அலை) அவர்கள் தம்மிடம் ஞானஸ் 7
நானம் பெறும்படி வந்த மக்களுக்குப் போதித்ததாவது: ''விரியன் பாம்புக் குட்டிகளே! வரவிருக்கும் கோப தண்டனையாகிய நரக வேதனையிலிருந்து தப்புவிக்க உங்களுக்கு வழிகூறியவன் யார்? உண்மையாய் இறைவனிடம் திரும்பாமல், இதிலிருந்து தப்புவதற்கு வழி தேடுகிறீர்கள்; அதற்காகவே ஞானஸ்நானம் பெற விரும்புகிறீர்கள்.* நீங்கள், உண்மையாகவே மனம் 8
திரும்பியிருந்தால் முதலில் நீங்கள் போய் உங்கள் வாழ்க்கையினலே அதை நிருபியுங்கள். நீங்கள் இப்ருஹீம் நபி (அலை) அவர்களின் சந்ததியினராய் இருப்பதால் இதிலிருந்து தப்பலாம் என்று நினைக்க வேண்டாம். இது போதாது! இந்தக் கற்களிலிருந்து இப்ருஹீம் (அலை) அவர்களின் சந்ததியை உண்டாக்க இறைவனல் முடியும்.* இதோ! அவனின் நியாயத் தீர்ப்பு 9

என்னும் கோடரி மரங்களின் வேரில் வைக்கப்பட்டுள்ளது. நற்கனி கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயிலே போடப்படும்.''*

இதைக்கேட்ட மக்கள், ''நாங்கள் என்ன செய்ய 10
வேண்டும் என்று விரும்புகிறீர்?'' என்று கேட்டார்கள்.*
அதற்கு அவர், ''இரண்டு உடைகளை வைத்திருப்பவன், 11
உடையில்லாதவனுக்கு ஒன்றைக் கொடுக்க வேண்டும். தேவைக்கதிகமான உணவு உள்ளவனும் பசியாயிருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும்'' என்றார்.*

ஒழுக்கங் கெட்டவர்கள் என்றும், ஊழல்களுக் 12
குப் பேர் போனவர்களென்றும் கூறப்படும் வரிவசூலிப்பவர்கள் யஹ்யா (அலை) அவர்களிடம் வந்து, ''ஸெய்யிதே! நாம் நமது பாவச் செயல்களிலிருந்து விலகிவிட்டோம் என்பதை நிரூபிக்க என்ன செய்யவேண்டும்''
என்று கேட்டனர்.* அதற்கு அவர், ''நீங்கள் நேர் 13
மையுள்ளவர்களாய் இருப்பதை நிரூபிக்க ரோமப் பேரரசு விதித்துள்ள வரியிலும் அதிகமான தொகையை
வாங்காதீர்கள்'' என்றார்.* சில போர்வீரரும் 14
அவரிடம் வந்து, ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டனர். அதற்கு யஹ்யா (அலை) அவர்கள், ''நீங்கள் பயமுறுத்தி, வன்முறையில் பணம் பறிக்க வேண்டாம். பொய்க்குற்றம் சாட்ட வேண்டாம். உங்களுக்குக் கிடைக்கும் ஊதியமே போதுமென்று மனத்திருப்தியுடன் வாழுங்கள்'' என்றார்.*

எல்லோரும் மஸீஹ் விரைவில் வருவான் என 15
எதிர்பார்த்துக் கொண்டிருந்தபடியால், யஹ்யா (அலை) அவர்கள் மஸீஹ் ஆக இருக்கலாமோவென அவர்கள்
சிந்தித்தனர்.* அவர்களின் உள்ளத்தில் எழுந்த கேள் 16
விக்கு விடையளிக்கும் வகையில் அவர்களிடம், யஹ்யா (அலை) அவர்கள், ''நான் உங்களுக்கு நீரால் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆனால், என்னிலும் வல்லவன் ஒருவன் விரைவில் வருகிறான். உண்மையில் நான் அவனுடைய அடிமையாய் இருப்பதற்கோ, பாதஅணிகளைத் தொடுவதற்கோ அருகதையற்றவன். அவன் ரூஹுல் குதுஸானவனினாலும், அக்கினியினாலும் உங்
களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பான்.* அவன் கையில் 17
தூற்றுக்கூடை இருக்கிறது. அவன் தனது களத்தைத் துப்புரவாக்கித் தானியத்தைப் பதரிலிருந்து பிரித்

தெடுத்துக் களஞ்சியத்தில் சேர்ப்பான். பதரையோ நித்திய தீயில் சுட்டெரிப்பான்'' என்றார்.*

அவர் மக்களுக்கு வஹீயை அறிவிக்கையில், இதைப் போன்ற வேறு பல அறிவுரைகளையும் எடுத்துக் கூறினார்.* 18

ஈஸாவின் ஞானஸ்நானம்

இவ்வாறு மக்களெல்லோரும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிருந்தனர். ஒருநாள் ஈஸாவும் யஹ்யா (அலை) அவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றான். அவ்வேளை அவன் துஆச் செய்துகொண்டிருக்கையில் வானம் திறந்தது. ரூஹுல் குதுஸானவன் புறுவின் வடிவில் இறங்கி அவன் மேல் தங்கினான். ''நீயே என் அன்பார்ந்த குமாரன். நான் உன்னில் மகிழ்ச்சியடைகிறேன்'' என்ற குரலொலி வானத்திலிருந்து கேட்டது. 19 — 22

கலிலேயாவின் தேசாதிபதியாகிய ஏரோது, தன் சகோதரனின் மனைவி ஏரோதியாளை மணம் செய்ததற்கும், அவன்செய்த வேறுபல பிழைகளுக்கும் யஹ்யா (அலை) அவனைப் பகிரங்கமாகக் கண்டனம் செய்தார். எனவே ஏரோது, யஹ்யா (அலை) அவர்களைச் சிறையில் அடைத்தார். ஏரோது, தாம் செய்த கொடுமை போதாதென்று, இதனையும் தம் பாவங்களுடன் சேர்த்துக்கொண்டார்.*

ஈஸா தன்னுடைய ஊழியத்தைத் தொடங்கிய போது, ஏறக்குறைய முப்பது வயதுடையவனாய் இருந்தான்.* 23

ஈஸாவின் வம்ச வரலாறு

மக்கள் ஈஸாவை யூஸுபின் மகன் என்று நினைத்தனர். அந்த 24 — 38

யூஸுபின் தகப்பன் ஹேலேய்
ஹேலேயின் தகப்பன் மத்தாத்
மத்தாத்தின் தகப்பன் லெவேய்
லெவேயின் தகப்பன் மெல்கேய்
மெல்கேயின் தகப்பன் யன்னாய்
யன்னாயின் தகப்பன் யூஸுபு

யூஸுபின் தகப்பன் மத்ததியு
மத்ததியுவின் தகப்பன் அமோஸ்
அமோஸின் தகப்பன் நகூம்
நகூமின் தகப்பன் எஸ்லேய்
எஸ்லேயின் தகப்பன் நங்காய்
நங்காயின் தகப்பன் மஆத்
மஆத்தின் தகப்பன் மத்ததியு
மத்ததியுவின் தகப்பன் செமெயின்
செமெயினின் தகப்பன் யோஸேஃ
யோஸேகின் தகப்பன் யோடா
யோடாவின் தகப்பன் யோஹன்னன்
யோஹன்னனின் தகப்பன் றேஸா
றேஸாவின் தகப்பன் ஸொறுபாபெல்
ஸொறுபாபேலின் தகப்பன் ஸலதியேல்
ஸலதியேலின் தகப்பன் நேறிய்
நேறியின் தகப்பன் மெல்கேய்
மெல்கேயின் தகப்பன் அட்டி
அட்டியின் தகப்பன் கோஸாம்
கோஸாமின் தகப்பன் எல்மாதாம்
எல்மாதாமின் தகப்பன் ஏர்
ஏரின் தகப்பன் ஜெஹோஷ்வா
ஜெஹோஷ்வாவின் தகப்பன் எலியேஸர்
எலியேஸரின் தகப்பன் யோரீம்
யோரீமின் தகப்பன் மத்தாத்
மத்தாத்தின் தகப்பன் லெவேய்
லெவேயின் தகப்பன் சுமெஓன்
சுமெஓனின் தகப்பன் யூதா
யூதாவின் தகப்பன் யூஸுபு
யூஸுபுவின் தகப்பன் யோனம்
யோனமின் தகப்பன் எலியாக்கீம்
எலியாக்கீமின் தகப்பன் மெலேயா
மெலேயாவின் தகப்பன் மென்ன
மென்னவின் தகப்பன் மத்தாதா
மத்தாதாவின் தகப்பன் நாத்தான்
நாத்தானின் தகப்பன் தாவூது (அலை)
தாவூதுவின் தகப்பன் ஈஸாய்
ஈஸாயின் தகப்பன் ஓபேத்
ஓபேதின் தகப்பன் போவாஸ்
போவாஸின் தகப்பன் ஸல்மோன்
ஸல்மோனின் தகப்பன் நகஸோன்

நகஸோனின் தகப்பன் அம்மினதாபு
அம்மினதாபுவின் தகப்பன் அட்மீன்
அட்மீனின் தகப்பன் ஆர்னி
ஆர்னியின் தகப்பன் எஸ்ரோன்
எஸ்ரோனின் தகப்பன் பெரெஸ்
பெரெஸின் தகப்பன் யூதா
யூதாவின் தகப்பன் யஃகூபு (அலை)
யஃகூபுவின் தகப்பன் இஸ்ஹாக் (அலை)
இஸ்ஹாக்கின் தகப்பன் இப்ருஹீம் (அலை)
இப்ருஹீமின் தகப்பன் தேரா
தேராவின் தகப்பன் நாகோர்
நாகோரின் தகப்பன் ஸேருக்
ஸேருக்கின் தகப்பன் ரெகூ
ரெகூவின் தகப்பன் பேலேக்
பேலேக்கின் தகப்பன் ஏபெர்
ஏபெரின் தகப்பன் ஷேலா
ஷேலாவ்ன் தகப்பன் காயினுன்
காயினுனின் தகப்பன் அர்பகஸாத்
அர்பகஸாதின் தகப்பன் ஸேம்
ஸேமின் தகப்பன் நூஹ் (அலை)
நூஹின் தகப்பன் லாமெக்கு
லாமெக்கின் தகப்பன் மெத்துஸலா
மெத்துஸலாவின் தகப்பன் அஃநோஃ (இத்ரீஸ் அலை)
அஃநோகின் தகப்பன் யாரேத்து
யாரேத்துவின் தகப்பன் மகலாலெயேல்
மகலாலேயேலின் தகப்பன் காயினுன்
காயினுனின் தகப்பன் ஏனேஸ்
ஏனேஸின் தகப்பன் சேத்
சேத்தின் தகப்பன் ஆதம் (அலை)
ஆதம் இறைவனால் உண்டாக்கப்பட்டவர்.*

ஈஸா சோதிக்கப்படுதல்

4 ஈஸா ரூஹுல் குதுஸானவனால் ஆட்கொள்ளப்
பட்டவனாய் ஜோர்தானிலிருந்து திரும்பிய வேளை,
ரூஹானவனாலே வழிநடத்தப்பட்டு யூதேயாவின் தரி
சான பாலைவனத்திற்குச் சென்றான்.* அவன் நாற்பது 2
நாட்கள் சைத்தானால் சோதிக்கப்பட்டான். அவன்
அந்நாட்களில் ஒன்றும் உட்கொள்ளவில்லை. எனவே,
அவனுக்குப் பசியுண்டாயிற்று.* அப்பொழுது சைத்தான் 3

அவனிடம், ''நீ இறைவனின் குமாரனாகில், இந்தக் கல்லை
ரொட்டியாக மாறும்படி சொல்'' என்றான்.* ஆனால் 4
ஈஸாவோ, ''மனிதன் உயிர்வாழ்வது ரொட்டியினால்
(உணவு) மட்டுமன்று. (இறைவனுடைய ஒவ்வொரு
வார்த்தையினாலும் உயிர்வாழ்வான்) என்று வேதாக
மத்தில் எழுதியிருக்கிறதே!'' என்றான்.* அதன்பின் 5
சைத்தான் அவனை உயர்ந்த மலைக்குமேல் கொண்டு
போய், உலக வல்லரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்
பொழுதில் அவனுக்குக் காட்டினான்.* ''வல்லமையும், 6
மாட்சிமையும் உடைய இந்தப் பேரரசுகள் யாவும்
என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றை யாருக்
குக் கொடுக்க விரும்புகிறேனோ, அவனுக்குக் கொடுக்க
என்னால் இயலும்.* நீ என்னைத் தொழுதுகொண்டால் 7
இவை யாவும் உன்னுடையவை ஆகும்'' என்று சொன்
னான்.* அதற்கு ஈஸா, ''உன் இறைவனாகிய ரப்புல் 8
ஆலமீனை தொழுது, அவன் ஒருவனுக்கே சேவை செய்
வாயாக என்று வேதவாக்கியங்களில் எழுதியிருக்கிறதே!''
என்றான்.*

பின்பு சைத்தான் அவனை ஜெருஸலத்துக்குக் 9
கொண்டுபோய் பைத்துல் முகத்தஸின் உச்சியில் நிறுத்தி,
''நீ இறைவனின் குமாரனாகில், இங்கிருந்து கீழே குதி.*
ஏனெனில், 'உன்னைக் காப்பாற்றும்படி தன்னுடைய 10
மலக்குகளுக்கு இறைவன் கட்டளையிடுவான்' என்றும்,*
'உனது கால்கள் கற்களில் மோதாதபடி அவர்கள் உன் 11
னைத் தங்கள் கைகளில் தாங்கிக்கொள்வார்கள்' என்றும்
வேதவாக்கியங்களில் எழுதியுள்ளதே!'' என்றான்.
அதற்கு ஈஸா, ''உன் இறைவனாகிய ரப்புல் ஆலமீனைப் 12
பரிசோதிக்காதே என்றும் எழுதியிருக்கிறதே!'' என்றான்.*
இவ்வாறு சைத்தான் அவனை எல்லாவிதத்திலும் 13
சோதித்து முடித்தபின்னர், குறித்த சமயம் வரும் வரை
அவனை விட்டுத் தற்காலிகமாய் விலகினான்.*

கலிலேயாவில் ஊழியம்

பின்பு ஈஸா, ரூஹுல் குதுஸானவனின் வல்லமை 14, 15
நிறைந்தவனாய்க் கலிலேயாவுக்குத் திரும்பிச் சென்றான்.
அங்கு அவன் யூத பைத்துல்லாஹ்களில் போதித்து வந்

தான். அவன் புகழ் அந்தப் பிரதேசமெங்கிலும் பிரபல மாகியது.*

நாசரேத்தில் ஈஸா புறக்கணிக்கப்படுதல்

பின்பு அவன் தான் வளர்ந்த ஊராகிய நாசரேத் 16
துக்குச் சென்றான். அங்கு அவன் தனது வழக்கப்படி
யூத ஓய்வுநாளன்று பைத்துல்லாஹ்வுக்குச் சென்றான்.
அப்பொழுது, வேதவாக்கியங்களை வாசிக்கும்படி எழுந்து
நின்றான்.* ஏஷஃயா நபி எழுதிய சுருள் ஒன்று 17
அவனிடம் கொடுக்கப்பட்டது. அதை அவன் விரித்த
போது பின்வரும் பாகத்தைக் கண்டு வாசித்தான்.*
''ரப்புல்ஆலமீனுடைய ரூஹானவன் என்மேல் இருக் 18, 19
கிறான். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்க என்னை
விசேடமாக நியமித்துள்ளான். மனமுடைந்தவர்
களுக்கு ஆறுதலும், சிறைப்பட்டோருக்கு விடுதலையும்,
குருடருக்குப் பார்வையும், ஒடுக்கப்பட்டோருக்கு விடு
தலையும் கிடைக்கும். இறைவன் தன்னிடம் வரும்
ஒவ்வொருவருக்கும் ஆசி அருளவும், ரப்புல்ஆலமீனின்
அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவன் என்னை
அனுப்பியுள்ளான்.''*

ஈஸா இதை வாசித்தபின்பு அச்சுருளைச் சுருட்டிப் 20
பணியாளரிடம் கொடுத்துவிட்டுத் தன் ஆசனத்தில்
அமர்ந்தான். பைத்துல்லாஹ்வில் இருந்தவர்களின்
பார்வை அவனை விட்டகலாது அவன்மேல் நிலைத்து
நின்றது.* அவன் அவர்களிடம், ''நீங்கள் வாசிக்கக் 21
கேட்ட இந்த வேதவாக்கியம் இன்று நிறைவேறிற்று''
என்றான்.*

அங்கிருந்தோரனைவரும் அவனைப் பாராட்டினார் 22
கள். அவன் வாயிலிருந்து எழுந்த அருள்மொழிகளைக்
கேட்டு வியப்புற்றனர். சிலர், ''இதை எப்படி நம்பு
வது? இவன் யூஸுஃபின் மகன் அல்லா?'' என்றனர்.*
அப்பொழுது அவன் அவர்களிடம், '' 'வைத்தியனே! 23
உன்னை நீயே குணப்படுத்திக்கொள்' என்ற பழ
மொழியை ஒருவேளை நீங்கள் என்னிடம் கூறலாம்.
அதாவது, 'நீ கப்பர்நகூமில் செய்ததாக நாம் கேள்
விப்பட்ட அரியசெயல்களை உனது சொந்த ஊராகிய
இங்கும் செய்' என்றும் நீங்கள் கூறலாம்.* எந்த நபி 24
யும் தன் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை

என்று மிக உறுதியாக உங்களுக்குக் கூறுகிறேன்.*
இல்யாஸ் நபியின் காலத்தில் மூன்றரை ஆண்டுகள் 25
மழை பெய்யாததால் பூமி வரண்டு நாடெங்கும் பஞ்
சமுண்டாயிற்று. அப்பொழுது பனீஇஸ்ராயீல் மக்
களுள் அநேக விதவைகளிருந்தனர்.* ஆயினும் 26
சீதோன் நாட்டிலுள்ள ஸரெப்தா என்னும் ஊரிலி
ருந்து வந்த விதவைக்கு உதவும்படியே அவளிடம் இல்
யாஸ் நபி அனுப்பப்பட்டார்.* யூதரிடையே பல குஷ்ட 27
ரோகிகள் இருந்தும், அல்யஸஃ நபி (அலை) அவர்கள்
நாகமானையல்லாமல் வேறொருவனையும் குணமாக்க
வில்லையே'' என்றான்.* இவற்றைக் கேட்டபோது பைத் 28
துல்லாஹ்வில் இருந்தவர்கள் அனைவரும் வெகுண்
டெழுந்தனர்.* அவனை ஊருக்கு வெளியே தள்ளிச் 29
சென்று, அவ்வூர் அமைந்துள்ள மலையின் செங்குத்தான
இடத்துக்குக் கொண்டுபோய், அவனைக் கீழே தள்ளி
விட எத்தனித்தனர்.* ஆனால், ஈஸாவோ அக்கூட்டத் 30
தினரிடையே நடந்துசென்று, அவ்விடம் விட்டகன்றான்.*

பேய் பிடித்தவனைக் குணப்படுத்தல்

அதன்பின்பு ஈஸா கலிலேயாவிலுள்ள கப்பர்நகூ 31
மிற்குத் திரும்பிச் சென்றான். அங்கு ஒவ்வொரு யூத
ஓய்வுநாளிலும் யூத பைத்துல்லாஹ்களில் போதனை
செய்தான்.* இங்கும் மக்கள் அவன் கூறியவற்றைக் 32
கேட்டு வியந்தனர். ஏனெனில் ஈஸா மற்றோரின் கூற்
றுகளை எடுத்துக் கூறுகின்றவர்களைப் போலல்லாது,
சத்தியத்தை அறிந்தவனாய் அதிகாரத்துடன் பேசினான்.*

இவ்வாறு ஈஸா ஒருநாள் பைத்துல்லாஹ்வில் 33
போதித்துக்கொண்டிருக்கையில், பேய்பிடித்த மனித
னொருவன் அவனைப் பார்த்துக் கூக்குரலிட்டான்.*
''நாசரேத்தூர் ஈஸாவே! நீ போய்விடு நீ எங்களை 34
அழிக்கவா இங்கு வந்தாய்? நீ யார் என்பதை அறிவேன்.
நீ அல்-குத்தூஸ்'' என்றான்.* ஈஸா அவன் பேசு 35
வதை இடைமறித்துப் பேயை அதட்டினான். ''நீ
ஒன்றும் பேசாதே! இவனை விட்டு வெளியே போ''
என்றான். அப்பொழுது அப்பேய் அம்மனிதனைக் கீழே
விழுத்தியும் ஒரு தீங்கும் செய்யாமல் அவனைவிட்டு
அகன்றுபோயிற்று. மக்கள் கூட்டம் அதைப்பார்த்துக்
கொண்டிருந்தது.* அவர்கள் வியப்பு மேலிட, ''இம் 36

மனிதனின் வார்த்தைகள் எத்தகையதோ? அதிகார
மும், வல்லமையும் உடையனவாய் இருக்கின்றனவே!
பேய்கள் கூட அவற்றிற்குக் கட்டுப்படுகின்றனவே!''
என ஒருவரோடொருவர் பேசிக்கொண்டனர்.*
ஈஸாவின் செயல்களையிட்டு அவன் புகழ் காட்டுத் 37
தீயெனச் சுற்றுப்புறமெங்கிலும் பரவிற்று.*

ஈஸா அநேகரைக் குணப்படுத்தல்

அன்று ஈஸா பைத்துல்லாஹ்விலிருந்து சீமோ 38
னின் வீட்டுக்குச் சென்றான். அங்கு சீமோனின் மாமி
கடுங்காய்ச்சலில் வருந்திக் கொண்டிருந்தாள். அவ
ளைச் சுகப்படுத்தும்படி எல்லோரும் அவனை வேண்டிக்
கொண்டனர்.* ஈஸா அவள் படுக்கையருகில் குனிந்து 39
நின்று, காய்ச்சல் அவளை விட்டுப் போகும்படி அதட்
டினான். உடனே காய்ச்சல் அவளை விட்டு நீங்கவும்,
அவள்எழுந்து அவர்களுக்கு விருந்துபசாரம் செய்தாள்.*

அன்று சூரியன் மறையும் வேளை, அக்கிராமத்திலுள் 40
ளவர்கள் எல்லோரும் தங்கள் வீடுகளிலுள்ள நோயாளிகள்
அனைவரையும், அவர்கள் எவ்வகை நோயுள்ளவர்களாய்
இருந்தாலும் ஈஸாவிடம் கொண்டு வந்தனர். அவன்
அவர்கள் ஒவ்வொருவரையும் தனது கைகளால் தொட்
டுக் குணமாக்கினான்.* அவர்களில் சிலர் பேய்பிடித்த 41
வர்களாயிருந்தனர். ஈஸா கட்டளையிட பேய்கள், ''நீ
இறைவனின் குமாரன்'' என்று சத்தமிட்டவாறு வெளி
யேறின. ஆனால் அவனே அல்-மஸீஹ் என்பதைப் பேய்
கள் அறிந்திருந்தபடியால், அவன் அவற்றைப் பேசா
திருக்கும்படி அதட்டினான்.*

அடுத்தநாள், அதிகாலையில் ஈஸா எழுந்து தனி 42
மையிலிருக்கும்படி பாலைவனத்திற்குப் புறப்பட்டுச்
சென்றான். ஆனால் மக்கள் அவனை எங்கும் தேடிக் கடை
சியில் கண்டபோது, அவர்களைவிட்டு எங்கும் போகாது
கப்பர்நகூமிலேயே தங்கும்படி கெஞ்சிக் கேட்டனர்.*
ஆனால் அவனோ, ''இறைவனின் இராட்சியத்தின் நற் 43
செய்தியை நான் மற்ற ஊர்களிலும் பிரசங்கிக்க வேண்
டும். இதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்''
என்றான்.* எனவே, ஈஸா தொடர்ந்து பிரயாணம் 44
செய்து, யூதேயா நாட்டிலுள்ள பைத்துல்லாஹ்கள்
எங்கும் சென்று நற்செய்தியை அறிவித்து வந்தான்.*

ஈஸா நால்வரை அழைத்தல்

5 ஒருநாள் ஈஸா கெனேசரத்துக் கடலருகே போதித்
துக்கொண்டிருக்கையில், இறைவனின் வார்த்தை
யைக் கேட்கும்படி மக்கள் திரண்டு வந்தனர்.* கட 2
லோரத்தில் இரண்டு படகுகள் வெறுமையாயிருப்பதை
யும் அவற்றைவிட்டு இறங்கிய மீனவர் தங்கள் வலைகளை
நீரில் அலசிக்கொண்டிருப்பதையும் ஈஸா கண்டான்.*
அவன் அவற்றில் ஒன்றில் ஏறியபின்பு, படகின் சொந் 3
தக்காரனுகிய சீமோனிடம், படகைக் கடலில் சிறிது
தள்ளும்படி கேட்டான், ஈஸா அதில் அமர்ந்து மக்
களுக்குப் போதித்தான்.*

அவன் போதித்து முடிந்தபின்பு சீமோனிடம், "நீர் 4
இப்பொழுது உமது படகை ஆழமான இடத்திற்குச்
செலுத்தி, உமது வலையை அங்கே வீசும். நீர் அதிக
மீன் பிடிப்பீர்" என்றுன்.* அதற்குச் சீமோன், "ஸெய் 5
யிதே! இரவு முழுவதும் நாங்கள் எவ்வளவு முயற்சி
செய்தும் ஒன்றும் அகப்படவில்லை; ஆயினும் நீங்கள்
விரும்புவதால் திரும்பவும் வலையை வீசுவோம்" என்றுர்.*
அப்படியே அவர்கள் வலையை வீசியதும் ஏராளமான 6
மீன்கள் அகப்பட்டன. அதனுல் அவர்களுடைய வலை
கிழியத் தொடங்கியது.* மற்றப்படகிலிருந்த தங்கள் 7
சகாக்களை வந்து உதவி செய்யும்படி சைகை காட்டினுர்
கள். அவர்கள் வந்து இரு படகுகளையும் மீன்களால்
நிரப்பினுர்கள். அப்போது இரு படகுகளும் பாரமிகு
தியால் அமிழ்ந்து போகும் நிலையை அடைந்தன.*
அதைக் கண்ட சீமோன் பேதுரு, ஈஸாவின் முன் 8
ஸுஜூது செய்து, அவனிடம், "ரப்பே! நீ எங்களைவிட்
டுப் போய்விடு; நான் உன்னுடன் இருப்பதற்கு தகுதி
யற்ற பாவியான மனிதன்" என்றுர்.* அவர்கள் பிடித்த 9
பெருந்தொகையான மீன்களைக் கண்டு அவரும், அவ
ரோடிருந்த மற்றவர்களும் அதிக திகிலடைந்தனர்.
அதனுலேயே பேதுரு இவ்வாறு கூறினுர்.* சீமோனின் 10
சகாக்களான செபதேயுவின் பிள்ளைகள் யஃகூபும்,
யோவானும் வியப்பிலாழ்ந்தனர். ஈஸா சீமோனிடம்,
"பயப்படாதே! நீர் மீன்பிடிப்பதைப்போல இன்று
முதல் மனிதர்களை இறைவனிடம் சேர்ப்பீர்" என்
றுர்.* அவர்கள் தங்கள் படகுகளைக் கரையில் சேர்த்த 11
பின்னர், எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவனைப்
பின்பற்றி, அவனுடன் சென்றுர்கள்.*

குஷ்டரோகியை ஈஸா குணப்படுத்தல்

பின்பு ஒருநாள் ஈஸா ஒரு கிராமத்திற்குச் 12
சென்றபோது, குஷ்டரோகத்தினுல் அதிகம் பாதிக்கப்
பட்ட ஒருவர் அங்கு இருந்தார். ஈஸாவை அவர்
கண்டபோது, அவர்முன் ஸஜ்தாச் செய்து, ''ரப்பே!
உனக்கு மனமுண்டானுல் என்னைச் சுத்தமாக்கிக் குண
மாக்க உன்னுல் முடியும்'' என்று மன்றுடினுர்.* ஈஸா 13
தன்னுடைய கையை நீட்டி அந்த மனிதனைத் தொட்டு,
''எனக்கு மனமுண்டு. நீர் குணமடைவீராக'' என்றுன்.
உடனே குஷ்டரோகம் அவரைவிட்டு நீங்கிற்று.* பின்பு 14
ஈஸா அவரிடம், ''நீங்கள் ஒருவரிடமும் இதைப்பற்றிச்
சொல்ல வேண்டாம். உடனே நேராக யூத ஆலிமிடம்
சென்று, உங்களை அவருக்குக் காட்டுங்கள். மூஸா நபி
ஷரீஅத்தில் குறிப்பிட்டவாறு, குஷ்டரோகி ஒருவர்
தாம் குணமடைந்ததற்கு அத்தாட்சியாகச் செலுத்த
வேண்டிய காணிக்கையைச் செலுத்துங்கள்'' என அவ
ருக்கு அறிவுரை கூறி அனுப்பினுன்.* எனினும், ஈஸா 15
வினுடைய வல்லமையைக் குறித்த செய்தி மக்களிடையே
காட்டுத் தீயெனப் பரவியது. ஈஸாவுடைய போத
னையைக் கேட்பதற்கும், தங்கள் நோய்களிலிருந்து குண
மடையவும் மக்கள் அவனிடம் திரண்டு வந்தனர்.
ஆனுல் ஈஸாவோ அடிக்கடி ஆள்நடமாட்டமில்லாத 16
பாலைவனத்திற்குத் தன்னந்தனியே சென்று துஆச்
செய்வான்.*

திமிர்வாதமுள்ளவன் குணமடைதல்

ஒருநாள் ஈஸா போதித்துக் கொண்டிருக்கையில் 17
அங்கு பரிசேயர்களும், உஸ்தாதுமார்களும், புக்கஹாக்
களும் வந்திருந்தனர். அவர்கள் கலிலேயா, யூதேயா
நாடுகளிலுள்ள எல்லா ஊர்களிலிருந்தும், ஜெரூசலம்
நகரத்திலிருந்தும் வந்தவர்கள். நோயாளிகளைக் குண
மாக்க ரப்புல்ஆலமீனின் வல்லமை ஈஸாவிடம் காணப்
பட்டது.*

அப்பொழுது, திமிர்வாதமுள்ள ஒரு மனிதனைச் 18, 19
சிலர் அவன் படுக்கையுடன் அங்கு சுமந்து வந்தனர்.
அங்கு கூட்டம் மிகுதியாயிருந்ததால் அம்மனிதனை
உள்ளே கொண்டுபோய் ஈஸாவின் முன் வைக்க முடியாமல்
இருந்தது. அவர்கள் முயற்சி செய்தும் முடியாமற்

போகவே, வீட்டின் கூரைக்குத் தூக்கிச் சென்றனர். பின்
ஈஸா இருந்த இடத்திற்கு மேலிருந்த கூரையைப் பிரித்து,
மக்கள் மத்தியிலிருந்த அவன் முன் அந்நோயாளி
யைப் பாயுடன் இறக்கினுர்கள்.* அவர்களுடைய விசு 20
வாசத்தைக் கண்ட ஈஸா, அந்த நோயாளியிடம் ''என்
மகனே! உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன''
என்றுன்.* இதைக் கேட்ட பரிசேயரும், புக்கஹாக் 21
களும், உஸ்தாதுமார்களும் தங்களுக்குள்ளே, ''இது
இறைவனைத் தூஷிப்பது ஆகும். இவன் தன்னை
யாரென்று நினைத்துக்கொண்டு இப்படிக் கூறுகிறுன்?
இறைவன் ஒருவனையன்றிப் பாவங்களை மன்னிப்பவன்
யார்?'' எனப் பேசிக்கொண்டனர்.* ஈஸா அவர்கள் 22
உள்ளத்தின் சிந்தனைகளை அறிந்து அவர்களுக்குப்
பதிலளித்தான்.* ''உங்கள் உள்ளங்களில் நீங்கள் 23,24
இவ்வாறு சிந்திப்பதேன்? உலகிலே பாவங்களை மன்னிப்
பதற்கு மனித குமாரனுகிய எனக்கு அதிகாரமுண்டு.
எனினும், உன்பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்ட
தென்று சொல்வதோ, எழுந்து நட என்று சொல்வதோ,
எது எளிது? எவரும், எதையும் வாயால் சொல்ல
எளிதானது. எனவே, இவனைக் குணப்படுத்துவதனுல்
எனக்குள்ள அதிகாரத்தை நிரூபித்துக் காட்டுகிறேன்''
என்றுன். பின்பு திமிர்வாதமுள்ளவனிடம், ''நீர்
குணமடைந்து விட்டீர். உமது படுக்கையை எடுத்துக்
கொண்டு உமது வீட்டிற்குப் போம் என்று நான்
உமக்குச் சொல்லுகிறேன்'' என்றுன்.* எல்லோரும் 25
பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே அம்மனிதன்
உடனடியாக எழுந்து, படுக்கையைச் சுருட்டி எடுத்துக்
கொண்டு இறைவனைப் புகழ்ந்தவாறு தன் வீட்டிற்குப்
போனுர்.* அங்கிருந்தோரனைவரும் பயத்தினுல் 26
ஆட்கொள்ளப்பட்டவர்களாய் இறைவனைப் போற்றிப்
புகழ்ந்தனர். ''இன்று நாம் புதுமையானவற்றைக்
கண்டோம்'' என்று திரும்பத் திரும்பக் கூறினர்.*

லேவியைச் சீடனுக அழைத்தல்

இதன் பின்பு ஈஸா அந்தப் பட்டணத்திலிருந்து 27
புறப்பட்டுப் போகையில், வரி வசூலித்துக் கொண்டி
ருந்த லேவி என்னும் மனிதனைக் கண்டான். ''என்னைப்
பின்பற்றி வா'' என்று ஈஸா அவனை அழைத்தான்.*
உடனே அம்மனிதன் எல்லாவற்றையும் விட்டு விட்டு, 28

எழுந்து ஈஸாவைப் பின்பற்றி அவனுடன் சென்றூர்.*
லேவி ஈஸாவுக்காக விரைவில் ஒரு பெரிய விருந்தை 29
ஆயத்தம் செய்தார். அவனுடன் வேலே செய்த வரி
வசூலிப்போர் பலரையும் விருந்துக்கு அழைத்திருந்தார்.*
ஆனல் அவர்கள் எல்லோரும் ஒன்ருயிருந்து விருந்துண் 30
பதைக் கண்ட பரிசேயரும், அப்பிரிவைச் சேர்ந்த உஸ்
தாதுமார்களும், புக்கஹாக்களும் ஈஸா பேர்போன
பாவிகளுடன் சமமாக உட்கார்ந்து விருந்துண்பதைக்
குறித்து அவனுடைய முதீரீன்களிடம் குறை கூறினர்.* 31
அதற்கு ஈஸா, ''நோயற்றவர்களுக்கு அல்ல,
நோயாளிகளுக்கே வைத்தியன் தேவை.* தங்களை 32
ஸாலிஹீன்கள் என்று நினைப்பவர்களுக்காக அல்ல,
பாவிகளையே பாவத்திலிருந்து மனந்திரும்புமாறு
அழைப்பதற்கு வந்தேன்'' என்றுன்.*

நோன்பைப் பற்றிய கேள்வி

மேலும் அவர்கள் கூறிய அடுத்த குற்றச்சாட்டு: 33
''ஈஸாவின் முரீதீன்கள் நோன்பிருப்பதற்குப் பதிலாக
விருந்துண்கிறுர்கள். யஹ்யா (அலை) அவர்களின் முரீ
தீன்களோ அடிக்கடி நோன்பிருப்பதுடன் துஆச் செய்
தும்வருகிறுர்கள். பரிசேயரின் முரீதீன்களும் அவ்வாறே
செய்கிறுர்கள். ஆனல் உம்முடைய முரீதீன்களோ
விருந்துண்டு களிக்கிறுர்கள்'' என்றனர்.* அதற்கு 34
ஈஸா, ''மகிழ்ச்சியாய் இருப்பவர்கள் நோன்பிருப்பார்
களா? நிக்காஹ் மஜ்லிஸில் மணமகனுடன் களிப்பு
உற்றிருக்கும் விருந்தினர் பட்டினியாய் இருப்பார்களா?*
ஆனல், மணமகன் கொலே செய்யப்படும் வேளை 35
வரும் அந்நாட்களில் அவர்கள் நோன்பிருப்பார்கள்''
என்றுன்.*

அதன் பின்பு ஈஸா அவர்களுக்கு ஒரு உவமையையும் 36
கூறினன்: ''பழைய உடைக்கு ஒட்டுப் போட்டுத் தைப்ப
தற்கு ஒருவனும் புதிய உடையிலிருந்து துண்டொன்
றைக் கிழித்தெடுக்க மாட்டான். அப்படிச் செய்வ
தால் அவன் புதிய உடையை நாசமாக்குவதுடன், புதிய
துண்டும் பழைய உடையில் பொருந்தாது. உடை
மேலும் கிழிந்துவிடும்.* ஒருவனும் புதிய திராட்சை 37
ரசத்தைப் பழைய தோற்குடுவைகளில் ஊற்றி வைக்க
மாட்டான். ஏனெனில், புதிய திராட்சைரசம் பழைய
தோலைக் கிழித்துவிடும். இரசமும் சிந்தி வீணுகிவிடும்.*

புதிய திராட்சைரசத்தைப் புதிய தோற்குடுவைகளில் 38
ஊற்றிவைக்க வேண்டும். ஆனால், பழைய திராட்சை
ரசத்தைக் குடித்த எவனும் புதியதை விரும்புவதில்லை.
பழையதே சிறந்தது என்று கூறுவான்'' என்றான்.*

முரீதீன்கள் ஒய்வுநாளில் கதிர் கொய்தல்

6 ஒரு சந்தர்ப்பத்தில், யூதருடைய ஒய்வுநாளன்று
ஈஸாவும் அவனுடைய முரீதீன்களும் வயல்வழியே
போய்க்கொண்டிருந்தனர். அப்போது, முரீதீன்கள்
வயலில் விளைந்த கதிர்களைக் கொய்து, தங்கள் கைகளி
னால் கசக்கி உமியைப் போக்கி உண்டனர்.* அதைக் 2
கண்ட சில பரிசேயர், அவர்களிடம், ''இது செய்யத்த
காதது. உமது முரீதீன்கள் தானிய அறுவடை செய்கிறார்
களே! யூத ஒய்வுநாளில் வேலை செய்வது யூத ஷரீஅத்
திற்கு விரோதமானதல்லவா?'' என்றார்கள்.* இதைக் 3
கேட்ட ஈஸா, ''நீங்கள் வேதவாக்கியங்களைப் படிப்ப
தில்லையா? தாவூது நபியும் அவரோடிருந்தவர்களும்
பசியாயிருந்தபோது செய்ததை நீங்கள் வாசித்ததில்
லையா?* அவர் இறைவனின் வீடாகிய பைத்துல்லாஹ் 4
விற்குள் சென்று, யூத ஆலிமைத்தவிர வேறொருவரும்
உண்ணக்கூடாத பரிசுத்த ரொட்டியை எடுத்துச் சாப்
பிட்டார். அத்துடன் தன்னோடு இருந்தவர்களுக்கும்
கொடுத்தார்'' என்றான்.* மேலும் ஈஸா, ''மனித 5
குமாரனாகிய நான் ஒய்வுநாளுக்கும் ரப்பாக இருக்கி
றேன்'' என்றான்.*

சூம்பின கையுடையவன் குணமடைதல்

வேறோர் யூத ஒய்வு நாளில் ஈஸா பைத்துல்லாஹ் 6
வில் போதித்துக் கொண்டிருந்தான். அங்கு வலது கை
சூம்பின மனிதனொருவர் இருந்தார்.* பரிசேயரும், 7
உஸ்தாதுமாரும், புக்கஹாக்களும் ஈஸா அன்று அம்
மனிதனைக் குணப்படுத்துவானா என்று மிகக் கவனமாக
அவதானித்துக் கொண்டிருந்தனர். ஏனெனில் அன்று
யூத ஒய்வுநாளாயிருந்தபடியால் அவனில் குற்றம் சுமத்
தலாம் என்று ஆவலாய்க் காத்திருந்தனர்.* ஈஸாவோ, 8
அவர்கள் சிந்தனைகளை நன்கு அறிந்திருந்தும்,
அவன் சூம்பின கையுடைய அந்த மனிதனிடம், ''நீர்
இங்கு வந்து, எல்லோரும் பார்க்கக்கூடியதாக இங்கே

நில்லும்'' என்றான். அவரும் வந்து நின்றார்.* அப் 9
பொழுது ஈஸா, பரிசேயரையும் உஸ்தாதுமாரையும்,
புக்கஹூக்களையும் பார்த்து, ''நான் உங்களிடம் ஒரு
கேள்வி கேட்க விரும்புகிறேன்! ஓய்வுநாளில் நன்மை
செய்வதோ, தீமை செய்வதோ சரியானது? உயிரைக்
காப்பாற்றுவதோ, அழிப்பதோ நல்லது?'' என்று கேட்
டான்.* பின்பு சுற்றிலும் இருந்தவர்களை ஒவ்வொரு 10
வராய்ப் பார்த்துவிட்டு ஈஸா அந்த மனிதனிடம்,
''உமது கையை நீட்டும்'' என்றான். அம்மனிதன் அப்படி
நீட்டும்பொழுதே, அது மறுகையைப் போலாயிற்று.*
இதைக் கண்ட அவர்கள் கோபாவேசம் கொண்டவர் 11
களாய், ஈஸாவைக் கொலை செய்யத் திட்டமிடத்
தொடங்கினர்.*

பன்னிருவரை ஈஸா அழைத்தல்

ஈஸா இதற்குப் பின்பு ஒருநாள் துஆச் செய் 12
வதற்காக மலைக்குச் சென்று, இரவு முழுவதும் இறை
வனிடம் வேண்டுதல் செய்தான்.* பொழுது புலர்ந்த 13
போது, ஈஸா தன் முரீதீன்களை அழைத்தான். அவர்
களில் பன்னிருவரை, எப்பொழுதும் தன்னுடன் ஒன்று
யிருக்கும்பொருட்டுத் தெரிந்துகொண்டு, அவர்களைத்
தன் ரஸூல்மார்களாக நியமித்தான்.* அவர்களுடைய 14-16
பெயர்களாவன :– பேதுரு என்று மறுபெயர் இட்ட
சீமோன், அவனுடைய சகோதரன் அந்திரேயா, யஃகூபு,
யோவான், பிலிப்பு, பர்த்தலொமேயு, மத்தேயு,
தோமா, அல்பேயுவின் மகன் யஃகூபு, தீவிரவாதியான
சீமோன், (சீலோத்து அரசியற் கட்சியைச் சேர்ந்த
வர்) யூதா (யஃகூபின் சகோதரன்), யூதாஸ் இஸ்காரி
யோத்து (பின்பு ஈஸாவுக்குத் துரோகம் செய்தவர்).*

அநேகருக்குக் குணமளித்தல்

பின்பு ஈஸா பன்னிருவருடன் கூட மலைச்சாரலில் 17, 18
இறங்கிவந்து சமதரையான ஓரிடத்தில் நின்றான்.
அவனைப் பின்பற்றும் முரீதீன்கள் பலரும் அவர்களைச்
சுற்றிலும் நின்றார்கள். பெருந்தொகையான மக்கள்
அவனுடைய போதனையைக் கேட்பதற்கும், பல வியா
திகளில் இருந்து விடுதலையடைவதற்கும் அங்கு வந்து
கூடினார்கள். இவர்கள் யூதேயா முழுவதிலிருந்தும்,

ஜெருசலத்திலிருந்தும், தீரு, சீதோன் கடற்கரையோ
ரங்களில் இருந்தும் வந்திருந்தனர். பல நஜீஸான
ரூஹ்களால் பாதிக்கப்பட்டோருக்கு ஈஸா விடுதலை
அளித்தான்.* அவர்கள் ஈஸாவைத் தொட்டபோது 19
அவனிடமிருந்து குணமளிக்கும் வல்லமை வெளி
யேறி அவர்களைக் குணமாக்கியது. எனவே அவனைத்
தொடுவதற்கு எல்லோரும் முயற்சி செய்தனர்.*

பரக்கத்துப் பெற்றவர் யார்

பின்பு ஈஸா தனது முரீதீன்களைப் பார்த்துக் 20
கூறியதாவது :– ''ஏழைகளாகிய நீங்கள் பரக்கத்துப்
பெற்றவர்கள். ஏனெனில், இறைவனது இராட்சியம்
உங்களுக்குரியது.*

இப்பொழுது பசியோடிருக்கும் நீங்கள் பரக்கத்துப் 21
பெற்றவர்கள். ஏனெனில் நீங்கள் திருப்தியடை
வீர்கள். இப்பொழுது அழுது புலம்புகிற நீங்கள் பரக்
கத்துப் பெற்றவர்கள். ஏனெனில் நீங்கள் சிரித்து
மகிழும் காலம் வரும்.*

நீங்கள் மனிதகுமாரனுகிய என்னுடையவர்களா 22
யிருப்பதால், மனிதர் உங்களை வெறுத்தும், விலக்கி
வைத்து இழித்துரைத்தும், உங்கள் பெயருக்கு இழுக்கு
உண்டாக்கும்படி செய்தும் துன்புறுத்தும்போது நீங்கள்
பரக்கத்துப் பெற்றவர்களாய் இருப்பீர்கள்.* இவை 23
நிகழும்போது மகிழுங்கள். ஆம்! ஆடிஅகமகிழுங்கள்!
ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்காக மிகுதியான
பிரதிபலன் காத்திருக்கிறது. அவர்களின் முன்
னோர்களும் நபிமார்களுக்கு இவ்வாறு செய்தார்களே!''*

கேடு வருவது யாருக்கு

''செல்வந்தர்களே! உங்களுக்கு ஐயோ! கேடு 24
காத்திருக்கிறது. ஏனெனில், நீங்கள், இன்பங்களை இங்
கேயே அனுபவித்துவிட்டீர்கள்.*

இப்பொழுது நிறைவுள்ளவர்களாய் இருக்கிறவர் 25
களே! உங்களுக்கு ஐயோ! கேடு வரும். ஏனெனில்,
நீங்கள் பசியோடிருக்கும் காலம் வரும். இப்பொழுது
சிரித்து மகிழ்பவர்களே! உங்களுக்கு ஐயோ! கேடு

வரும். ஏனெனில், நீங்கள் இறுதியில் துயரப்பட்டு அழு
வீர்கள்.* எல்லா மனிதரும் உங்களைப் புகழ்ந்து பேசும் 26
போது, உங்களுக்கு ஐயோ! கேடு வரும். ஏனெனில்,
அவர்கள் முன்னோர்கள் பொய் நபிகளையும் எப்பொழு
தும் புகழ்ந்தார்களே!*

பகைவரிலும் அன்பாயிருங்கள்

கேளுங்கள்! எனக்குச் செவிசாய்க்கும் எல்லோ 27
ருக்கும் நான் சொல்கிறேன். பகைவரிடம் அன்பா
யிருங்கள். உங்களை வெறுக்கிறவர்களுக்கு நன்மை
செய்யுங்கள்.* உங்களைச் சபிக்கிறவர்களுக்குப் பரக் 28
கத்துக் கிடைக்கும்படி மன்றாடுங்கள். உங்களுக்கு
தீங்கு செய்கிறவர்களுக்கு இறைவனிடம் துஆச் செய்
யுங்கள்.*

உன்னை ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு 29
கன்னத்தையும் திருப்பிக்காட்டு. உன்மேலுடையைப்
பறித்தெடுப்பவனுக்கு உன் உள்ளுடையையும் கொடு.*
உன்னிடம் உள்ளதைக் கேட்கிறவனுக்கு அதைக் 30
கொடு. உன்னிடமிருந்து பொருட்களை ஒருவன் அப
கரித்தால் அதைத் திருப்பிக்கேட்க வேண்டுமென்று
கவலைப் படாதே!* பிறர் உங்களுக்கு என்ன செய்ய 31
வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவ்விதமே
பிறருக்கும் செய்யுங்கள்.* உங்களில் அன்பாயிருக் 32
கிறவர்களிடமே நீங்களும் அன்பாயிருந்தால் உங்களுக்
குக் கிடைக்கும் பலன் என்ன? இறைவனை அறியாத
பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே!* உங்களுக்கு 33
நன்மை செய்கிறவர்களுக்கே நீங்களும் நன்மை செய்
தால் உங்களுக்குக் கிடைக்கும் பலன் என்ன? பாவி
களும் அவ்வாறு செய்கிறார்களே!* திரும்பப் பெற்றுக் 34
கொள்ளக்கூடியவர்களுக்கு மாத்திரம் நீங்கள் கடன்
கொடுத்தால், அதனால் நீங்கள் பெறும் நன்மை யாது?
மிகக் கொடியவர்களும், தம்மைப் போன்றவர்களுக்
குக் கடன் கொடுத்துச் சரிக்குச்சரி திரும்பப் பெற்றுக்
கொள்கிறார்களே!*

ஆனால் நீங்களோ உங்கள் பகைவரில் அன்பாயி 35
ருங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள். அவர்கள்
திருப்பிக் கொடுக்கமாட்டார்களாயினும், அதையிட்டுக்
கவலைப்படாது கடன் கொடுங்கள். அப்பொழுது

உங்களுக்கு இறைவனிடமிருந்து மிகுதியான பிரதி பலன் கிடைக்கும். அப்பொழுது நீங்கள் உண்மையாய் அல்லாஹுதஆலாவின் பிள்ளைகளாய் இருப்பீர்கள். ஏனெனில் நன்றியற்றவர்களுக்கும், மிகக் கொடியவர்களுக்கும் இறைவன் இரக்கம் காட்டுகிறானே!*

உங்கள் பிதாவாகிய இறைவன் இரக்கமுள்ள 36
வனாயிருக்கிறதுபோல நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.*

பிறருக்குத் தீர்ப்பளித்தல்

*பிறரில் குற்றங்குறை காணவோ, குற்றத்தீர்ப்பு 37
வழங்கவோ வேண்டாம். ஏனெனில் உங்களுக்கும்,
அதேபோல் தீர்ப்பு வழங்கப்படும். மற்றவர்களைக்
கண்டனம் செய்யாதீர்கள்; அப்பொழுது நீங்களும்
கண்டனம் பெறமாட்டீர்கள். மன்னியுங்கள்; அப்
பொழுது இறைவன் உங்களை மன்னிப்பான்.* கொடுங் 38
கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்.
குலுக்கி, அமுக்கி, மேலும் நிரப்பி, நிறைந்து வழிந்து
கொட்டுமளவிற்கு, உங்கள் ஸதக்கா உங்களிடம்
திரும்பிவரும். நீங்கள் கொடுக்கும்போது அளக்கும் அள
வின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.''*

அதன்பின்பு ஈஸா உவமைகளின் மூலம் சில 39
உண்மைகளை விளக்கினான். ''குருடனைக் குருடன்
வழிநடத்த முடியுமா? அப்படியாயின் அவனும் குழியில்
விழுந்து, மற்றவனையும் குழியில் விழச்செய்யமாட்
டானா?* ஒரு சீடன் தன் குருவைவிட அதிகமாக 40
அறிந்திருப்பது எப்படி? அவன் நன்கு பயிற்சி பெற்று,
முற்றிலும் கற்றாலும், தன் குருவைப் போலவேதான்
இருப்பான்.* உங்கள் கண்ணிலே உள்ள மரக்குற்றி 41
யைக் (பெருங் குற்றங்கள்) கவனியாது, உங்கள் சகோ
தரனின் கண்ணிலுள்ள துரும்பைக் (சிறு பிழைகள்)
கவனிப்பதேன்?* 'சகோதரனே உங்கள் கண்ணிலுள்ள 42
துரும்பை எடுக்க உதவி செய்கிறேன்' என்று உங்கள்
சகோதரனிடம் நீங்கள் எவ்வாறு கூறமுடியும். உங்கள்
கண்களைப் பெரும் மரக்குற்றி மறைத்துக்கொண்டிருக்
கிறதே! வெளிவேடந்தரித்த போலிப் பக்தனே! முத
லில் உங்கள் கண்ணை மறைக்கும் மரக்குற்றியை எடுத்து

எறிந்துவிடுங்கள். பின்பு உங்கள் சகோதரனின் கண்
ணிலுள்ளதை எடுக்க உங்களுக்கு கண் தெளிவாகத்
தெரியும்.*

மரமும் கனியும்

''நல்ல மரம் கெட்ட கனியைக் கொடுப்பதில்லை. 43
கெட்டமரம் நற்கனியைக் கொடுப்பதுமில்லை.* ஒரு 44
கனியிலிருந்து அது என்ன மரம் என்பதை அறிந்து
கொள்ள முடியும். ஏனெனில் முட்செடியிலிருந்து அத்
திப்பழத்தைப் பறிப்பதில்லை. நெருஞ்சிச் செடியில்
திராட்சைப் பழத்தைப் பறிப்பதுமில்லை.* நல்லவன் 45
நற்களஞ்சியமாகிய தன் நல்மனதிலிருந்து நன்மை
யையே செய்கிறான். ஒருவனின் நெஞ்சில் நிறைந்து
உள்ளதே, அவன் வாயிலிருந்து வெளிவரும்.*

இருவகையான வீடுகள்

'நான் சொல்கிறபடி செய்யாத நீங்கள், என்னை 46
'யாரப்பு! யாரப்பு!' என அழைப்பதேன்?* என்னி 47,48
டம் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அதன்படி
நடக்கிற மனிதன் யாரைப்போலிருப்பான் என உங்
களுக்கு விளக்குகிறேன். ஆழத்தோண்டி, கற்பாறை
மேல் உறுதியாகக் கட்டிய அத்திவாரத்தில் தன் வீட்
டைக் கட்டியெழுப்பிய மனிதனுக்கு அவன் ஒத்திருப்
பான். பெருவெள்ளம் வந்து அவ் வீட்டின்மேல்
மோதினாலும், அது உறுதியாய் நிலைத்து நிற்கும்.* ஆனால் 49
என் வார்த்தைகளைக் கேட்டும். அதன்படி நடக்காத
வனோ, அத்திவாரம் இல்லாமல் மண்ணின்மேல் வீட்
டைக் கட்டியெழுப்பிய மனிதனுக்கு ஒத்திருப்பான்.
வெள்ளம் வந்து அந்த வீட்டின்மீது மோதியவுடனே
அது இடிந்து விழுந்து தரைமட்டமாகிப் பாழாகிவிடும்.''

ரோம அதிகாரியின் விசுவாசம்

7 ஈஸா தனது போதனையை மக்களுக்குக் கூறி
முடித்தபின் கப்பர்நகூமிற்குச் சென்றான்.*
அங்கே ராமப்படையொன்றின் நூறுபேருக்கு அதிகாரி 2
ஒருவன் இருந்தார். அவரது மிக நெருங்கிய வேலைக்காரன்
ஒருவன் நோயுற்று, இறக்கும் நிலையில் இருந்தார்.*

அவ்வதிகாரி ஈஸாவைப்பற்றிக் கேள்விப்பட்டார். 3
எனவே, தன் வேலைக்காரனைச் சுகமாக்கும்படி அவனை
அழைத்து வரும்படி மதிப்புக்குரிய யூத பெரியார்
களில் சிலரை அனுப்பினுர்.* அவர்கள் ஈஸாவிடம் 4
சென்று, அவனைத் தங்களுடன் வந்து, அவ்வதிகாரிக்கு
உதவிசெய்யும்படி மன்ருடினுர்கள். அவர்கள் அந்த,
அதிகாரியை மிகவும் புகழ்ந்து, ''இவர் உனது உதவி
யைப் பெறுவதற்கு தகுதியுள்ளவர்.* இவர் யூத மக் 5
களை நேசிக்கிருர். எங்களுக்காக ஒரு பைத்துல்லாஹ்
வைத் தன் சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்துள்
ளார்'' என்று சொன்னுர்கள்.*

ஈஸாவும் அவர்களின் அழைப்புக்கிணங்கி அவர் 6–8
களுடன் சென்ருன். ஆனுல் அவன் அவ்வீட்டிற்கருகில்
வந்தபோது அந்த அதிகாரி, ''ரப்பே! நீ என் வீட்டுக்கு
வரவேண்டுமென்று நான் உனக்குத் தொந்தரவு
கொடுக்க விரும்பவில்லை. ஏனெனில் நீ என் வீட்டுக்கு வரு
வதற்கு நான் தகுதியற்றவன். உன்னிடம் நான் வரு
வதற்கும் எனக்குத் தகுதியிருக்கிறதாகச் சொல்ல
வில்லை. நீ இருக்கும் இடத்திலிருந்தே ஒரு வார்த்தை
கூறினுல் போதும். என் வேலைக்காரன் சுகமடைவார்.
இதை நான் நன்கு அறிவேன். ஏனெனில், எனக்கு
மேலுள்ள அதிகாரிகளுக்கு நான் கட்டுப்பட்டவன். எனக்
குக்கீழ் உள்ளவர்கள்மேல் எனக்கு அதிகாரம் உண்டு,
நான் ஒருவனிடம் 'போ' என்ருல் போகிருன். 'வா'
என்ருல் வருகிருன். என் அடிமையிடம் 'இதைச் செய்'
என்ருல் அவன் செய்கிருன். 'சுகம் பெறுவாய்' என்று
நீ கூறினுலே போதும் என் வேலைக்காரன் சுகமடைவார்''
என்று ஈஸாவிடம் போய்ச் சொல்லும்படி தன் நண்ப
பரை அனுப்பினுர்.*

இவற்றைக் கேட்ட ஈஸா மிக வியந்து தனக்குப் 9
பின் வந்துகொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்து,
''பனீஇஸ்ராயேலரிடையே கூட நான் இந்த மனிதனு
டைய விசுவாசத்தைப்போல் கண்டதில்லை'' என்று
கூறினுன்.* நூறுபேருக்கு அதிகாரியின் வீட்டிற்கு 10
அவரால் அனுப்பப்பட்டவர்கள் திரும்பிச் சென்றனர்.
அப்போது அந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிற
தைக் கண்டார்கள்.*

விதவையின் மகனை உயிரோடு எழுப்புதல்

இதற்குப்பின்பு ஈஸா, நாயீன் என்னும் ஊருக் 11
குத் தன்னுடைய முரீதீன்களுடன் போனான். வழக்கம்
போல் திரளான மக்கள் அவனைப் பின்தொடர்ந்து
சென்றனர்.* அவ்வூர் வாயிலை நெருங்கியபோது, ஒரு 12
ஜனுஸா ஊர்வலம் அவ்வூரைவிட்டு வெளியே வந்து
கொண்டிருந்தது. இறந்த இளைஞன் ஒரு விதவையின்
ஒரே மகன். அவ்வூர் மக்களில் அநேகர் அவளுடன்
அழுது புலம்பியவாறு வந்துகொண்டிருந்தனர்.*
ரப்புல்ஆலமீன் அவளைப் பார்த்தபோது மனதுருகி 13
அவள்மேல் இரக்கங்கொண்டு அவ்விதவையிடம்,
''அழாதே!'' என்றான்.* பின்பு அவன், சந்தூக்கின் 14
அருகிற்சென்று, அதைத் தொட்டான். உடனே
அதைச் சுமந்துவந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது
ஈஸா, ''வாலிபனே! உயிர்பெற்று எழுந்திரும்'' என்
றான்.* உடனே மௌத்தானவர் எழுந்து, அங்கிருந் 15
தவர்களுடன் பேசத்தொடங்கினார். ஈஸா அவரை
அவருடைய தாயிடம் ஒப்படைத்தான்.* அக்கூட் 16
டத்தினர் பீதியடைந்தவர்களாய், ''நம்மிடையே
வல்லமையுள்ள நபி ஒருவர் தோன்றியுள்ளான். இறை
வனே தன்னுடைய மக்களை இரட்சிக்க அவர்களைத்
தேடி வந்துள்ளான்'' என்று இறைவனைப் புகழ்ந்து
போற்றினார்கள்.* அன்று ஈஸா செய்தவற்றைப்பற்றிய 17
செய்தி யூதேயாவின் மூலைமுடுக்குகளிலும், அதன் சுற்
றுப்புறம் முழுவதும் பரவியது.*

ஈஸாவும் யஹ்யா (அலை) அவர்களும்

யாஹ்யா (அலை) அவர்களுடைய முரீதீன்களும், 18
ஈஸா செய்த யாவற்றையும் கேள்விப்பட்டபோது,
அவற்றை யஹ்யா நபியிடம் கூறினார்கள்.* அப்பொ 19
ழுது யஹ்யா (அலை) அவர்கள் தன் முரீதீன்களுள்
இருவரை அழைத்து, ''நீங்கள் ஈஸாவிடம் போய்,
'நீ தான் மஸீஹா? அல்லது வேறொருவனுக்காக நாம்
காத்திருக்கவேண்டுமா?' என்று கேளுங்கள்'' என்று
சொல்லி அனுப்பினார்.* அவர்கள் ஈஸாவிடம் வந்து, 20
''மஸீஹ் நீ தானா? அல்லது நாம் வேறொருவனுக்காகக்
காத்திருக்க வேண்டுமா? இவ்வாறு கேட்கும்படி
யஹ்யா நபி எங்களை உன்னிடம் அனுப்பினார்'' என்றார்

கள்.* அவ்வேளையில் ஈஸா, பலதரப்பட்ட நோயாளி 21, 22
களுக்கு குணமளித்துக்கொண்டிருந்தான். முடவர்கள்,
குருடர்கள், மற்றும்பல கொடிய நோயினுல் வருந்து
பவர்கள், பொல்லாத ரூஹ்களினுல் துன்புற்றவர்கள்
யாவரும் குணமடைந்தார்கள். யஹ்யா (அலை) அவர்
களின் முரீதின்களின் கேள்விக்கு விடையாக ஈஸா,
''நீங்கள் போய் இப்போது கண்டவற்றையும் கேட்ட
வற்றையும் யஹ்யாவிடம் கூறுங்கள். குருடர்கள் காண்
கிருர்கள், முடவர்கள் நடக்கிருர்கள்; குஷ்டரோகி
கள் சுகமடைகிருர்கள். செவிடர்களின் காதுகள்
திறக்கப்படுகின்றன. மௌத்தானவர்கள் மீண்டும்
ஹயாத்தாகிருர்கள், வறியவர்களுக்கும் நற்செய்தி அறி
விக்கப்படுகிறது.* என்மேல் வைத்துள்ள விசுவாசத்தை 23
இழக்காதிருப்பவர் எவரோ அவர் பரக்கத்து பெற்
றவர் என்று கூறுங்கள்'' என்ருன்.*

அவர்கள் போனபின்பு, ஈஸா தன்னைச் சூழ்ந் 24
திருந்த திரளான மக்களுக்கு யஹ்யா (அலை) அவர்க
ளைப் பற்றிப் பின்வருமாறு கூறினுன்: ''நீங்கள்
யாரைப் பார்ப்பதற்கு யூதேயாவின் வரண்ட பாலைவனத்
துக்குச் சென்றீர்கள்? காற்றில் அசையும் நாணற்
புல் போன்றவரையா?* விலையுயர்ந்த உடையணிந்த 25
செல்வச்சீமானையா? யாரைக் கண்டீர்கள்? செல்வச்
சீமான்களை மாளிகையில்லல்லவா காணலாம்?* அப் 26
படியாயின் யாரைப் பார்க்கச் சென்றீர்கள்? ஒரு
நபியையா கண்டீர்கள்? இல்லை! ஒரு நபியை விட
மேலானவரையே கண்டீர்கள்.*

'இதோ! என் தூதனை உனக்கு முன்பாக 27
அனுப்புகிறேன். அவர் உனக்கு முன்னே
சென்று உன் வழியை ஆயத்தம்
செய்வார்'

என்ற வேதவாக்கியம் யஹ்யாவையே குறிக்கிறது.*
மனுக்குலம் முழுவதிலும் யஹ்யாவைவிட மேலானவர் 28
எவருமில்லை. எனினும் இறைவனுடைய இராட்சியத்தில்
சிறியவர் யஹ்யாவிலும் பெரியவர் என நான் உங்க
ளுக்குச் சொல்கிறேன்'' என்ருன்.*

யஹ்யா (அலை) அவர்களின் போதனையைக் 29
கேட்ட அனைவரும், வரிவசூலிப்பவரை ஒத்த மிகக்

கொடியவர்கள் கூட, இறைவனின் நீதியுள்ள திட்டத்தை
ஏற்றுக்கொண்டு யஹ்யா (அலை) அவர்களிடம்
ஞானஸ்நானம் பெற்றார்கள்.* ஆனால் பரிசேயரும், 30
மூஸா நபியின் ஷரீஅத்தைப் போதிப்பவர்களும் தங்
களுக்கென இறைவன் வகுத்த திட்டத்தை நிரா
கரித்து, யஹ்யா (அலை) அவர்களின் ஞானஸ்நானத்தை
ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.*

ஈஸா தொடர்ந்து, ''இப்பேற்பட்டவர்களைக் 31
குறித்து நான் எதைக் கூறுவேன்? இவர்களை நான்
எதற்கு ஒப்பிடுவேன்?* சந்தைவெளியில் விளையாடு 32
கின்ற பிள்ளைகள் ஒருவரையொருவர் கூப்பிட்டு,
'நாங்கள் குழல் ஊதினோம். நீங்கள் ஆடவில்லை.
ஒப்பாரி வைத்தோம். நீங்கள் எங்களுடன் அழவில்லை'
என்று குறைசொலும் பிள்ளைகளைப் போலிருக்கிறீர்
கள்.* ஏனெனில், யஹ்யா உண்ணாது இருப்பார், 33
அவர் ஒருபொழுதும் மதுபானம் குடித்ததில்லை. நீங்
கள் அவரைப் பேய்பிடித்தவர் என்கிறீர்கள்.* ஆனால், 34
மனிதகுமாரனாகிய நான் உணவு உண்கிறேன். திராட்சை
ரசம் அருந்துகிறேன். நீங்களோ என்னைப் போச
னப்பிரியன், குடிகாரன், வரிவசூலிப்பவர்களுக்கும்
பாவிகளுக்கும் நண்பன்' என்கிறீர்கள்.* ஆனாலும், 35
இறைவனது ஞானம் நியாயமானது என்பதை, அதை
ஏற்றுக்கொண்ட அனைவரும் ஒப்புக்கொள்வார்கள்''
என்றான்.*

பாவியான பெண்ணுக்கு மன்னிப்பளித்தல்

பரிசேயருள் ஒருவர் ஈஸாவை விருந்துக்கென்று 36
தன் வீட்டுக்கு அழைத்திருந்தார். ஈஸா அதை ஏற்றுக்
கொண்டு, பரிசேயனின் வீட்டுக்கு வந்து விருந்
துண்ண அவர்களுடன் அமர்ந்தான்.* அப்போது அவ் 37
வூரில் வசிக்கும் ஒரு விபச்சாரியான பெண், அந்தப் பரி
சேயனின் வீட்டில் ஈஸா இருக்கிறான் என்பதைக் கேள்
விப்பட்டாள். அவள், விலையேறப்பெற்ற பரிமளத்
தைலம் நிறைந்த படிகப்புட்டி ஒன்றைக் கொண்டு
வந்தாள்.* அவள் உள்ளே போய், ஈஸாவின் பின்னால் 38
அவன் பாதங்களண்டையில் முழங்காலில் நின்று அழுது
கொண்டே அவன் பாதங்களைத் தன் கண்ணீரால்
நனைத்து, தன் நீண்ட தலைமயிரால் துடைத்து, அவற்றை

முத்தம்செய்து, பரிமள னதலத்தைப் பூசினுள்.* 39
ஈஸாவை விருந்துக்கழைத்த பரிசேயன் நடந்தவற்றைக்
கண்டு, அப்பெண் யார் என்பதைக அறிந்ததால்
தனக்குள்ளே, ''ஈஸா உண்மையாகவே இறைவனுல்
அனுப்பப்பட்டவராய் இருந்தால் தன்னைத் தொடுகிற
பெண் யார் என்பதையும், அவள் எப்பேற்பட்டவள்
என்பதையும் அறிந்து இருப்பான். இவள் பாவி
அல்லவா? '' என்று நினைத்தார்.*

அப்பொழுது ஈஸா அப்பரிசேயனிடம் அவர் சிந் 40
தனைக்கு விடையாக, ''சீமோனே! நான் உமக்குச்
சொல்லவேண்டியதொன்று இருக்கிறது'' என்ருன்.
அதற்கு அவர், ''உஸ்தாதே! சொல்லும்'' என்ருர்.*

அப்பொழுது ஈஸா அவருக்குப் பின்வரும் கதை 41
யைக் கூறினுன்.

''ஒரு மனிதனிடம் இருவர் கடன் பெற்றிருந்தனர். 42
ஒருவர் ஐநூறு திஞரியும் (ஏறக்குறைய ஐநூறு நாட்
கூலி) மற்றவர் ஐம்பது திஞரியும் (ஏறக்குறைய ஐம்பது
நாட்கூலி) பெற்றிருந்தனர். ஆனுல் இருவருக்கும் கட
னைத் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. எனவே, கடன்
கொடுத்தவர் அவர்கள் இருவரையும் மன்னித்து, கட
னைத் திருப்பிக்கொடுக்க வேண்டியதில்லை என்று கூறி
விட்டார். இவர்களுள் எவன் கடன் கொடுத்தவரிடம்
மிகுந்த அன்புடையவனுயிருப்பான்?'' என்ருன்.* உடனே 43
சீமோன், ''பெருந்தொகையைக் கடனுகப்பெற்று,
மன்னிப்புப்பெற்றவர் என்று நினைக்கிறேன்'' என்ருர்.
அப்பொழுது ஈஸா, ''நீர் சரியான தீர்ப்பு அளித்தீர்''
என்ருன்.* பின்பு ஈஸா அப்பெண்ணின் பக்கம் திரும்பி, 44
சீமோனிடம், ''இங்கு முழங்கால்களில் நிற்கும் பெண்
ணைப் பாரும். நான் உமது வீட்டுக்கு வந்தபோது, நீர்
என் கால்களைக் கழுவுவதற்கு தண்ணீர் தரவில்லை.
ஆனுல் இவளோ, தன் கண்ணீரால் கழுவி, தன் தலை
மயிரால் துடைத்தாள்.* வழக்கப்படி ஒருவரை வர 45
வேற்க அளிக்கும் முத்தத்தை நீர் எனக்குக் கொடுக்க
வில்லை. இவளோ, நான் வந்ததிலிருந்து ஓயாமல்
திரும்பத்திரும்ப என் பாதங்களை முத்தமிட்டுக்
கொண்டிருக்கிருள்.* வழக்கப்படி, என் தலைக்கு 46
எண்ணெய் பூசி மரியாதை, செய்ய நீர் மறந்துவிட்டீர்.
ஆனுல் இவளோ, என் பாதங்களை கிடைத்தற்கரிய

தைலத்தினுல் நனைத்திருக்கிருள்,* எனவே, இவளின் 47
பாவங்கள் அதிகமாயினும் அவையெல்லாம் மன்னிக்
கப்பட்டுள்ளன. ஏனெனில், இவளின் பேரன்பு இவளின்
செயலில் வெளிப்பட்டுள்ளது. ஆனுல் எவருக்குச்
சிறிதளவு மன்னிக்கப்படுகிறதோ அவர் சிறிதளவு
அன்பு காட்டுவார் என நான் உங்களுக்குச் சொல்
கிறேன்'' என்ருன்.*

பின்பு ஈஸா அவளிடம், ''உமது பாவங்கள் 48
உமக்கு மன்னிக்கப்பட்டன'' என்ருன்.* அப்பொழுது 49
விருந்துண்டவர்கள், ''பாவங்களை மன்னிக்கிறதற்கு
இவர் யார்?'' எனத் தங்களுக்குள்ளே கூறிக்கொண்
டார்கள்.* ஈஸா அப்பெண்ணிடம், ''உமது விசுவாசம் 50
உம்மை இரட்சித்தது. நீர் சமாதானத்துடன் போவீ
ராக'' என்ருன்.*

பெண்களின் பணிவிடை

8 இதற்குப்பின்பு, ஈஸா தன் பன்னிரு முரீதீன்
களுடனும் கலிலேயாவின் கிராமங்கள், நகரங்
களெல்லாம் சென்று இறைவனின் இராட்சியத்தின்
வருகையைக்குறித்த நற்செய்தியை எடுத்துரைத்து
வந்தான்.* பொல்லாத ரூஹ்களின் தொல்லையிலி 2
ருந்தும், வேறுபல நோய்களிருந்தும் விடுவிக்கப்பட்ட
சில பெண்களும் ஈஸாவுடன் சென்ருர்கள். அவர்களு
டன் ஏழு பேய்களினின்று விடுவிக்கப்பட்ட மஜ்த
லிய்யா மரியாவும் இருந்தாள்.* (ஏரோது அரசனின் 3
மாளிகையின் உள்விவகார செயலாளனுன) கூசாவின்
மனைவி யோவன்னுவும், சூசன்னுவும், வேறுபல பெண்
களும் இருந்தார்கள். ஈஸாவினதும், அவன் முரீதீன்
களினதும் தேவைகள் யாவற்றையும் இவர்கள் தமது
சொந்தவருமானத்திலிருந்து நிறைவேற்றி வந்தார்கள்.*

விதைப்பவனின் உவமை

திரளான மக்கள், பற்பல ஊர்களிலிருந்து 4
ஈஸாவின் போதனைகளைக் கேட்பதற்கு வந்து கொண்
டிருந்தார்கள். இவ்வாறு வந்து கூடிய மக்களுக்கு ஒரு
நாள் ஈஸா கூறிய உவமையாவது :-*

''ஒரு விவசாயி தமது வயலில் விதைப்பதற்காகச் 5
சென்றார். அவர் விதைக்கும்போது, சில விதைகள்
பாதையில் விழுந்து மிதியுண்டன. பறவைகள் வந்து,
அவை கண்ணுக்குத் தெரியக்கூடியதாய் இருந்தமை
யால் பொறுக்கித் தின்றுவிட்டன.* வேறு சில விதை 6
கள் மண் ஆழமில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தன.
அவை முளைக்கத்தொடங்கியும், ஈரலிப்புப் பற்றாக்
குறையினால் வாடிவதங்கிக் கருகிப்போயின.* வேறு 7
சில விதைகள் முட்செடிகளிடையே விழுந்தன. விதை
முளைத்தபோது முட்செடிகளும் கூடவே வளர்ந்து
அவற்றை நெருக்கிப் போட்டன.* ஆனால் சில விதைகள் 8
வளமிக்க நிலத்தில் விழுந்தன. அவை வளர்ந்து
நூறுமடங்காகப் பலனைக் கொடுத்தன. கேட்டு உணரும்
காதுள்ளவர் கவனமாய்க் கேட்கட்டும்'' என்று
இவ்வுவமையைக் கூறி முடித்தான்.*

உவமையின் கருத்து

ஈஸாவின் முரீதீன்கள் அந்த உவமையின் கருத் 9
தைக்கூறும்படி அவனிடம் கேட்டார்கள்.* அதற்கு 10
அவன், ''இந்த உவமைகளில், இறைவனுடைய பேரர
சைப் பற்றிய மறைபொருட்களை அறியும் நற்பேறு
உங்களுக்கு இறைவனால் அருளப்பட்டுள்ளது.

> இவர்களுக்கோ நான் உவமைகளில் கூறுகிறேன். 'ஏனெனில் அவர்கள் கண்டும் காணாதவர்களாயும் கேட்டும் விழங்கிக் கொள்ளாதவர்களாயும் இருக்கிறார்கள்' என நபி ஒருவர் கூறியுள்ளார்.

''இவ்வுவமையின் கருத்தைக் கேளுங்கள்:– விதை 11
என்பது மனிதருக்கு அறிவிக்கப்படும் இறைவனது
வார்த்தை.* சில விதைகள் விழுந்த கடினமான பாதை, 12
இறைவனது வார்த்தையைக் கேட்டவர்களின் கடின
மான இருதயத்தைக் குறிக்கும். ஆனால் சைத்தான்
அவர்களின் இருதயத்திலிருந்து விதையாகிய வார்த்
தையை எடுத்து விடுகிறான். இதனால் அவர்கள் விசு
வாசம் கொண்டு, இரட்சிப்படைவதைத் தடுத்து
விடுகிறான்.* கற்பாறை நிலம் இறைவனது செய்தியை 13
மகிழ்ச்சியுடன் கேட்கிறவர்களைக் குறிக்கும். ஆயினும்
இவர்களுள் வார்த்தையானது வேரூன்றி நிலைகொள்ள
வகையில்லாததால், அவர்கள் அதை உண்மையென
விசுவாசம் கொண்டாலும், சோதனைகள் உண்டாகும்

போது, சிறிது காலத்திலேயே வழுவி விழுந்து
போகிறார்கள்.* முட்செடிகள் நிறைந்த நிலம், 14
இறைவனுடைய வார்த்தையை முதலில் ஆர்வத்துடன்
கேட்டு ஏற்றுக் கொள்கிறவர்களைக் குறிக்கும். ஆனால்,
நாட்செல்லச் செல்லக் கவலை, செல்வம், உலக ஆசா
பாசங்கள், பொறுப்புகள் ஆகியவற்றால் இறைவார்த்தை
நெருக்கப்பட்டு விடும். எனவே இவர்களால் முழு
வளர்ச்சி அடைந்து பலன் கொடுக்க முடிவதில்லை.*
ஆனால், நல்ல நிலம், நேர்மையுள்ள நல்மனமுடைய 15
மக்களைக் குறிக்கும். இவர்கள் இறைவனுடைய
வார்த்தையைக் கவனமாய்க் கேட்டு, அவற்றை
விடாமுயற்சியுடன் கடைப்பிடித்து பிறருக்கும் நற்செய்
தியை எடுத்துரைத்து, நற்பயனளிக்கும் நற்பண்பு
உள்ளவர்களாவர்'' என்றான்.*

விளக்கின் உவமை

மேலும் ஈஸா கூறியதாவது:– ''விளக்கைப் பற்ற 16
வைத்து, அதன் வெளிச்சத்தை மூடிமறைப்பவன்
உண்டா? இல்லையே! உள்ளே வருவோருக்கு அதன்
ஒளி பயன்படத்தக்கதாக, ஓர் உயரமான இடத்தில்
அதை ஏற்றிவைப்பார்கள்.* வெளியாகாமல் ஒழிவு 17
மறைவாய் வைத்திருப்பதற்கு ஒன்றுமில்லை. உள்ளே
மறைத்து வைத்திருப்பது எதுவாயினும், அவையெல்
லாம் ஈற்றில் வெளியாகும்.* எனவே நீங்கள் இறை 18
வனது வார்த்தையை எத்தகைய மனநிலையுடன்
கேட்கிறீர்கள் என்று எச்சரிக்கையாக இருங்கள்.
ஏனெனில் இறைவனின் வார்த்தையைக் கேட்டு,
அதைக் காத்துக் கொள்கிறவனுக்கு அந்த அறிவு
மேலும் மேலும் கொடுக்கப்படும். அந்த அறிவு இல்
லாதவர்களிடம் இருந்து, தங்களிடம் உள்ளதென்று
அவர்கள் நினைப்பதுவும் அவர்களிடமிருந்து எடுத்துக்
கொள்ளப்படும்.''*

ஈஸாவின் உண்மையான உறவினர்

ஒருமுறை ஈஸாவின் தாயும், சகோதரரும் அவ 19
னைப் பார்ப்பதற்காக வந்தனர். ஈஸா போதித்துக்
கொண்டிருந்த வீட்டில் சனநெருக்கடி அதிகமாய்
இருந்தபடியால், அவர்களால் உள்ளே போக முடிய

வில்லை.* ஈஸாவுடைய தாயும், சகோதரரும் அவ 20
னைப் பார்ப்பதற்காக வெளியில் காத்துக் கொண்
டிருக்கிறார்கள் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.*
அப்பொழுது அவன், ''இறைவனின் வார்த்தையைக் 21
கேட்டு, அதன்படி நடக்கிறவர்களே எனக்குத் தாயும்
சகோதரரும் ஆவார்கள்'' என்று அவர்களிடம் கூறி
னான்.*

ஈஸா புயலை அடக்குதல்

ஒருநாள் ஈஸா தனது முரீதீன்களுடன் படகில் 22
போய்க்கொண்டிருந்தான். அப்போது அவன், ''ஏரியின்
மறுகரைக்குப் போவோம், வாருங்கள்'' என்று கூறி
னான்.* அவர்களும் அவ்வாறே படகைச் செலுத்திய 23
போது ஈஸா படகில் படுத்து கண் அயர்ந்துவிட்டான்.
அவ்வேளை திடீரென்று கடும்புயல் வீசத்தொடங்
கியது. படகு நீரால் நிரம்பத் தொடங்கியதாலும்
காற்று அதிவேகமாய் வீசியதாலும் அவர்கள் ஆபத்திற்
குள்ளானார்கள்.*

அவர்கள் பீதியுற்றவர்களாய் ஈஸாவிடம் விரைந்து 24
சென்று, ''ஸெய்யிதே! நாங்கள் அமிழ்ந்து கொண்டி
ருக்கிறோம்'' என்று கூச்சலிட்டு அவனை எழுப்பினார்கள்
ஈஸா விழித்தெழுந்து, காற்றையும் கடலையும் கடிந்த
போது, புயல் அடங்கி அமைதி உண்டாயிற்று.* பின்பு 25
அவன், ''உங்கள் விசுவாசம் எங்கே?'' என்று கேட்டான்
அவர்களோ ஆச்சரியமும் பயமும் மேலிட்டவர்களாய்,
''இவன் யாராயிருக்கலாம்? காற்றும் கடலும் இவனுக்
குக் கட்டுப்படுகின்றனவே!'' என்று ஒருவருக்கொருவர்
கூறிக்கொண்டனர்.*

பேய் பிடித்தவனைக் குணப்படுத்தல்

பின்பு அவர்கள் கலிலேயாவுக்கு எதிரேயுள்ள 26
கெரசேனர் நாட்டை வந்தடைந்தனர்.* ஈஸா படகிலி 27
ருந்து கரையில் இறங்கியபோது, அப்பட்டணத்தைச்
சேர்ந்த மனிதனொருவன் அவனிடம் வந்தார். அம்
மனிதன் நெடுநாட்களாய் பேய்களினால் பிடித்தாட்டப்
பட்டு, உடையற்றவனாய் மையவாடியில் வசித்துவந்
தார்.* அம்மனிதன் ஈஸாவைக் கண்டதும், கூக்குர 28
லிட்டார். ஈஸாவின்முன் தரையில் விழுந்து, ''ஈஸாவே!

அல்லாஹுதஆலாவின் குமாரனே ! என்னிடத்தில்
உனக்கு என்னவேலே? என்னை வதைக்க வேண்டாம்
என்று உன்னைத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கி
றேன்'' என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.*

ஏனெனில், ஈஸா, ஏற்கெனவே அந்த நஜீஸான 29
ரூஹை அம்மனிதனை விட்டகலும்படி கட்டளையிட்டிருந்
தான். அப்பேய் அம்மனிதனை எத்தனையோமுறை முற்
றும் ஆட்கொண்டது. அப்போது கைவிலங்கிட்டு சங்
கிலியால் கட்டினாலும் அவற்றை முறித்து உடைத்து
விடுவார். அவ்வேளை அப்பேயால் பாலைவனத்திற்கு
துரத்தப்படுவார்.* ஈஸா அந்த மனிதனிடம், ''உன் 30
பெயர் என்ன?'' என்று கேட்டான். அதற்கு, ''லேகி
யோன்'' என்று விடையளித்தார். ஏனெனில் அம்மனி
தனில் ஆயிரக்கணக்கான பேய்கள் குடிகொண்டிருந்தன.*
அவை தங்களைப் பாதாளக் குழிக்குள் போகும்படி 31
கட்டளையிட வேண்டாம் என்று கெஞ்சி மன்றாடின.*

அருகாமையில் இருந்த மலைச்சாரலில் பன்றிக் 32
கூட்டமொன்று மேய்ந்து கொண்டிருந்தது. பேய்கள்
தங்களை அவற்றிற்குள் செல்ல அனுமதிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொண்டன. அதற்கு ஈஸா உடன்
பட்டான்.* எனவே அவை அம்மனிதனைவிட்டு வெளி 33
யேறிப் பன்றிகளுக்குள் சென்றன. உடனே அப்பன்றிக்
கூட்டம் முழுவதும் மலைச்சாரலில் விரைந்து ஓடிய
தால், செங்குத்தான மலைச்சரிவிலிருந்து ஏரிக்குள்
விழுந்து மூழ்கின.* அவற்றை மேய்த்துக் கொண்டி 34
ருந்தவர்கள் நடந்தவற்றைக் கண்டு அருகில் உள்ள
ஊருக்கு ஓடிப்போய், நடந்தவற்றை வழியெல்
லாம் கூறினார்கள்.* நடந்ததைப் பார்க்கும்படி மக்கள் 35
ஊருக்கு வெளியே வந்தார்கள். அவர்கள் ஈஸாவிடம்
வந்தபோது, பேய்களிலிருந்து, விடுவிக்கப்பட்ட அம்
மனிதன் உடை அணிந்து, தன்னுணர்வுடன் ஈஸா
வின் பாதத்தருகில் உட்கார்ந்து இருக்கிறதைக்
கண்டு திகில் அடைந்தனர்.* பேய் பிடித்த மனிதன் 36
குணமானதை நேரில் கண்டவர்கள், அதை மற்றவர்
களுக்கும் சொன்னார்கள்.* அப்பொழுது, கெரசே 37
னருக்குச் சுற்றுப்புறம் எங்கிலும் உள்ள மக்களெல்லா
ரும் ஈஸாவை அவ்விடத்தைவிட்டுப் போய்விடும்படி
வேண்டிக் கொண்டார்கள். ஏனெனில் எல்லோரும்

திகில் அடைந்தவர்களாய் இருந்தார்கள். ஈஸா படகிலேறி மறுகரைக்குத் திரும்பிச் சென்றான்.*

அப்பொழுது பேய்களினின்று விடுவிக்கப்பட்ட 38
அம்மனிதன் தன்னையும் அழைத்துச் செல்லும்படி
வேண்டினார்.* அதற்கு ஈஸா, ''நீர் உம் வீட்டுக்குத் 39
திரும்பிப்போம். இறைவன் உமக்குச் செய்தவற்றை
எல்லாம் அவர்களுக்குச் சொல்லும்'' என்று கூறி
அனுப்பிவைத்தான். அம்மனிதனும் அப்படியே திரும்
பிச் சென்று, வழியெங்கிலும் ஈஸா செய்த வல்லமை
யான அற்புதத்தை எல்லோருக்கும் கூறினார்.*

பெரும்பாடுள்ள பெண் குணமடைதலும், யவீருவின் மகளை உயிரோடு எழுப்புதலும்

ஈஸா மறுகரைக்கு வந்தபோது, திரளான மக் 40
கள் அவனை வரவேற்றார்கள். ஏனெனில் அவர்கள்
ஈஸாவுக்காக அங்கே காத்திருந்தார்கள்.* அப்பொ 41
ழுது பைத்துல்லாஹ் ஒன்றின் ஆலிமாயிருந்த யவீரு
என்ற பெயருடைய ஒருவன் ஈஸாவிடம் வந்து பாதத்
தில் விழுந்து, தம் வீட்டுக்கு வரும்படி அவனை மன்
றாடினார்.* ஏனெனில் அவருடைய பன்னிரண்டு வயது 42
நிரம்பிய ஒரு மகள் ஸக்ராத் நிலையில் கிடந்தாள்.
ஈஸா அவருடன் போய்க்கொண்டிருக்கையில் திரளான
மக்கள் அவனைச் சுற்றி நெருக்கியவாறு சென்றுகொண்
டிருந்தனர்.*

அக்கூட்டத்தில், பன்னிரண்டு ஆண்டுகளாகப் 43
பெரும்பாட்டினால் வருந்திய ஒரு பெண்ணும் இருந்தாள்.
ஒருவராலும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை.*
அவள் தான் எப்படியாவது சுகமடைய வேண்டு 44
மென்ற எண்ணத்துடன் ஈஸாவின் பின்னால் வந்து
அவனுடைய உடையின் ஓரத்தைத் தொட்டாள். உடனே,
அவளுடைய பெரும்பாடு நின்றது.* ஈஸா, 45
''என்னைத் தொட்டது யார்?'' என்று கேட்டான்.
எல்லோரும் தாங்கள் தொடவில்லை என்று மறுத்த
போது பேதுரு, ''ஸெய்யிதே! திரளான மக்கள் உங்
களைச் சூழந்து நெருக்கிக் கொண்டிருக்கிறார்களே!''
என்றார்.* அதற்கு ஈஸா, ''இல்லை, என்னை யாரோ ஒரு 46
வர் தொட்டார். ஏனெனில், என்னிலிருந்து வல்லமை
வெளிப்பட்டதை நான் உணர்ந்தேன்'' என்றான்.*

தான் தொட்டதை அறிந்து கொண்டார் என்பதை 47
அவள் உணர்ந்த போது, நடுங்கியவாறு ஈஸாவின் முன்
தன் முழுங்கால்களில் நின்று, தான் தொட்ட காரணத்
தையும், தான் உடனே குணமடைந்ததையும் எல்லோர்
முன்னிலையிலும் அவனுக்கு அறிவித்தாள்.* ஈஸா 48
அவளிடம், ''மகளே! உமது விசுவாசம் உம்மைக்
குணமாக்கியது. நீர் சமாதானத்துடன் போம்'' என்
ருன்.*

ஈஸா அவளுடன் இவ்வாறு பேசிக்கொண்டிருக் 49
கையில், யவீருவின் வீட்டிலிருந்து ஒரு வேலைக்காரன்
வந்து, யவீருவிடம், ''உம்முடைய மகள் இறந்துவிட்
டாள், உஸ்தாதை இனித் தொந்தரவு செய்வதில்
பயனில்லை'' என்ருர்.* ஆனுல், ஈஸா அதைக் கேட்ட 50
போது, யவீருவிடம், ''பயப்படாதீர்! நீர்என்னை விசுவா
சித்தால் போதும், அவள் பிழைப்பாள்'' என்ருன்.*
அவர்கள் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது 51
பேதுரு, யஃகூபு, யோவான், பிள்ளையின் தாய்தகப்பனைத்
தவிர வேறெருவரையும் ஈஸா தன்னுடன் உள்ளே
செல்ல இடங்கொடுக்கவில்லை.* வீடு முழுவதும் அழுது 52
புலம்புகிறவர்களால் நிறைந்திருந்தது. ஈஸா அவர்
களிடம், ''அழுதுபுலம்புவதை நிறுத்துங்கள். அவள்
இறக்கவில்லை; உறங்குகிருள்'' என்ருன்.* பிள்ளை 53
இறந்து விட்டாள் என்பதை எல்லோரும் அறிந்திருந்த
படியால், அதைக் கேட்ட அவர்கள் எள்ளி நகைத்தனர்.*
ஈஸாவோ அப்பிள்ளையின் கையைப் பிடித்து, ''சிறு 54
பெண்ணே! எழுந்திரும்'' என்ருன்.* அந்த வினுடியே 55
அவள் உயிர் திரும்பிவந்தது. உடனே அவள் குதித்து
எழுந்து உட்கார்ந்தாள். ஈஸா அச்சிறு பெண்ணுக்கு
உணவு கொடுக்கும்படி கட்டளையிட்டான்.* அவளு 56
டைய பெற்ருேர் மகிழ்ச்சி மேலிட திகைத்துப்
போயினர். ஈஸா, அவர்களிடம், நடந்தவற்றை ஒருவருக்
கும் சொல்ல வேண்டாமென்று கட்டளையிட்டான்.*

பன்னிருவரை அனுப்புதல்

9 ஒருநாள் ஈஸா, தனது பன்னிரு ரஸூல்மார்
களையும் ஒன்ருய் வரவழைத்து, அவர்களுக்குப்பேய்
களைத் துரத்தவும் எல்லாவகையான பிணிகளை நீக்கவும்
வல்லமை அளித்து, அதிகாரத்தையும் கொடுத்தான்.*

பின்பு ஈஸா இறைவனுடைய இராட்சியத்தின் வருகை 2
யைக் குறித்த நற்செய்தியை எல்லாருக்கும் அறிவிக்க
வும் நோயாளிகளைச் சுகமாக்கவும் அவர்களை அனுப்பி
னான்.*

அப்பொழுது ஈஸா, ''நீங்கள் உங்கள் பிரயாணத் 3
திற்கென்று ஒன்றையும் உங்களுடன் எடுத்துச் செல்ல
வேண்டாம். கைத்தடி, பை, உணவு, பணம் ஆகிய
எதையும் எடுத்துக்கொண்டு போகவேண்டாம்.* நீங் 4
கள் போகும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரே வீட்டிலேயே
தங்குங்கள்.* எந்த ஊரிலாவது மக்கள் உங்களை 5
ஏற்றுக் கொள்ளாவிட்டால் அந்த ஊரைவிட்டுப் போய்
விடுங்கள். அப்பொழுது அவர்களுக்கெதிராக உண்டா
கும் இறைவனின் கோபத்திற்கு அத்தாட்சியாக உங்கள்
கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிட்டுச் செல்லுங்
கள்'' என்றான்.*

எனவே, அவர்கள் புறப்பட்டுப்போய், ஊர் 6
ஊராகச் சென்று நற்செய்தியை அறிவித்து, நோயாளி
களைச் சுகமாக்கினார்கள்.*

ஏரோதின் திகைப்பு

ஈஸாவின் அற்புதங்களைக் குறித்துக் கேள்வி 7
யுற்ற சிற்றரசன் ஏரோது மனங்கலங்கினார். ஏனெனில்,
யஹ்யா (அலை) அவர்களே மறுபடியும் உயிர்த்தெழுந்து
வந்துள்ளார் என்று ஈஸாவைக் குறித்துச் சிலர் கூறினர்.*
வேறுசிலர், ''இவர் இல்யாஸ் (அலை), அல்லது நம் 8
முன்னோர்களின் நபியொருவர் உயிர்த்தெழுந்து வந்துள்
ளார்'' என்று பேசிக்கொண்டனர்.* இதைக்கேட்ட 9
ஏரோது திகிலுடன், ''யஹ்யாவின் தலையை வெட்டும்
படி செய்தேனே! நான் இப்பொழுது கேள்விப்படும்
இவ்வற்புதங்களைச் செய்யும் இவர் யார்?'' என்று
சிந்தித்தார். எனவே ஈஸாவைப் பார்க்க விரும்பி
முயற்சி செய்தார்.*

ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்

ஈஸாவினால் அனுப்பப்பட்ட ரஸூல்மார்கள் 10
அவனிடம் திரும்பி வந்து, தாங்கள் செய்த யாவற்றை
யும் அவனுக்குச் சொன்னார்கள். ஈஸா அவர்களைக்

கூட்டிக்கொண்டு அவர்களுடன் தனித்திருக்க பெத்சா
யிதா எனும் ஊருக்குப் போனான்.* ஈஸா எங்கே செல் 11
கிறான் என்பதை அறிந்த திரளான மக்கள் அவனைப்
பின்தொடர்ந்து சென்றார்கள். ஈஸா அவர்களை வர
வேற்று, அவர்களுக்கு இறைவனின் இராட்சியத்தைப்
பற்றிப் போதித்தான். அவர்களிடையே உள்ள நோய்
களையெல்லாம் சுகமாக்கினான்.* பொழுதுசாயும் 12
வேளை ஈஸாவுடைய பன்னிரு முரீதீன்களும் அவனிடம்
வந்து, ''இந்த இடம் மனித நடமாட்டம் இல்லாதது.
இவர்கள் அருகாமையில் உள்ள ஊர்களுக்கோ, கிரா
மங்களுக்கோ சென்று, இரவு தங்கவும் உணவு பெற்
றுக்கொள்ளவும் அனுப்பிவிடவேண்டும்'' என்று அவனைக்
கேட்டுக் கொண்டார்கள்.* ஆனால் ஈஸாவோ அவர் 13
களிடம், ''நீங்களே அவர்களுக்கு ஏதாவது சாப்பிடக்
கொடுங்கள்'' என்றான். அதற்கு அவர்கள், ''எங்களிடம்
ஐந்து ரொட்டிகளும் இரண்டு மீன்களுமே உள்ளன.
இவர்கள் எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமாயின்,
நாங்கள் போய் உணவு வாங்கிக் கொண்டு வரவேண்
டுமே!'' என்றனர்.* ஏனெனில் அங்கே ஏறத்தாழ 14
ஐயாயிரம் ஆண்கள் இருந்தனர். ஈஸா தமது முரீதீன்
களிடம், ''நீங்கள் மக்களைப் பந்திக்கு ஐம்பது பேராக
உட்காரும்படி செய்யுங்கள்'' என்றான்.* அவர்களும் 15
எல்லோரையும் அப்படியே பந்தி அமர்த்தினார்கள்.*
அப்பொழுது ஈஸா, அந்த ஐந்து ரொட்டிகளையும் 16
இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை நிமிர்ந்து
பார்த்து, நன்றி செலுத்தி, அவற்றைச் சிறுசிறு
துண்டுகளாக்கி முரீதீன்களிடம் கொடுத்தான். அவர்க
ள் அதை மக்களுக்குப் பரிமாறினார்கள்.* அவர்கள் 17
எல்லோரும் வயிறார உண்டபின், எஞ்சிய துணிக்கை
களைச் சேர்த்தெடுத்தபோது பன்னிரண்டு கூடைகள்
நிறைய இருந்தன.*

பேதுருவின் அறிக்கை

பின்பு ஒருசமயம் ஈஸா தனித்து தன்னுடைய 18
முரீதீன்களுடன் துஆச் செய்து கொண்டிருந்தவேளை
அவன், ''மக்கள் என்னை யாரென்று சொல்கிறார்கள்?''
என்று அவர்களிடம் கேட்டான்.* அதற்கு அவர்கள், 19
''சிலர் நீ யஹ்யா (அலை) என்று கூறுகிறார்கள். வேறு
சிலர் நீ இல்யாஸ் (அலை) என்றும், வேறுசிலர் உயிர்

பெற்றெழுந்துள்ள முன்னுள் நபிமார்களில் ஒருவர்
என்றும் கூறுகிருர்கள்'' என்ருர்கள்.* அப்பொழுது 20
ஈஸா, ''நீங்கள் என்னே யார் என்று சொல்லுகிறீர்கள்?''
என்று கேட்டான். அதற்கு பேதுரு, ''நீ இறைவனின்
மஸீஹ் வாக்களிக்கப்பட்ட இரட்சகன்'' என்ருர்.* அப் 21
பொழுது ஈஸா, ''நீங்கள் இதை ஒருவருக்கும் சொல்
லக்கூடாது'' என்று கண்டிப்பாகக் கட்டளேயிட்டான்.*

ஈஸா தன் இறப்பைப்பற்றி முன்னறிவித்தல்

ஈஸா அவர்களிடம், ''மனித குமாரனுகிய 22
(மஸீஹ்) நான், பல துன்பங்களே அனுபவிக்கவேண்டும்.
யூதசங்கத்தலேவர்கள், தலேமைஉலமாக்கள், புக்கஹாக்
கள், உஸ்தாதுமார்கள் ஆகியவர்களால் புறக்கணிக்
கப்பட்டு, கொலேசெய்யப்பட்டு, அதற்கு மூன்று நாட்
களின்பின் மறுபடியும் உயிர்பெற்று எழுந்திருப்பேன்''
என்ருன்.*

பின்பு ஈஸா எல்லோரிடமும், ''ஒருவன் என்னேப் 23
பின்பற்ற விரும்பினுல் தன் வாழ்வின்மேல் தனக்குள்ள
உரிமைகளே ஒதுக்கித் தள்ளிவிட்டு, தினந்தோறும் தன்
சிலுவையைத் தானே சுமந்து, என்னேயண்டி என் வழி
யில் வாழவேண்டும்.* ஒருவன் என்பொருட்டுத் தன் 24
உயிரை இழந்து போனுல், அவன் அதைக் காத்துக்
கொள்கிருன். ஆனுல் தன் உயிரைக் காத்துக்கொள்
கிறதில் கருத்துள்ளவனுய் இருப்பானுயின், அவன்
அதை இழந்துபோவான்.* ஒருவன் உலகம் முழுவதை 25
யும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்து
மாவையே இழந்துபோனுல் அதனுல் அவன் அடையும்
பயன் யாது?* மனிதகுமாரனுகிய நான் என் மாட்சி 26
மையிலும், பிதாவினதும், பரிசுத்த மலக்குகளினதும்
மாட்சிமையிலும் திரும்பிவரும்போது என்னேக் குறித்
தும் என் வார்த்தைகளேக் குறித்தும் இப்பொழுது வெட்
கப்படுகிறவர்கள் அனேவரையும்குறித்து நானும்
வெட்கப்படுவேன்.* இப்பொழுது, இங்கே நிற்கிறவர் 27
களில் சிலர், இறைவனின் இராட்சியத்தைக் காணுமுன்
இறப்பதில்லே என்பது உண்மையென உங்களுக்குத்
திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்'' என்ருன்.*

ஈஸா மறுரூபமடைதல்

ஈஸா இதற்கு எட்டு நாட்களின் பின்னர் பேதுரு, 28
யஃகூபு, யோவான் ஆகியவர்களைத் தன்னுடன் அழைத்
துக்கொண்டு துஆச் செய்வதற்காக மலையின் மேல்
ஏறினான்.* ஈஸா துஆச் செய்கையில், அவனுடைய 29
முகத்தின் தோற்றம் மாறிப் பிரகாசமடைந்தது. அவ
னுடைய உடையும் ஒளிரும் வெண்மையாகிப் பிரகாசித்
தது.* அங்கே மூஸா (அலை) அவர்களும், இல்யாஸ் 30
(அலை) அவர்களும் மாட்சிமையுடன் தோன்றி ஈஸா
வுடன் பேசலானார்கள்.* இறைவனின் திட்டப்படி 31
ஜெரூசலத்தில் நிறைவேற்றப்படப்போகும் அவனு
டைய இறப்பைப்பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்
தார்கள்.* பேதுருவும் அவனோடிருந்தவர்களும் தூக்க 32
மயக்கத்தினால் கண்ணயர்ந்து போனார்கள். அவர்கள்
விழித்தெழுந்து பார்த்தபோது, ஈஸா மாட்சிமையி
யினால் பிரகாசிக்கிறதையும் அவனுடன் நின்ற
இருவரையும் கண்டார்கள்.* மூஸா (அலை) அவர் 33
களும், இல்யாஸ் (அலை) அவர்களும் ஈஸாவை விட்டுப்
பிரியும்வேளை, பேதுரு மலைப்புற்ற நிலையில் தான்
பேசுவது இன்னதென்று அறியாது, ''ஸெய்யிதே! இது
எவ்வளவு அற்புதம்! நாம் இங்கே மூன்று கூடாரங்களை
அமைப்போம். உனக்கு ஒன்றும், மூஸா (அலை) அவர்
களுக்கு ஒன்றும், இல்யாஸ் (அலை) அவர்களுக்கு ஒன்று
மாக அமைத்து இங்கேயே தங்கிவிடலாம்'' என்றார்.*

இப்படி பேதுரு சொல்லிக் கொண்டிருக்கையி 34
லேயே ஒரு பிரகாசமான முகில் அவர்கள்மேல் நிழலிட்
டது. அது அவர்களை மூடியபோது பயம் அவர்களைப்
பற்றிப்பிடித்தது.* அப்பொழுது, ''இவன் என் 35
குமாரன், நான் தெரிந்துகொண்டவன், இவனுக்குச்
செவிசாயுங்கள்'' என்று மேகத்திலிருந்து சத்தம்
கேட்டது.* அந்த வார்த்தைகள் ஒலித்தபின் ஈஸா 36
மட்டும் அங்கு நிற்பதைக் கண்டனர். அவர்கள் தாங்
கள் கண்டவற்றை வெகு காலம்வரை ஒருவருக்கும்
கூறவில்லை. அவற்றைத் தங்கள் மனதிலேயே வைத்
திருந்தனர்.*

நஜீஸான ரூஹ் பிடித்த வாலிபன் குணமடைதல்

மறுநாள் அவர்கள் மலையிலிருந்து இறங்கிய 37
போது, திரளான மக்கள் அவர்களை எதிர்கொண்ட
னர்.* கூட்டத்திலிருந்து மனிதனொருவன் உரத்த 38
சத்தமாய், ''உஸ்தாதே! இவர் என் ஒரே மகன்.*
ரூஹ் ஒன்று இவரைப்பிடித்து அலைக்கழித்துக் 39
கொண்டிருக்கிறது. இவரை ஓலமிடச் செய்து,
வலிப்புண்டாக்கி வாயில் நுரைதள்ளிக் கீழே விழுத்
துகிறது. அவரை எப்பொழுதும் நெரித்து நொருக்
குவதுடன், அவரைவிட்டு எளிதில் போவதுமில்லை.*
நான் உங்களுடைய முரீதீன்களிடம் அந்த ரூஹை 40
விரட்டும்படி வேண்டிக்கொண்டேன். ஆனால் அவர்களால்
முடியவில்லை'' என்றார்.*

இதைக் கேட்ட ஈஸா, ''பிடிவாதமுள்ள விசுவாச 41
மற்ற மக்களே! எவ்வளவு காலம் நான் உங்களுடன்
பொறுமையாய் இருப்பேன்?'' என்று தன்னுடைய முரீ
தின்களிடம் கூறினான். பின்பு, ''உம் மகனை இங்கே
கொண்டு வாரும்'' என்று அவரிடம் சொன்னான்.*
அந்தச் சிறுவன் வந்து கொண்டிருக்கையிலேயே அப் 42
பேய் அவனைக் கீழே தள்ளி வலிப்புண்டாக்கி அலைக்கழித்
தது. ஆனால் ஈஸா நஜீஸான ரூஹை வெளியேறும்படி
கட்டளையிட்டு, அச்சிறுவனைக் குணமாக்கினான். பின்பு
ஈஸா அச்சிறுவனைத் தகப்பனிடம் ஒப்படைத்தான்.*
இறைவனின் வல்லமை செயல்படுவதை மக்கள் கண்ட 43
போது அவர்கள் மலைத்துத் திகைத்தனர்.*

மீண்டும் தம் இறப்பைப் பற்றிக் கூறுதல்

ஈஸா செய்த யாவற்றையும் குறித்து அனைவரும்
வியந்துகொண்டிருக்கையில் அவன் தம்முடைய முரீ
தீன்களிடம் கூறியதாவது:* ''நான் கூறும் இந்த 44
வார்த்தைகளைக் கவனமாகக் கேளுங்கள். மனிதகுமாரன்
ஆகிய எனக்குத் துரோகம் செய்து என்னைக் காட்டிக்
கொடுப்பார்கள்.''* ஆனால் ஈஸா சொன்னதன் கருத்தை 45
முரீதீன்கள் விளங்கிக் கொள்ளவில்லை. ஏனெனில்
அவர்கள் அதை உணர்ந்துகொள்ளாதவாறு அது
அவர்களிடம் இருந்து மறைக்கப்பட்டிருந்தது. ஈஸா
விடம் அதைக் கேட்கவும் அஞ்சினார்கள்.*

மிகப் பெரியவன் யார்?

(இனி வரப்போகும் பேரரசில்) தங்களுள் மிகப் 46
பெரியவர் யார்? என்ற வாக்குவாதம் அவர்களிடையே
எழுந்தது.* ஈஸா அவர்களுடைய உள்ளத்தின் சிந்த 47
னையை அறிந்து, ஒரு சிறுபிள்ளையை அழைத்துத் தன்
அருகில் நிறுத்தினன்.* பின்பு அவன், ''என் பெய 48
ரில் இச்சிறு பிள்ளையைப் போன்ற எவரையும் ஏற்று
ஆதரிக்கிறவன், என்னையும் ஏற்றுக்கொள்கிருன்.
என்னை ஏற்று ஆதரிக்கிறவன் என்னை அனுப்பிய இறை
வனையும் ஏற்றுக்கொள்கிருன். பிறரை ஏற்று ஆதரிக்
கும் இப்பேற்பட்ட தன்மையே ஒருவரின் மேன்மை
யின் அளவுகோல் ஆகும். உங்களுள் சிறியவன் எவனே,
அவனே மேன்மையானவன்'' என்ருன்.*

அதைக் கேட்ட ஈஸாவுடைய முரீதீனை 49
யோவான் அவனிடம் வந்து, ''ஸெய்யிதே! ஒரு மனிதன்
உனது பெயரால் பேய்களைத் துரத்துகிறதைக் கண்
டோம். அவர் எங்களைப் போல உன்னைப் பின்பற்று
கிறவர் அல்ல. எனவே அவரைத் தடை செய்தோம்''
என்ருர்.* ஈஸா அவரிடம், ''நீங்கள் அம்மனிதனைத் 50
தடை செய்ய வேண்டாம்; ஏனெனில் உங்களுக்கு
விரோதமாயில்லாதவர் உங்கள் சார்பாகவே இருக்
கிருர்'' என்ருன்.*

சமாரியாவில் ஈஸா

ஈஸா விண்ணிற்குத் திரும்பவும் எடுத்துக்கொள் 51
ளப்படும் காலம் நெருங்கியபோது, அவன் ஜெரூசலத்
துக்குப் போகவேண்டும் என்று தீர்மானித்து மன
வைராக்கியத்துடன் அத்திசையை நோக்கிச் சென்ருன்.*
ஒருநாள் ஈஸா, முன்னேற்பாடுகள் செய்வதற்காக, 52
சமாரியாவின் கிராமத்திற்கு தனக்கு முன்பாகத்தூது
வர்களை அனுப்பினன்.* ஆனல் ஈஸா ஜெரூசலத்தை 53
நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரணத்தினல்,
அவ்வூரார் ஏற்றுக்கொள்ளவில்லை.* அங்கு நடந்தவற்றை 54
அவர்கள் கேள்விப்பட்டபோது, முரீதீன்களான
யஃகூபும் யோவானும் அவனிடம், ''ரப்பே! இவர்
களை அழிக்க வானத்திலிருந்து அக்கினி இறங்கும்படி
நாம் கட்டளையிடுவது உனக்கு விருப்பமா?'' என்று
கேட்டார்கள்.* ஆனல் ஈஸாவோ அவர்களைத் திரும் 55

பிப் பார்த்துக் கடிந்துகொண்டான். (''உங்கள் உள்ளத்தின் தன்மை எத்தகையது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவில்லே.* மனிதகுமாரன் மனிதருடைய 56
உயிரை அழிப்பதற்கு அன்று; அவர்களுக்கு மீட்பு அருளுவதற்கே வந்தான்'') பின்பு அவர்கள் வேறூர் ஊருக்குப் போனார்கள்.*

ஈஸாவைப் பின்பற்ற விரும்பியவர்கள்

அவர்கள் நடந்து சென்று கொண்டிருக்கையில் 57
ஒருவன் ஈஸாவிடம் வந்து, ''ரப்பே! நீ எங்கே சென்றாலும், எப்பொழுதும் நான் உன்னைப் பின்பற்றி வருவேன்'' என்றார்.* ஆனால் ஈஸா அவரிடம், ''நரிகளுக்கு 58
வளைகளுண்டு, பறவைகளுக்குக் கூடுகளுண்டு. ஆனால் மனிதகுமாரனாகிய எனக்கோ, தலை வைத்துப் படுப்பதற்கும் இவ்வுலகில் இடமில்லை'' என்றான்.* பின்பு 59
ஒருமுறை ஈஸா வேறொருவனிடம், ''நீர் என்னைப் பின்பற்றி வந்து என் முரீதீனாயிரும்'' என்று அழைத்தான். அப்பொழுது அம்மனிதன், ''ரப்பே! முதலில் என் தகப்பனை அடக்கம் செய்துவிட்டு வர விடை கொடும்'' என்றார்.* அதற்கு ஈஸா, ''இறந்தவர்களான, 60
நித்திய மெய்வாழ்வு இல்லாதவர்கள் இப்பேறற்றவற்றில் அக்கறை காட்டட்டும். ஆனால் நீரோ போய் இறைவனின் இராட்சியத்தின் வருகையைக் குறித்து உலகோருக்குப் போதிப்பதே உமது கடமையாகும்'' என்றான்.* வேறொருவர் ஈஸாவிடம், ''ஆம் ரப்பே! 61
நான் உம்மைப் பின்பற்றி வருவேன். ஆனால் நான் முதலில் போய் என் வீட்டில் உள்ளவர்களிடம் அனுமதி பெற்று வருவதற்கு உத்தரவு கொடும்'' என்றார்.*
ஆனால் ஈஸாவோ, அம்மனிதனிடம், ''கலப்பையில் 62
கையை வைத்தபின்னர், தனக்குப் பின்னால் இருக்கிறவற்றைத் திரும்பிப் பார்க்கிற எவனும் இறைவனின் இராட்சியத்திற்குத் தகுதியற்றவன்'' என்றான்.*

எழுபது பேரை அனுப்புதல்

10 இவற்றிற்குப் பின்பு ரப்பு, வேறு எழுபது முரீதீன்களைத் தெரிந்தெடுத்து, தான் போகவிரும்பும் ஒவ்வோர் ஊருக்கும், கிராமத்திற்கும் அவர்களைத் தனக்கு முன்னே இவ்விரண்டு பேராக

அனுப்பினுன்.* ஈஸா அவர்களை அனுப்பியபோது அவர் 2
களுக்கு அளித்த அறிவுரையாவது, ''அறுவடையோ
அதிகம்; வேலையாட்களோ குறைவு. ஆகையால் அறு
வடைக்கு அதிகாரியான ரப்பிடம் உங்களுக்கு உதவி
யாக இன்னும் வேலையாட்களை அனுப்பும்படி வேண்
டிக் கொள்ளுங்கள்.* இப்பொழுது புறப்பட்டுப் போங் 3
கள். நான் உங்களை ஓநாய்களுக்கிடையே ஆட்டுக்
குட்டிகளைப்போல அனுப்புகிறேன் என்பதை
நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.* பணப்பையோ, 4
பயணப் பையோ, மாற்றுவதற்கென்று வேருெரு கால
ணியோ கொண்டு போக வேண்டாம். வழியில் ஒருவரி
டமும் நலம் விசாரித்து நேரத்தை வீணுக்க வேண்டாம்.*
நீங்கள் எந்த வீட்டிற்குப் போனுலும், ''இவ்வீட்டிற்கு 5
ஸலாம் உண்டாவதாக'' என்று வாழ்த்துங்கள். * அங்கே 6
ஸலாத்தைப் பெறும் தகுதி உள்ளவர் இருந்தால் உங்கள்
ஸலாம் நிலைத்து நிற்கும். இல்லையெனில், பரக்கத்து
உங்களிடமே திரும்பிவரும்.* நீங்கள் ஒரு கிராமத்திற் 7
குள் சென்ருல் தங்குவதற்கு வீட்டிற்கு வீடு அலை
யாது ஒரே வீட்டிலேயே தங்குங்கள். அவர்கள்
கொடுப்பது எதுவாயினும் சாப்பிடுங்கள். வேலைசெய்
பவன் கூலிக்கு உரியவனுகையால் அவர்களின் விருந்
தோம்பலை ஏற்றுக்கொள்ளத் தயங்க வேண்டாம்.*

''ஒரு ஊரில் உங்களை ஏற்றுக்கொண்டு வரவேற் 8
ருல், உங்களுக்குக் கொடுப்பவற்றைச் சாப்பிடுங்கள்.*
அவ்விடத்திலுள்ள நோயாளிகளைக் குணமாக்குங்கள். 9
'இப்பொழுது இறைவனின் இராட்சியம் உங்களுக்கு
வெகு அண்மையிலுள்ளது' என்று அவர்களுக்குக் கூறுங்
கள்.* ஆனுல் நீங்கள் போகும் ஊரோ உங்களை ஏற்றுக் 10
கொள்ளாவிட்டால் நீங்கள் அவ்வூர்த்தெருக்களில்
சென்று,* 'எங்கள் கால்களில் படிந்துள்ள உங்கள் 11
ஊரின் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிவிடு
கின்ருேம். இது உங்களுக்கு ஏற்படவிருக்கும் அழி
வைக்குறிக்கிறது. ஆயினும் இறைவனின் இராட்சியம்
உங்களுக்கு வெகு அண்மையில் இருந்தது என்பதை ஒரு
பொழுதும் மறக்கவேண்டாம், என்று சொல்லுங்கள்.*
இறுதித்தீர்ப்பு நாளில் கொடிய பட்டணமாகிய 12
சோதோமுக்கு நேரிடுவது, அந்த ஊருக்கு நேரிடுவதை
விட இலகுவாயிருக்குமென்று நான் உங்களுக்குச்
சொல்கிறேன்.''*

மனமாற்றமடையா ஊர்களின் கதி

''கொராசினே! உனக்கு ஐயோ! கேடு வரும். பெத் 13
சாயிதாவே! உனக்கு ஐயோ! கேடுவரும். உங்கள்
மத்தியில் செய்யப்பட்ட வல்லமையான அற்புதங்கள்
தீரு, சீதோன் பட்டணங்களில் செய்யப்பட்டிருந்
தால் அங்குள்ளோர் அப்பொழுதே மனமாற்றம்
அடைந்திருப்பார்கள்; முரட்டுத்துணியுடுத்திச் சாம்பலி
லும் உட்கார்ந்திருப்பார்களே.* இறுதித் தீர்ப்பு நாளில் 14
தீருவுக்கும், சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனை,
உங்களுக்குக் கிடைக்கும் தண்டனையை விடக் குறை
வானதாயிருக்கும்.* கப்பர்நகூம் மக்களே! உங்களைக் 15
குறித்து நான் என்ன கூறுவேன்? நீங்கள் வானம்வரை
உயர்த்தப்படுவீர்களோ? இல்லவே இல்லை. நீங்கள்
பாதாளம்வரைக்கும் தாழ்த்தப்படுவீர்கள்.''*

மேலும் ஈஸா தமது முரீதின்களிடம், ''உங்களை 16
ஏற்று ஆதரிக்கிறவன், என்னையும் ஏற்றுக்கொள்கிறான்.
உங்களைப் புறக்கணிக்கிறவன். என்னையும் புறக்கணிக்
கிறான். என்னைப் புறக்கணிகிறவனோ என்னை அனுப்பிய
இறைவனையே புறக்கணிக்கிறான்'' என்றான்.*

எழுபது பேரும் திரும்பி வருதல்

அனுப்பப்பட்ட அந்த எழுபது பேரும் மகிழ்ச்சி 17
யோடு ஈஸாவிடம் திரும்பி வந்து, ''ரப்பே! உன்
னுடைய பெயராலே நாங்கள் கட்டளையிட்டதும் பேய்
கள் எங்களுக்குக்கீழ்ப்படிகின்றன'' என்றனர்.* அவன் 18
அவர்களிடம், '' ஆம்! நான் சைத்தான் மின்னலைப்
போல் வானத்திலிருந்து விழக்கண்டேன்.* பகை 19
வனின் சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் பாம்
புகள், தேள்கள் நடுவில் நடந்து அவற்றை நசுக்கவும்
உங்களுக்கு அதிகாரம் கொடுத்துள்ளேன். அவை
ஒன்றுமே உங்களுக்குத் தீங்கிழைக்காது.* ஆயினும் 20
ரூஹ்கள் உங்களுக்குக் கட்டுப்படுகின்றன என்பது
முக்கியமானதல்ல. இறைவனின் இராட்சியத்தில் குடி
உரிமைஉள்ளவர்களாய் உங்கள் பெயர்கள் பதியப்பட்
டிருக்கின்றதா என்பதே முக்கியம். இதற்காகவே
மகிழுங்கள்'' என்றான்.*

ஈஸா அகமகிழ்தல்

அப்பொழுது ஈஸா ரூஹுல் குதுஸானவனின் 21
மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டு, ''பிதாவே! விண்ணுக்கும்
மண்ணுக்கும் ரப்பே! நான் உம்மைப்போற்றிப் புகழ்
கிறேன். ஏனெனில் நீர் இவற்றை உலக ஞானிகளுக்கு
மறைவாக்கி உன்னைச் சிறுபிள்ளைகளைப்போல் நம்புகிற
வர்களுக்கு வெளிப்படுத்தினாய். ஆம்! பிதாவே! நான்
உனக்கு நன்றி செலுத்துகிறேன். ஏனெனில் நீ அதையே
விரும்பினாய்.* என் பிதாவின் பிரதிநிதியான என்னிடம் 22
யாவும் என் பிதாவினால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
குமாரன் இன்னாரென்பதைப் பிதாவைத் தவிர
ஒருவனும் அறியமாட்டான். பிதா இன்னாரென்பதையும்
குமாரனைத் தவிர ஒருவனும் அறிய முடியாது.
ஆனால் குமாரன் எவனுக்குப்பிதாவை வெளிப்படுத்த
விரும்புகிறானோ அவனும் பிதாவை அறிவான்'' என்றான்.*

பின்பு ஈஸா தன்னுடைய முரீதீன்களிடம் திரும்பி 23
அவர்களிடம் மெதுவாக, ''நீங்கள் காண்கிறவற்
றைக் காணும் சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறீர்கள்.*
ஏனெனில் பல முற்கால நபிமார்களும், அரசரும் 24
இவற்றைக் காணவும் கேட்கவும் இந்நாட்களுக்காக
ஆவலுடன் எதிர்பார்த்தும் அவர்களால் காணவோ,
கேட்கவோ முடியவில்லை'' என்றான்.*

நல்ல சமாரியன்

ஒருநாள் மூஸா நபியின் ஷரீஅத் சட்ட வல்லுன 25
னொருவன், ஈஸாவைக் கேள்விகள் மூலம் சோதிக்கும்
படி அவனிடம் வந்தார். ''உஸ்தாதே! இறைவன் வாக்
களித்த நித்திய மெய்வாழ்வைப் பெற்றுக்கொள்வ
தற்கு நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்
டார்.* அதற்கு ஈஸா, ''மூஸா நபியின் ஷரீஅத் சட்டத் 26
தில் அதைப் பற்றி என்ன எழுதியிருக்கிறது?'' என்று
கேட்டான்.* அதற்கு, ''உன் இறைவனாகிய ரப்பிடம் 27
உன் முழு உள்ளத்தோடும், உன்முழு ஆன்மாவோடும்,
உன்முழு ஆற்றலோடும், உன்முழுச் சிந்தையோடும்
அன்பு கொள்வாயாக. நீ உன்னிடத்தில் அன்புள்ள
வனாயிருப்பதுபோல உன் அயலவனிடத்திலும் அன்பு
கொள்வாயாக என்று எழுதியிருக்கிறது'' என்றார்.*

ஈஸா அவரிடம் ''ஆம்! நீர் சொன்னது சரிதான். 28
அப்படியே செய்யும். அப்பொழுது உமக்கு நித்திய மெய்
வாழ்வு கிடைக்கும்'' என்றான்.* ஆனால் அவரோ 29
தான் உத்தமன் என்பதைக் காட்ட விரும்பி ஈஸாவிடம்
''அயலவன் யார்?'' என்று கேட்டார்.* அதற்கு ஈஸா 30
ஓர் உவமையைக் கூறினான்.

ஒரு யூதன் ஜெரூசலத்திலிருந்து எரிகோவிற்குச்
செல்லும் வழியில் கொள்ளைக்காரரால் தாக்கப்பட்
டார். அவர்கள் அவனுடைய பணத்தைப் பறித்து
உடைகளைக் கழற்றிவிட்டு அடித்துக் குற்றுயிராக
வழியில் விட்டுச் சென்றார்கள்.* யூத ஆலிம் ஒருவன் 31
தற்செயலாக அவ்வழியே வந்தார். நிலத்தில் கிடந்த
மனிதனை அவர் கண்ட போது மறுபக்கமாக விலகிச்
சென்றார்.* அப்படியே யூத ஆலயப் பணியாள் ஒருவன் 32
அவ்வழியே வந்தார். அவரைக் கண்ட போது அவரும்
ஒருபக்கமாக விலக்கிச்சென்றார்.* ஆனால் அவ்வழியே 33
புறக்கணிக்கப்பட்ட சமாரியன் ஒருவன் வந்தபோது அவ
ரைக்கண்டு அவரிடம் இரக்கம் கொண்டு அவரருகிற்
சென்றார்.* அவரருகில் உட்கார்ந்து எண்ணெயும், 34
திராட்சரசமும் ஊற்றிக் கட்டினார். பின் தான் ஏறி
வந்த கழுதையின் மீது அவரை ஏற்றி, தான் அவருடன்
நடந்து சென்றார். அவரை ஒரு வாடி வீட்டிற்கு
அழைத்துச் சென்று அன்றிரவு பராமரித்தார்.* மறு 35
நாள் இரண்டு தீனாரை எடுத்து வாடிவீட்டுக்காரன் கை
யில் கொடுத்து, 'நீ இவரை கவனமாய்ப் பார்த்துக்
கொள்ளும். இதற்கு மேல் எதையாவது நீர் செலவு
செய்தால், நான் மறுபடியும் வரும்போது அதை உமக்
குத் தருவேன்' என்றார்.* இந்த மூவருள் யார் கொள் 36
ளைக்காரரினால் அடிபட்ட மனிதனின் அயலவனாக நடந்து
கொண்டார்'' என்று ஈஸா கேட்டான்.* அதற்கு 37
அந்த ஷரீஅத் சட்ட வல்லுனன், ''அவருக்கு இரக்கம்,
காட்டியவரே'' என்றார். அப்பொழுது ஈஸா அவரிடம்
''ஆம்! இப்பொழுது நீரும்போய் அவ்வாறே செய்யும்''
என்றான்.*

மார்த்தாளும் மர்யமும்

ஈஸாவும் அவனது முரீதீன்களும் தொடர்ந்து 38
ஜெரூஸலத்தை நோக்கிப் பிரயாணம் செய்கையில்

வழியில் ஒரு கிராமத்தை அடைந்தனர். அங்கே அவர்
களை மார்த்தாள் என்னும் ஒரு பெண் தன் வீட்டில் வர
வேற்ருள்.* அவளுடைய சகோதரி மர்யம் ஈஸாவின் 39
பாதத்தண்டை உட்கார்ந்து அவன் பேசும் வார்த்தை
களைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.* மார்த்தாளோ, 40
அவர்களுக்கு விருந்து தயாரித்தல் போன்ற பல வேலை
களைப்பற்றிக் கவலைகொண்டு ஓடியாடி வேலை செய்
தாள். அவள் ஈஸாவிடம் வந்து, ''ரப்பே! என் சகோதரி
என்னைத் தனியே வேலைசெய்ய விட்டுவிட்டு இங்கே
வந்து உட்கார்ந்திருப்பது சரியா? உனக்கு இதில் அக்
கறையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளிடம்
சொல்'' என்ருள்.* ஆனுல் ரப்போ அவளிடம், 41
''மார்த்தா! மார்த்தா! நீர் பல காரியங்களைப்பற்றிக்
கவலைப்பட்டுக் கலங்குகிறீர்.* தேவையானது ஒன்றே! 42
அந்த நல்ல பங்கை மர்யம் தெரிந்துகொண்டாள்.
நான் அதை அவளிடமிருந்து எடுத்து விடமாட்டேன்''
என்ருன்.*

ஈஸாவின் போதனைகள்–துஆ

11 ஒரு முறை ஈஸா துஆச்செய்து கொண்டிருந்தான்.
அப்போது அவனுடைய முரீதீன்களுள் ஒருவர் அவ
னிடம் வந்தார். ஈஸா துஆச்செய்து முடித்ததும் அவர்,
''ரப்பே! யஹ்யா (அலை) தம்முடைய முரீதீன்களுக்கு
துஆச்செய்யக் கற்றுக் கொடுத்ததுபோல எங்களுக்கும்
துஆ ஒன்றைச் சொல்லிக் கொடு'' என்ருர்.* அதற்கு 2
ஈஸா கற்பித்த துஆவானது, "எங்கள் பரம பிதாவே!
உனது பெயர் பரிசுத்தமானதாகையால் போற்றப்
படுவதாக. உனது இராச்சியம் விரைவில் வருவதாக.*
அன்றன்று எங்களுக்கு வேண்டிய உணவை அன்றன்று 3
எங்களுக்குத் தந்தருள்வாயாக.* எங்களுக்குத் தீமை 4
செய்கிற ஒவ்வொருவரையும் நாங்கள் மன்னிக்கிற
தைப் போல் எங்கள் பாவங்களையும் எங்களுக்கு மன்னி
னிப்பாயாக. நாங்கள் சோதனைக்குட்படுவதிலிருந்து
எங்களை விலக்கிக் காத்தருள்வாயாக.''* மேலும் ஈஸா 5,6
அவர்களிடம், ''உங்களுள் ஒருவன் தன் நண்பனிடம்
நள்ளிரவில் சென்று, உணவைக் கடனுகக் கேட்கிருன்
என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் தன் நண்பனிடம்,
'என் நண்பன் ஒருவன் இப்பொழுதுதான் என் வீட்

டிற்கு வந்திருக்கிறார். அவருக்குச் சாப்பிடக் கொடுப்
பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை. மூன்று ரொட்டிகளை
நீர் எனக்குக் கடனாகக் கொடுக்க வேண்டும்' என்றார்.*
அப்பொழுது அவரோ தன் அறையிலிருந்தபடியே, 7
'என்னை எழுப்பித் தொந்தரவு செய்யாதே! இரா
வேளையானதால் கதவையும் பூட்டி விட்டேன். என்
பிள்ளைகள் உட்பட யாவரும் படுக்கைக்குச் சென்று
விட்டோம். நான் எழுந்து உமக்கு உதவி செய்ய இப்
பொழுது என்னால் முடியாது' என்றார்.* ஆனாலும் 8
அவர் நண்பர் என்ற முறையில் உதவி செய்யாவிடி
னும், அவர் தொடர்ந்து விடாப்பிடியாகக் கேட்கிற
தற்காகவேனும் எழுந்து அவருக்கு வேண்டியதெல்லா
வற்றையும் கொடுப்பார் என்று நான் உங்களுக்குச்
சொல்கிறேன்.*

''இவ்வாறேதான் நீங்களும் தொடர்ந்து கேளுங் 9
கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.
தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் கண்டடைவீர்கள்.
தட்டுங்கள்; அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.*
கேட்கிற எவரும் பெற்றுக்கொள்கிறார். தேடுகிற 10
எல்லோரும் கண்டடைவார்கள். தட்டுகிற யாவருக்கும்
கதவுதிறக்கப்படும்.* உங்களுள் எந்தத் தகப்பனாவது 11
தன் மகன் ரொட்டியைக் கேட்டால் அதற்குப் பதிலா
கக் கல்லைக் கொடுப்பாரா? மீனைக் கேட்டால் மீனுக்
குப் பதிலாக பாம்பைக் கொடுப்பாரா?* அல்லது முட் 12
டையைக் கேட்டால் அவருக்குத் தேளைக் கொடுப்பாரா?
இல்லவேயில்லை.* பொல்லாதவர்களும், பாவ இயல் 13
புள்ளவர்களுமான நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு
வேண்டிய நல்ல நல்ல பொருட்களைக் கொடுப்பீர்
களாயின், உங்கள் பரம பிதா தன்னிடம் கேட்கிறவர்
களுக்கு ரூஹுல் குதுஸானவனைத் தந்தருள்வது எவ்
வளவு நிச்சயம்?'' என்றான்.*

ஈஸாவும் பெயல்செபூலும்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஈஸா பேய் பிடித்த ஊமை 14
மனிதனிலிருந்து பேயை ஓட்டியபோது அம்மனிதன்
பேசத்தொடங்கினார். கூடியிருந்த சனத்திரள் அதைக்
கண்டு ஆச்சரியமடைந்தது.* ஆனால் சிலரோ, ''இவர் 15
பேய்களை விரட்டுவதில் அதிசயமொன்றும் இல்லை. ஏனெ

னில் இவர் பேய்களின் தலைவனாகிய பெயல்செபூலிடம்
இருந்தே இந்த வல்லமையைப் பெற்றிருக்கிறார்''
என்றனர்.* வேறு சிலர் வானத்திலொரு அத்தாட்சி 16
யைக் காட்டவேண்டுமென்று ஈஸாவைச் சோதித்தனர்.*

ஈஸாவோ அவர்களுடைய சிந்தனைகளையறிந்து 17
அவர்களைப் பார்த்து, ''ஒரு அரசாட்சியில் ஒன்றை
யொன்று எதிர்த்துத் தன்னையே அழிக்கக்கூடிய பிரிவு
கள் இருந்தால் அது அழிந்து போய்விடும். அப்படியே
ஒரு வீட்டில் ஒன்றையொன்று எதிர்த்துப் போராடும்
பிரிவினைகளும், போராட்டங்களும் இருந்தால் அந்தக்
குடும்பமும் அழிந்து விடும்.* ஆகையால் நீங்கள் சொல் 18
வது உண்மையானால், சைத்தான் எனக்கு வல்லமை
யைக் கொடுத்துப் பேய்களை விரட்டும்படி தன்னைத்
தானே எதிர்த்துப் போராடுகிறான் என்கிறீர்களா? அப்
படியானால் சைத்தானின் இராட்சியம் எப்படி நிலைத்து
நிற்கும்?* மேலும் நான் பெயல்செபூல் எனப்பட்ட 19
சைத்தானிடமிருந்து வல்லமையைப் பெற்றுப் பேய்
களை ஒட்டுகிறேன் என்றால் உங்களிடையேயுள்ள பேய்
விரட்டுவோர் யாரைக் கொண்டு இதைச் செய்கிறார்
கள்? நீங்கள் கூறுவது சரியானதா என்றுஅவர்களிடமே
கேளுங்கள். அவர்களே நீங்கள் கூறுவது தவறான
தென்று தீர்ப்பளிப்பார்கள்.* ஆனால் நான் இறை 20
வனின் வல்லமையினால் பேய்களைத் துரத்துகிறேனாயின்,
இறைவனின் இராட்சியம் ஏற்கனவே வந்துள்ளது என்
பது உறுதி.* ஒருவன் வலியவனாய் ஆயுதம் பூண்டு 21
தன் அரண்மனையைக் காவல் செய்யும்போது அது
பத்திரமாயிருக்கும்.* அவனை விட வலிமை வாய்ந்த 22
ஒருவன் வல்ல ஆயுதங்கள் தரித்துவந்து அவனை மேற்
கொண்ட போது அவன் படைக்கலன்களைப் பறித்து
உடைமைகளையும் கொள்ளையிடுவான்.* என்னைச் 23
சாராதவர் எனக்கு விரோதமாயிருக்கிறார். எனக்கு
உதவிசெய்யாதவர் எனக்குத் தீங்கிழைக்கிறார்.''*

நஜீஸான ரூஹ் திரும்பி வருதல்

''ஒரு மனிதனைப் பிடித்திருந்த நஜீஸான ரூஹ் 24
விரட்டப்பட்டபோது அது வரண்ட பாலைவனத்துக்குச்
சென்று, அலைந்து திரிந்து, இளைப்பாறுமிடம் தேடியும்
கிடைக்காவிட்டால் அது, 'நான் விட்டுவந்த மனி

தனிடமே திரும்பிச் செல்வேன்' என்று சொல்லியது.*
அப்படி திரும்பி வந்தபோது, அது தன் வசிப்பிடம் 25
சுத்தமாக்கப்பட்டு ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பதைக்
கண்டது.* அப்போது அது திரும்பிப்போய் தன்னைவிட 26
பொல்லாத வேறு ஏழு ரூஹ்களைக் கூட்டிக்கொண்டு
வந்து அவற்றுடன் அவனுக்குள் புகுந்து குடிகொண்டது.
அப்பொழுது அந்த மனிதனுடைய நிலைமை முன்னைய
நிலைமையைவிட ஏழுமடங்கு கேடுள்ளதாயிருக்கும்.''*

உண்மையான பரக்கத்து

ஈஸா இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் அக் 27
கூட்டத்திலிருந்த பெண் உரத்த சத்தமாய் அவனிடம்,
''இறைவன் உன்னுடையை தாயை ஆசிர்வதிப்பான்.
உன்னைப்பெற்றெடுத்துப் பாலூட்டிய தாய் பரக்கத்துப்
பெற்றவள்'' என்று வாழ்த்தினாள்.* அதற்கு ஈஸா, 28
''ஆம்! ஆனாலும் இறைவனின் வார்த்தையைக் கேட்டு,
அதைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர்களே
அதைவிட மேலான பரக்கத்துப் பெற்றவர்கள்''
என்றான்.*

அற்புதத்தை அடையாளமாகக் கேட்டல்

மக்கள் திரள் திரளாய்க்கூடிவந்து ஈஸாவை 29, 30
நெருக்கிக்கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்கு
அவன் போதித்ததாவது:– ''இது பொல்லாத மக்கள்
நிறைந்த பொல்லாத காலம். இவர்கள், நான் மனித
குமாரன் என்பதை நிரூபிக்க வானத்தில் அற்புதமாக
அடையாளங்களைக் காட்டும்படி கேட்கிறார்கள். ஆனால்
நினிவே பட்டணத்திற்கு யூனுஸ் நபி இறைவனால்அனுப்
பப்பட்டதைப் போன்றதோர் அடையாளத்தையே
நான் இவர்களுக்குக் கொடுப்பேன். அது நான் அவர்
களிடம் இறைவனால் அனுப்பப்பட்டேன் என்பதை
உணர்த்தும்.* இறுதித்தீர்ப்பு நாளில் ஷீபா 31
தேசத்து அரசி எழுந்து, இந்தச் சந்ததியாரைச் சுட்டிக்
காட்டி அவர்கள் மேல் குற்றம் சுமத்துவாள். ஏனெனில்
இவள் சுலைமான் நபியின் ஞானத்தை நேரில் கேட்டு
அறிந்துகொள்வதற்குப் பல தொல்லைகளுக்கூடாக நீண்ட
பிரயாணம் செய்து அவரிடம் வந்தாள். ஆனால்
இதோ! சுலைமானிலும் பெரியவர் இங்கேயிருக்

கிறுர்.* இறுதித்தீர்ப்பு நாளில் நினிவே மக்களும் 32
எழுந்து, இந்தச் சமுதாயத்தின் மேல் குற்றம் சுமத்து
வார்கள். ஏனெனில் யூனுஸ் நபியின் போதனையைக்
கேட்டபோது அவர்கள் மனந்திரும்பினுர்கள். இதோ!
இங்கேயிருப்பவன் யூனுஸ் நபியை விடப் பெரியவன்.
ஆனுல் இந்தச் சமுதாயம் அவனுக்குச் செவிகொடுக்க
வில்லை.''*

ஒளிவிளக்கு

''ஒரு விளக்கைக் கொழுத்தி மறைத்தோ, பாத்தி 33
ரத்தால் மூடியோ வைப்பவன் உண்டா? இல்லை.
அறைக்குள் வரும் எல்லோருக்கும் வெளிச்சம் கொடுக்
கத்தக்கதாக ஒரு உயரமான இடத்திலல்லவா வைப்
பான்.* உன் கண்ணுனது உடலின் விளக்காயிருக்கி 34
றது. உன் கண் தெளிவாயிருந்தால் உன் உடல் முழு
வதும் ஒளியுள்ளதாயிருக்கும். உன் கண் பொல்லாங்கு
நிறைந்து இருந்தால் ஒளியை அகற்றி உன்னை இருளுக்
குள் இழுத்துவிடும்.* ஆகையால் உன்னிலுள்ள ஒளி 35
இருளாகாதபடி எச்சரிக்கையாயிரு.* உன் உடலில் ஒரு 36
பகுதியிலாவது இருளில்லாது முற்றுக உள்ளிருந்து ஒளி
யினுல் நிரம்பியிருந்தால் ஒரு பிரகாசமான விளக்கு
ஒளி கொடுப்பதைப்போல உன் முகமே பிரகாசிக்கும்.''*

பரிசேயர், புக்கஹாக்களின் போலிப் பக்தி

ஈஸா பேசிக்கொண்டிருக்கையில் பரிசேயருள் 37-38
ஒருவர் அவனைத் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார்.
அவன் வீட்டிற்குள் போனதும் சாப்பிடுவதற்காக உட்
கார்ந்தான். ஆனுல் அவன் யூதவழக்கத்தின்படி சாப்
பிடுவதற்கு முன் செய்ய வேண்டிய — கழுவிச் சுத்தம்
செய்யும் முறைமையை அனுசரிக்கவில்லை. எனவே
அந்தப் பரிசேயர் மிகவும் வியப்படைந்தார்.* அப் 39
பொழுது ஈஸா அவரிடம், ''பரிசேயராகிய நீங்கள்
வெளிப்புறத்தைச் சுத்தம் செய்கிறீர்கள். ஆனுல் உங்
கள் உட்புறமோ பேராசையினுலும், பொல்லாங்கினு
லும் நிறைந்து நஜீஸாயுள்ளது.* மதிகேடரே! 40
வெளிப்புறத்தையுண்டாக்கிய இறைவன் உட்புறத்தை
யும் உண்டாக்கவில்லையா?* உங்களுக்கு உள்ளவற்றில் 41
தாராளமாய்க் கொடுங்கள். அப்பொழுது யாவும்
சுத்தமுள்ளதாயிருக்கும்.*

''பரிசேயரே உங்களுக்கு ஐயோ! கேடுவரும். ஏனெ 42
னில் நீங்கள் உங்களுக்குக் கிடைக்கும் ஊதியம், வரு
மானம் யாவற்றிலும் தசம பாகத்தைக் கொடுப்பதில்
மிகவும் கவனமாயிருக்கிறீர்கள். ஆனால் நியாயத்தை
யும், இறைவனின் அன்பையும் முற்றாக மறந்து போனீர்
கள். ஆம்! நீங்கள் தசமபாகம் கொடுக்க வேண்டும்.
ஆனால் இவற்றையும் தவறாது கடைப்பிடித்து வந்தி
ருக்க வேண்டும்.* பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! 43
கேடுவரும். நீங்கள் பைத்துல்லாஹ்களில் மதிப்பிற்
குரியவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட முதன்மையான
ஆசனங்களையும் சந்தைவெளிகளில் பிறரிடமிருந்து
மரியாதைக்குரிய வணக்கங்களையும் பெறவிரும்பு
கிறீர்கள்.*

''ஆனால் பயங்கரமான தீர்ப்பு உங்களுக்குக் காத்தி 44
ருக்கிறது. ஏனெனில், நீங்கள் வயல் வெளிகளில்
மறைந்திருக்கும் கபுறுகளைப்போல இருக்கிறீர்கள்.
அதன் வழியே போகும் மனிதன் அதனுள்ளிருக்கும்
ஊழலையும், நஜீசையும் அறிவதில்லை'' என்றான்.*

அப்பொழுது அங்கிருந்த ஷரீஅத் சட்ட வல்லுன 45
ரில் ஒருவன் ஈஸாவிடம், ''உஸ்தாதே! நீ இப்படிக்
கூறி எம்மை அவமதித்து விட்டாயே'' என்றார்.*
அதற்கு ஈஸா, ''ஆம்! ஷரீஅத் சட்ட வல்லுனர்களே! 46
அதே பயங்கர விளைவுகள் உங்களையும் எதிர்நோக்கி
யுள்ளன. ஏனெனில், நீங்கள் கடைப் பிடிப்பதற்குக்
கடினமான மத அனுஷ்டானங்களை மனிதர்மேல் சுமத்து
கிறீர்கள். ஆனால் நீங்களோ அவற்றைக் கடைப்பிடிக்க
ஒருபோதும் முயற்சி செய்வதேயில்லை.* ஐயோ! உங் 47
களுக்குக் கேடுவரும். பல காலத்திற்கு முன் நபிமார்
களை உங்கள் முன்னோர்கள் கொலைசெய்தார்கள். நீங்
களோ அவர்களுக்குச் சமாதி கட்டுகிறீர்கள்.* கொலை 48
காரரே! உங்கள் முன்னோர்களின் செயல்களுக்கு உடன்
பட்டவர்களென்று நீங்கள் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.
அவர்கள் செய்ததையே நீங்களும் செய்கிறீர்கள். அவர்
கள் கொன்றார்கள். நீங்களோ சமாதி கட்டுகிறீர்கள்.*
உங்களைக்குறித்து இறைவன் கூறும் வார்த்தைகள் 49
இதுவே! 'நான் உங்களிடம் நபிமார்களையும் ரஸூல்
மார்களையும் அனுப்புவேன். அவர்களுள் சிலரை நீங்கள்
கொலைசெய்வீர்கள். ஏனையோரைத் துன்புறுத்திக்

கலைத்துவிடுவீர்கள்.'* உலகத்தோற்ற முதல் கொலை 50
யுண்ட இறைவனால் அனுப்பப்பட்ட ஊழியர்கள்
யாவரினதும் இரத்தப்பழிக்கு இந்தத் தலைமுறையின
ராகிய நீங்களே பொறுப்பாளிகளாய் இருக்கிறீர்கள்.*
ஆபீல் நபியின் கொலைமுதற்கொண்டு பைத்துல் 51
முகத்தஸிலுள்ள பலிபீடத்திற்கும் பரிசுத்த இடத்திற்
கும் இடையில் கொலையுண்ட ஸெகர்யா நபியின்
இரத்தம்முடிய சிந்தப்பட்ட அனைவரினது இரத்தத்
திற்கும் இந்தத்தலைமுறையினரிடம் பழிவாங்கப்படும்.
ஆம்! நிச்சயமாக உங்களுக்கெதிராகவே அப்பழி
இருக்கும்.*

''ஷரீஅத் சட்டவல்லுனர்களே! உங்களுக்கு 52
ஐயோ! கேடுவரும். அறிவுக்கான திறவுகோலாகிய
சத்தியத்தை நீங்கள் அறிந்தும், மக்களிடமிருந்து
அதை மறைக்கிறீர்கள். நீங்கள் ஏற்றுக்கொள்வது
மில்லை; மற்றவர்கள் அதை ஏற்று விசுவாசிப்பதற்கும்
தடையாயிருக்கிறீர்கள்'' என்ருன்.* இதைக்கேட்டது 53, 54
முதல் பரிசேயரும், புக்கஹாக்களும் உஸ்தாதுமார்
களும், ஈஸாவுக்கு எதிராகச் சீறி எழுந்தார்கள். அவ
னிடம் பல கேள்விகளைக் கேட்டு அவனுடைய பேச்சில்
அவனைச் சிக்கவைக்கலாமென்று நினைத்துத் தந்திரமான
கேள்விகளை அவர்கள் சிந்திக்கத் தொடங்கினர்கள்.
இப்படியாக அவன்மேல் குற்றம்சாட்டிக் கைதுசெய்
யச் சதியாலோசனை செய்தார்கள்.*

ஓர் எச்சரிக்கை

12 அவ்வேளையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு
வரையொருவர் நெரித்து மிதிக்கும் அளவுக்கு
அங்கு வந்து கூடினர்கள். அப்பொழுது ஈஸா தன்
னுடைய முரீதீன்களிடம் திரும்பிப் பார்த்துக் கூறிய
தாவது:– ''பரிசேயரின் போலிப் பக்திக்கு எச்சரிக்கை
யாயிருங்கள். அது மாவுடன் கலக்கும் புளிப்புப்பதார்த்
தத்திற்கு ஒப்பாயிருக்கும். ஏனெனில் அதை எப்பொழு
தும் மறைத்து வைக்க முடியாது.* மாவுக்குள் மறைக் 2
கப்பட்ட புளிப்புப்பொருளைப்போல மறைபொருள்
யாவும் வெளியாக்கப்படும். ஏனெனில் அறியக்கூடாத
இரகசியம் எதுவும் இல்லை.* இருளில் கூறப்பட்டவை 3
எல்லாம் வெளிச்சத்தில் கொண்டு வரப்படும். நீங்கள்

உள்ளறையில் காதோடுகாதாய்ப் பேசியவையும்,
எல்லோரும் கேட்கத்தக்கதாக வீடுகளின் மேலிருந்து
ஒலிபெருக்கப்படும்.*

இறைவனுக்கே பயப்படுங்கள்

''என் அன்பிற்குரிய நண்பரே! உங்களைக் கொலை 4
செய்ய விரும்புகிறவர்களுக்குப் பயப்பட வேண்டாம்.
அவர்கள் உங்கள் உடலைமாத்திரமே கொலைசெய்ய
முடியும். அவர்களுக்கு உங்கள் மேல் எதுவித அதிகார
மும் இல்லை.* ஆனால் நீங்கள் யாருக்குப் பயப்பட 5
வேண்டுமென்று உங்களுக்குக் கூறுகிறேன். உங்களைக்
கொல்லவும், அதன்பின் நரகத்திலே தள்ளவும் அதி
காரமுள்ள இறைவனுக்கே பயப்படுங்கள். ஆம்!
அவனுக்கே பயப்படுங்கள்.* ஐந்து அடைக்கலான் 6
குருவிகளின் விலை என்ன? இரண்டு காசுகள் தானே!
ஆயினும் அவற்றுள் ஒன்றையாகிலும் இறைவன் மறப்ப
தில்லை.* உங்கள் தலையிலுள்ள மயிர்கூட முற்றாக எண் 7
ணப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒருபோதும் பயப்பட
வேண்டியதில்லை. பல அடைக்கலான் குருவிகளைவிட
நீங்கள் அதிக பெறுமதியுள்ளவர்கள்.*

மனிதர்முன் அல்-மஸீஹை அறிக்கைசெய்தல்

''அன்றியும் நான் உங்களுக்குச் சொல்கிறேன், 8
நீங்கள் என்னை இவ்வுலகில் பகிரங்கமாக அறிக்கை
செய்வீர்களாயின், மனிதகுமாரனாகிய நான் இறை
வனின் மலக்குகள் முன்பாக நீங்கள் என்னுடையவர்
கள் என்று பகிரங்கமாக அறிக்கை செய்வேன்.* மனி 9
தர் முன்பாக என்னை இன்னானென்று தெரியாதென்று
மறுதலிக்கிறவனை நானும் மலக்குகள் முன்பாக மறு
தலிப்பேன்.* மனிதகுமாரனாகிய எனக்கு விரோதமா 10
கப் பேசிய வார்த்தை எதுவாயினும் அது அவனுக்கு
மன்னிக்கப்படும். ஆனால் எவனாவது ரூஹுல் குதுஸான
வனுக்கு விரோதமாக அவதூறு உரைத்தால் அது
ஒருபோதும் மன்னிக்கப்படமாட்டாது.*

''பைத்துல்லாஹ்களின் ஜமாஅத்தினர், அதிகாரி 11
கள், அலுவலர்கள் முன்னே உங்களை விசாரணைக்காகக்
கொண்டு வரும்போது, நீங்கள் எதை எப்படிக்கூறு

வோம் என்று கவலைப்பட வேண்டாம்.* ஏனெனில், அந்நே 12
ரத்தில் நீங்கள் சொல்லவேண்டிய வார்த்தைகளை ரூஹுல்
குதுஸானவனே உங்களுக்குக் கொடுப்பான்'' என்றான்.*

மதிகேடனான செல்வந்தன்

அப்பொழுது அங்கு கூட்டத்தில் நின்ற ஒரு 13
மனிதன் ஈஸாவிடம், ''உஸ்தாதே! என் தகப்பனுடைய
சொத்தில் எனது பங்கைப் பிரித்து எனக்குத் தரும்படி
என் சகோதரனுக்குச் சொல்லும்'' என்றான்.* ஆனால் 14
ஈஸா அவனிடம், ''மனிதனே! இப்படிப் பாகப் பிரி
வினை செய்ய என்னை உங்கள் நீதிபதியாக நியமித்தவன்
யார்?'' என்று கேட்டான்.* பின்பு அவன் அங்கிருந்த 15
வர்களிடம், ''விழிப்புடன் எச்சரிக்கையாயிருங்கள்;
எவ்விதபொருளாசைக்கும் ஒருபொழுதும் இடங்
கொடுக்காதிருங்கள், ஏனெனில் ஒருவனுடைய மெய்
வாழ்வு அவனுடைய செல்வப் பெருக்கிலல்ல தங்கி
யுள்ளது'' என்றான்.* அப்பொழுது ஈஸா ஒரு உவ 16
மையை அவர்களுக்குக் கூறினான்.*

''ஒரு செல்வந்தனிடம் நல்ல விளைச்சலுள்ள
செழிப்பான வயலொன்றிருந்தது.* அம்மனிதனுடைய 17
களஞ்சியங்களெல்லாம் இந்த வயலின் விளைச்சலினால்
நிரம்பியது. விளைந்த தானியத்தை சேமித்து வைக்க
போதிய இடம் இருக்கவில்லை. எனவே அம்மனிதன்
தனக்குள் இப்பிரச்சினையையிட்டுச் சிந்திக்கலானான்.*
கடைசியாக அச்செல்வந்தன் 'நான் என் களஞ் 18
சியங்களை இடித்துப் பெரிதாக்கிக் கட்டுவேன், அப்பொ
ழுது என் பொருட்கள், தானியம் யாவற்றையும் வைப்
பதற்குப் போதிய இடம் இருக்கும்' என்றான்.* அதைக் 19
கட்டியபின், 'என் நெஞ்சே! இப்பொழுது உனக்குப்
பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருளெல்லாம்
சேமித்து வைத்துள்ளேன். நீ கவலையற்றுச் சுகமாயிரு.
நீ உண்டு, குடித்துக் களிப்புடன் சுகபோகங்களை
அனுபவி! என்று சொல்லிக்கொள்வேன்' என்று சிந்தித்
தான்.* ஆனால் இறைவனோ அம்மனிதனிடம், 'மதி 20
கேடனே! இன்றிரவே உமது உயிர் உம்மைவிட்டு
நீங்கப்போகிறது. அப்போது நீர் சேமித்தவை யாருடை
யதாகும்?' என்று கேட்டான்.* ஆம்! தனக்காக 21
இவ்வுலகில் செல்வங்களை சேர்த்து வைத்தும், இறை
வனின் செல்வம் இல்லாதவன் மதிகேடன்.''*

கவலைப்படாதீர்கள்

பின்பும் ஈஸா தன்னுடைய முரீதீன்களிடம், ''இப் 22
படியிருக்க நாம் உயிர் வாழ என்ன உண்போம் என்றோ,
நம் உடலை மூட எதை உடுப்போம் என்றோ கவலைப்பட
வேண்டாம்.* உணவைவிட உயிரும், உடையைவிட 23
உடலும் மேலானவையல்லவா!* காகங்களைக் கவனித் 24
துப் பாருங்கள். அவை விதைப்பதுமில்லை; அறுவடை
செய்வதுமில்லை. அவற்றிற்குப் பண்டகசாலையோ,
களஞ்சியமோ இல்லை. ஆயினும் அவை ஒரு குறைவு
மின்றி வாழ்கின்றன. ஏனெனில் இறைவன் அவற்றிற்கு
உணவளிக்கிறான். பறவைகளைவிட நீங்கள் எவ்வளவோ
விலையேறப்பெற்றவர்கள்.* மேலும், கவலைப்படுவதனால் 25
என்ன பயன்? கவலைப்படுவதனால் உங்கள் ஆயுளோடு
ஒரு நாளையாவது கூட்டமுடியுமா? நிச்சயமாக இல்லை!
கவலைப்படுவதினால் ஒரு சின்னஞ்சிறு செயலையாவது 26
உங்களால் சாதிக்கமுடியாதெனில் ஏனையவற்றிற்காக
ஏன் கவலைப்படுகிறீர்கள்?*

''காட்டு மலர்களைக் கவனித்துப் பாருங்கள். அவை 27
எப்படி உண்டாகின்றன? அவை உழைப்பதுமில்லை, நூற்
பதுமில்லை நெய்வதுமில்லை. ஆயினும் ஸுலைமான் நபிகூடத்
தமது முழுமாட்சிமையிலும் அவற்றுள் ஒன்றைப்
போலாவது அழகாய் உடுத்தது இல்லை என்று உங்களுக்குச்
சொல்கிறேன்.* அற்பவிசுவாசமுள்ளவர்களே! இன்று 28
மலர்ந்து நாளைவாடிப் போகும் மலரை இவ்வாறு இறை
வன் உடுத்துகிறானென்றால், உங்களுக்கு உடையளிப்பது
எவ்வளவு நிச்சயம் என்பதை நீங்கள் உணரவில்லையா?*
உணவைக்குறித்தும் கவலைப்பட வேண்டாம். என்ன 29
உண்போம் அல்லது குடிப்போம் என்ற நினைவாக இருக்
கவும் வேண்டாம். ஏனெனில் இறைவன் இவற்றையெல்
லாம் உங்களுக்குத் தருவான்.* மனுக்குலம் முழுவதும் 30
இவற்றை எல்லாம் நாடித் தேடுகிறது. ஆனால் இவை
உங்களுக்குத் தேவையென்பது உங்கள் பிதாவாகிய
இறைவனுக்குத் தெரியும்.* இறைவனின் இராட்சியத் 31
திற்குரியவற்றைத் தேடுவதே உங்கள் முதன்மையான
நோக்கமாயிருப்பின், இவற்றுடன் உங்கள் தேவைகள்
அனைத்தையும் எப்பொழதும் அவன் தந்தருளுவான்.*

உண்மையான செல்வம்

''சிறு மந்தையே! பயப்படாதே! ஏனெனில் உங் 32
களுக்குத் தன் இராட்சியத்தை ஈந்தருள்வதில் உங்கள்
பிதாவாகிய இறைவனுக்கு மட்டில்லா மகிழ்ச்சியுண்
டாயிருக்கிறது.* உங்களிடம் உள்ளவற்றைவிற்று 33
தேவையுள்ளவருக்குக் கொடுங்கள். இதனல் இறை
வனின் இராட்சியத்திலுள்ள உங்கள் செல்வத்தை அதி
கரித்துக் கொள்வீர்கள். இப்பணப்பைகள் கிழிந்து
போவதுமில்லை; அழிந்துபோவதுமில்லை. ஏனெனில்,
அங்கேயுள்ள உங்கள் தேடற்கரிய திரவியத்தைத்
திருடர் திருடுவதுமில்லை பூச்சிகள் அரிப்பதுமில்லை.* 34
எங்கே உங்கள் செல்வம் இருக்கிறதோ, அங்கே உங்கள்
மனமும், சிந்தனைகளும் இருக்கின்றன.*

விழிப்பாயிருக்கும் வேலையாட்களுக்கு

''எப்பொழுதும் விழிப்புடன் ஆயத்தமாயிருங்கள். 35, 36
வேலையாட்கள் தங்கள் எஜமான் நிக்காஹ் மஜ்லிஸி
லிருந்து திரும்பி வந்து கதவைத் தட்டியவுடன் கத
வைத் திறக்க ஆயத்தமாய் இருப்பார்கள். உங்கள்
உடைகளை அணிந்தும், விளக்குகளை எரித்துக்கொண்டும்
எந்நேரத்திலும் ஆயத்தமாயிருங்கள்.* இப்படி எஜ 37
மானின் வருகைக்காக விழிப்புடன் காத்திருக்கிற
வர்களுக்கு அதிக மகிழ்ச்சியுண்டாகும். அவ்வெஜமான்
அவர்களைப் பந்தியமரச் செய்து, அவர்களை உபசரித்து
அவர்களண்டை வந்து பணிவிடை செய்வார்.* இரவு 38
ஒன்பது மணிக்கோ, அல்லது நடுச்சாமத்திலோ வரக்
கூடும். எவ்வேளை வந்தாலும், ஆயத்தமாக விழித்துக்
காத்துக்கொண்டிருக்கும் வேலையாட்களுக்கு மிகுந்த
மகிழ்ச்சியுண்டாகும்.*

''திருடன் எந்நேரம் வருவான் என்பதை ஒரு 39
வீட்டுத்தலைவன் அறிவானகில், விழித்திருந்து தன்
வீட்டைத் திருடன் கன்னமிட இடங்கொடுக்கமாட்டான்
அல்லவா?* எனவே நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமா 40
யிருங்கள். ஏனெனில் மனிதகுமாரன் ஆகிய நான்,
திருடனைப்போல் நீங்கள் எதிர்பாராத வேளையில் வரு
வேன்'' என்றுன்.*

நம்பிக்கைக்குரிய வேலைக்காரன்

அப்பொழுது பேதுரு ஈஸாவிடம், ''ரப்பே! 41
இதை எங்களுக்கு மாத்திரம் கூறுகிறீரா? அல்லது
எல்லோருக்குமா கூறுகிறீர்?'' என்று கேட்டார்.* அதற்கு 42,43
ரப்பு, ''எஜமான் ஒருவன் தன் வேலையாட்களைப்
பேணிப் பராமரிக்கும் பொறுப்பைக் கொடுக்கக்கூடிய
வனான விவேகமும், விசுவாசமுள்ள தலைமை வேலை
யாள் போன்றவனுக்கே இதைக் கூறுகிறேன். எஜமான்
திரும்பி வந்து அத்தலைமை வேலையாள் அவ்வேலையைத்
திறமையாகச் செய்திருப்பதைக் காணும்போது அவனுக் 44
குரிய வெகுமதியை அளிப்பான்.* எஜமாள் அத்தலைமை
வேலையாளை தனக்குள்ள எல்லா வற்றின் மேலும்
அதிகாரியாக அமர்த்துவான் என்னும் உண்மையை
உங்களுக்குச் சொல்கிறேன்.*

''ஆனால் அத்தலைமை வேலைக்காரன், 'என் எஜ 45
மான் இப்போது வரமாட்டார். வருவதற்கு அதிக
காலமாகும்' என்று நினைத்து, தான் பாதுகாக்க வேண்டிய
வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும், அடித்தும்
தன் நேரத்தை குடித்து வெறித்துக் களியாட்டங்
களில் செலவழிப்பானாகில்,* எதிர்பாராத வேளையில் 46
எஜமான் திரும்பி வந்து அவனைக் கடுமை
யாகக் தண்டிப்பார். அத்தலைமை வேலையாளை நம்பிக்
கைக்குரிய பதவியிலிருந்து நீக்கி குற்றவாளிகளின்
இடத்துக்குத் தண்டனை பெறும்படி அனுப்புவார்.*

''எஜமானின் விருப்பம் என்ன என்பதை அறிந் 47
திருந்தும் ஆயத்தமில்லாமலோ, தன் கடமைகளை
நிறைவேற்றாமலோ இருக்கும் தலைமை வேலையாள்
கடுந்தண்டனையைப் பெறுவான்.* ஆனால் ஒருவன் தான் 48
செய்வது பிழையென்பதை அறியாது செய்வானாகில்
இலகுவான தண்டனையைப் பெறுவான். எவனிடம்
அதிகமாகக் கொடுக்கப்படுகிறதோ, அவனிடம் மிக
அதிகமாக எதிர்பார்க்கப்படும். எவனிடம் அதிகமாக
ஒப்படைக்கப்படுகிறதோ, அவனிடம் மிக அதிகமாக
கேட்கப்படும்.*

பிரிவினை ஏற்படுதல்

''பூமின்மேல் அக்கினியைப் போட வந்தேன். 49
ஏற்கனவே அது பற்றி எரிந்திருக்க வேண்டுமென
விரும்புகிறேன்.* ஆயினும் கொடிய துன்பமெனும் 50
ஞானஸ்நானம் என்னை எதிர் நோக்கியுள்ளது. அது
நடந்து தீருமளவும் எனக்கு இருக்கும் மனநெருக்கடியை
என்னால் சொல்ல முடியாது.*

''நான் பூமியிலே சமாதானத்தை ஏற்படுத்த 51
வந்தேன் என்று நினைக்கிறீர்கள்? இல்லவே இல்லை!
பிரிவினையையே உண்டாக்க வந்தேன்.* எப்படி
எனில் இதுமுதல் ஒரே வீட்டிலுள்ள ஐந்து பேரிடையே 52
பிரிவினை ஏற்படும். இரண்டுபேர் விரோதமாகவும்
மூன்றுபேர் எனக்காகவும், அல்லது மூன்று பேர் விரோத
மாகவும் மற்றிருவர் எனக்காகவும் இருப்பார்கள்.*
தகப்பன் மகனுக்கும், தாய் மகளுக்கும் விரோதமாகவும் 53
அவர்கள் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளாதவர்
களாகவும் இருப்பார்கள். மாமியும் மருமகளும்
எதிரும் புதிருமாயிருப்பார்கள். அவர்களுக்கிடையே
பிரிவினை காணப்படும்'' என்று ஈஸா கூறினான்.*

பருவகாலத்தின் படிப்பினை

பின்னும் ஈஸா மக்கள் கூட்டத்தைப் பார்த்து, 54
''நீங்கள் மேற்கில் மேகம் உருவாகிறதைக் காணும்
போது, மழை பெய்யுமென்று கூறுகிறீர்கள். நீங்கள்
சொல்வது சரிதான்.* தென் காற்று வீசும்போது 55
வெப்பநிலை அதிகமாகும் என்கிறீர்கள். அப்படியே
நடக்கிறது.* போலிப் பத்தரே! வானத்தின் நிலையில் 56
இருந்து அதன் அறிகுறிகளைக் கண்டறிய உங்களுக்
குத் தெரிகிறதே! ஆனால் உங்களைச் சூழ்ந்துள்ள இந்தக்
காலநிலையை நீங்கள் உய்த்து உணர மறுக்கிறீர்கள்.*
நியாயமானது எது என்பதை நீங்களே நிதானித்துக் 57
கொள்ள மறுப்பதேன்?*

உங்கள்மேல் குற்றம் சுமத்துகிறவரை அவர் நீதி 58
மன்றத்திற்குச் செல்லும் வழியில் நீங்கள் சந்தித்தால்,
அவருடன் உங்களுக்குள்ள வழக்கை அங்கேயே
தீர்த்துக்கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் நீங்கள்
நீதிபதியின்முன் போவதையும், அவர் உங்களைச்

சிறையில் அடைப்பதையும் தவிர்க்கலாம்.* ஏனெனில் 59
நீங்கள் உங்கள் பணம் முழுவதையும் கொடுத்துத் தீர்க்
கும்வரை, உங்களைச் சிறையிலிருந்து விடுவிக்க மாட்
டார்கள்'' என்ருன்.*

மனம் திரும்புதல்

13 அவ்வேளை அங்கு வந்த சிலர் பைத்துல்முகத்தஸில்
தங்கள் பலிகளைச் செலுத்திக் கொண்டிருந்த
சில கலிலேயரைப் பிலாத்து கொலைசெய்தான் என்ற
செய்தியை ஈஸாவுக்கு அறிவித்தனர்.* அதைக்கேட்ட 2
ஈஸா அவர்களிடம், ''அந்தக் கலிலேயருக்கு இவை
நேர்ந்ததால் அவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும்
விடப் பெரும் பாவிகளென்று நினைக்கிறீர்களா?'' என் 3
ருன்.* அப்படியல்ல, நீங்களும் உங்கள் தீயவழிகளிலிரு
ந்து மனம் திரும்பி இறைவனிடம் திரும்பாவிட்டால், நீங்
கள் எல்லோரும் அழிந்துபோவீர்கள்.* சீலோவாமிலே 4
கோபுரம் இடிந்து விழுந்து பதினெட்டுப் பேரைக்
கொன்றதே! அவர்கள் ஜெரூஸலத்திலுள்ள மற்
றெல்லா மனிதரையும் விடப் பெரும்பாவிகள் என்று
நினைக்கிறீர்களா?* அப்படியல்ல என்று உங்களுக்குச் 5
சொல்கிறேன். நீங்களும் மனந்திரும்பாவிட்டால்,
அவ்வண்ணமே நீங்கள் எல்லோரும் அழிந்து போவீர்
கள்'' என்ருன்.*

கனி கொடாத அத்திமரம்

அப்பொழுது ஈஸா பின்வரும் உவமையைக் கூறி 6
ஞன். ''ஒருவன் தன் தோட்டத்தில் அத்தி மரம்
ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் அதில் கனியைப்
பலமுறை தேடிவந்தும் அதில் ஒன்றையும் காணவில்லை,
எனவே அவர் ஏமாற்றமடைந்தார்.* கடைசியில் அவர் 7
தம் தோட்டக்காரனிடம், 'இதோ பாரும் இந்த அத்தி
மரம் மூன்று ஆண்டுகளாகக் கனி கொடுக்குமென்று
காத்திருந்தேன். ஆனல் இதில் ஒன்றையும் காணவில்லை.
இதை வெட்டிப் போடும். இந்த இடம் பாழாகி விடாத
படி உபயோகிக்கலாம் அல்லவா?' என்ருர்.* அதற்கு 8
அம்மனிதன், ' செய்யிதே! இந்த வருடமும் இது
இருக்கட்டும். நான் இதைச்சுற்றிலும் கொத்தி எருப்

போட்டுப் பார்க்கிறேன்.* அடுத்த வருடம் கனி 9
கொடுக்குமானல் நல்லது. இல்லை என்றல் வெட்டிவிட
லாம்' என்றர்.''*

ஓய்வுநாளில் நன்மைசெய்தல்

ஒருசமயம் யூதரின் ஒய்வுநாளன்று ஈஸா பைத் 10
துல்லாஹ் ஒன்றில் போதித்துக் கொண்டிருந்தான்.*
அங்கே கூனிப்போய் சற்றேனும் நிமிர இயலாத 11
நிலையிலிருந்த ஒரு பெண்ணை ஈஸா கண்டான். அவள்
பதினெட்டு வருடங்களாக பலவீனப் படுத்தும் நஜீ
ஸான ரூஹினல் பிடிக்கப்பட்டு இந்நிலையில் இருந்தாள்.*

ஈஸா அவளைத் தன் அருகில் வரும்படி அழைத் 12
தான். பின் அவளிடம், ''பெண்ணே உமது நோயினின்று
விடுவிக்கப்பட்டாய்'' என்று சொல்லி,* அவளைத் தன் 13
னுடைய கைகளினல் தொட்டான். உடனே அவள்
நிமிர்ந்து நின்றள். அவள் இறைவனைப் போற்றிப்
புகழ்ந்து நன்றி செலுத்தினள்.* ஆனல் அந்தப் பைத் 14
துல்லாஹ்விற்குப் பொறுப்பாயிருந்த யூத ஆலிமோ,
ஒய்வு நாளில் ஈஸா குணமாக்கியதையிட்டுச் சினமடைந்
தார். அவர் அங்கிருந்த கூட்டத்தினரிடம், ''வேலை
செய்வதற்கு வாரத்தில் ஆறு நாட்களுண்டு. அந்த
நாட்களில் நீங்கள் வந்து குணமடைந்து கொள்ளுங்கள்,
ஒய்வு நாளில் அப்படிச் செய்யக்கூடாது'' என்று சத்த
மிட்டார்.* அதற்கு ரப்பு மறுமொழியாக. ''போலிப் 15
பக்தரே! நீங்களும் ஓய்வுநாளில் வேலை செய்கிறீர்கள்
உங்கள் மாட்டையாவது, கழுதையையாவது நீங்கள்
தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டு போய் தண்
ணீர் கொடுப்பதில்லையா?* பாருங்கள்! இப்ருஹீம் நபி 16
யின் சந்ததியைச் சேர்ந்த யூதபெண்ணகிய இவள்
பதினெட்டு வருடங்களாகச் சைத்தானல் கட்டுண்ட
வளாயிருந்தாள். இவளை இந்தக் கட்டுகளிலிருந்து
ஓய்வுநாளில் விடுவிக்கக் கூடாதா?'' என்றன்.* ஈஸா 17
இப்படிக் கேட்டதும் அவனுடைய எதிரிகள் அனைவரும்
வெட்கமடைந்தனர். கூடியிருந்த மக்களெல்லோரும்
அவன் செய்த வியக்கத்தக்க செயல்கள் எல்லாவற்
றையும் குறித்து மகிழ்ந்தனர்.*

இறைவனின் இராட்சியம்

அப்பொழுது ஈஸா அவர்களுக்கு இறைவனின் 18
இராட்சியத்தைக் குறித்துப் போதிக்கத்தொடங்கினுன்.
''இறைவனின் இராட்சியம் எதற்கு ஒப்பாயிருக்கிறது?
அதை நான் எதற்கு ஒப்பிடுவேன்?* அது சிறிய கடுகு 19
விதைக்கு ஒப்பாயிருக்கிறது. ஒரு மனிதன் அதை ஒரு
தோட்டத்தில் நட்டான். அது வளர்ந்து மிகவுயர்ந்த
மரமாயிற்று. வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில்
வந்து தங்கின'' என்ருன்.*

மேலும் ஈஸா, ''இறைவனின் இராட்சியத்தை 20
எதற்கு ஒப்பிடுவேன்?* அது மாவுக்கு புளிப்பூட்டும் 21
பதார்த்தத்திற்கு ஒப்பாயிருக்கிறது. ஒரு பெண் அதை
எடுத்து மாவுக்குள் புதைத்து நன்ருகப் பிசைந்து
வைத்தாள். அது மறைந்திருந்து மாவுமுழுவதும் பரவி,
அது புளித்து மெதுவாகும்வரைக்கும் செயல்படுகிறது''
என்ருன்.*

இடுக்கமான வழி

ஈஸா ஊரூராகவும், கிராமங் கிராமமாகவும் 22
போதித்தவாறு ஜெரூஸலத்தையே நோக்கிச் சென்ருன்.*
அப்பொழுது ஒரு மனிதன் அவனிடம் வந்து, ''ரப்பே! 23
இரட்சிக்கப்படுகின்றவர்கள் ஒரு சிலர் தாஞ?'' என்று
கேட்டார். அப்பொழுது ஈஸா அவர்களிடம்,* ''இறை 24
வனின் இராட்சியத்திற்குச் செல்லும் வாசல் ஒடுக்க
மானது. அந்த வாசல்வழியாக உட்செல்ல முயற்சி
செய்யுங்கள். உண்மையென்னவெனில், அநேகர் உட்
செல்ல முயற்சி செய்வார்கள். ஆனுல் அவர்களால்
உட்செல்ல முடியாமற்போகும்.* ஏனெனில், வீட்டின் 25
தலைவன் எழுந்து வந்து கதவைப் பூட்டியபின் கால
தாமதமாய் அவர்கள் வருவார்கள். அப்பொழுது அவர்
கள் வெளியே நின்று கதவைத் தட்டி, 'ஸெய்யிதே!
எங்களுக்குக் கதவைத் திறவுங்கள்' என்று கெஞ்சு
வார்கள், ஆனுல் வீட்டுக்குரியவனே, 'நீங்கள் யார்?
எனக்கு உங்களைத் தெரியாதே!' என்பார்,* அப் 26
பொழுது அவர்கள், நாங்கள் உம்முடன் உண்டு குடித்
தோமே? நீர் எங்கள் வீதிகளில் போதித்தீர் அல்லவா?'
என்று சொல்வார்கள்.* அதற்கு அவரோ, 'உங்களை 27

எனக்குத் தெரியாதே! நீங்கள் யார்? அக்கிரமக்காரரே! நீங்கள் இங்கே வரமுடியாது. இங்கிருந்து போய் விடுங்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன்' என்று சொல்வார்.*

"இப்ருஹீம் நபி, இஸ்ஹாக்கு நபி, யஃகூபு நபி அவர் 28
களும் ஏனைய நபிமார்களும் இறைவனின் இராட்சியத்
தினுள் இருப்பதை நீங்கள் வெளியே நின்று காணும்
போது அங்கே உங்களுக்கு அழுகையும், பற்கடிப்பும்
இருக்கும்.* உலகின் நான்கு திசைகளிலுமிருந்து மக் 29
கள் அங்கு வந்து இறைவனின் இராட்சியத்தில் பந்தி
அமர்வார்கள். * இப்பொழுது இங்கே தாழ்வாகக் கணிக் 30
கப்பட்டவர்கள் அங்கே அதிக மதிப்பு உள்ளவர்களாய்
இருப்பார்கள். இப்பொழுது உயர்வாக மதிக்கப்பட்ட
வர்கள் அப்பொழுது தாழ்ந்தவர்களாயிருப்பார்கள்."*

ஈஸா ஜெரூஸலத்துக்காக வருந்துதல்

அதே வேளை பரிசேயரில் சிலர் ஈஸாவிடம் வந்து, 31
"நீ இங்கிருந்து போய் விடு. ஏனெனில், ஏரோது உன்
னைக் கொலை செய்ய வகை தேடிக் கொண்டிருக்கிறூர்"
என்றனர்.* அதற்கு ஈஸா, "நீங்கள் அந்த நரிக்குச் 32
சொல்லுங்கள், 'இன்றும் நாளையும் நான் பேய்களைத்
துரத்துவேன்; நோயாளிகளுக்குக் குணமளிப்பேன்.
ஆனல் மூன்ரும் நாள் நான் என் பணியின்
இறுதிக் கட்டத்தையடைவேன்.'* ஆம்! இன்றும், 33
நாளையும், அடுத்த நாளும் நான் தொடர்ந்தும் என்
பணியைச் செய்துகொண்டேயிருக்க வேண்டும். ஏனெ
னில் நபி ஒருவர் ஜெரூஸலத்திலேயன்றி வெளியே
கொலை செய்யப்படுவது நடக்க முடியாததொன்ருகும்.

"ஜெரூஸலமே! ஜெரூஸலமே! நபிமார்களைக் 34
கொலை செய்யும் நகரமே! உனக்கு உதவும்படி உன்னிடம்
அனுப்பப்பட்டவர்களுக்குக் கல் எறியும் நகரமே!
கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழ் கூட்டிச்
சேர்த்துக் கொள்ளும்விதமாக, நான் உன் பிள்ளைகளைக்
கூட்டிச்சேர்க்க அதிகமாக விரும்பினேன். ஆனல்
நீயோ அதற்கு இடமளிக்கவில்லை.* இப்பொழுதோ உன் 35
வீடு பாழாகும்படி கைவிடப்பட்டுக் கிடக்கிறது. 'ரப்புல்'

ஆலமினின் பெயரால் வருகிறவன் பரக்கத்துப் பெற்ற
வன்' என்று நீங்கள் அழைக்கும் நாள் வருமளவும்
என்னைக் காணவே மாட்டீர்கள் என்று சொல்கிறேன்''
என்றான்.*

நீர்க்கோவை நோயாளியைக் குணப்படுத்தல்

14 யூத ஓய்வு நாளொன்றில் ஈஸா யூத சங்கத்தின்
அங்கத்தவரான பரிசேயர் ஒருவரின் வீட்டில் உணவு
உண்ணப் போயிருந்தான்.* அங்கே நீர்க்கோவை நோயி 2
னால் வருந்தும் ஒருவர் இருந்தார். அவர்கள் எல்லோ
ரும் கழுகுக் கண்ணோடு, ஈஸா சுகமாக்குவானோ என்று
கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.* ஈஸா அங்கு 3
தன்னைச் சுற்றிவர நின்றுகொண்டிருந்த ஷரீஅத் சட்ட
வல்லுனர்களையும், பரிசேயரையும் பார்த்து, ''ஓய்வு
நாளிலே ஒருமனிதனைச் சுகமாக்குவது நியாயமானதா?
இல்லையா?'' என்று கேட்டான்.* அதற்கு அவர்கள் 4
பதிலளிக்காதிருந்தபோது, ஈஸா அந்த நோயாளியைக்
குணமாக்கி அனுப்பிவிட்டான்.* பின்பு அவர்களிடம், 5
''உங்களில் ஒய்வுநாளில் வேலை செய்யாதவர்கள்
உண்டா? உங்களுள் ஒருவர், தம் மகனாவது, மாடாவது
கிணற்றினுள் விழுந்து விட்டால், ஓய்வுநாளாயிருந்
தாலும் உடனே தூக்கிவிடாதிருப்பாரா?'' என்று
கேட்டான்.* அதற்குப் பதில் சொல்ல அவர்க 6
ளால் முடியாமல் போயிற்று.*

விருந்தில் முதலிடம் விரும்புதல்

விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் 7
முதன்மையான இடத்தைத்தேடி உட்கார்ந்ததை ஈஸா
அவதானித்தபோது, அவர்களுக்குக் கூறிய அறிவுரை
யாவது:-* ஒருவர் உம்மை நிக்காஹ்மஜ்லிஸுக்கு அழைத் 8
தால் பந்தியில் முதன்மையான இடத்தில் போய் உட்
கார வேண்டாம். ஒருவேளை உம்மைவிட மதிப்புக்கு
உரியவர் அழைக்கப்பட்டிருக்கலாம்.* உம்மையும் அவ 9
ரையும் அழைத்தவர் உம்மிடம் வந்து, 'உம்முடைய
இடத்தை இவருக்குக் கொடும்' என்பார். அப்பொழுது
நீர் வெட்கத்தோடு எழுந்து கடைசி இடத்துக்குப் போக
நேரிடும்.* நீர் அழைக்கப்பட்டபோது கடைசி இடத்தில் 10
உட்கார்ந்திரும். அப்பொழுது உம்மை அழைத்தவர் நீர்

அங்கிருப்பதைக் கண்டு உம்மிடம் வந்து, 'நண்பரே!
உமக்காக இதைவிட உயர்வான இடம் உண்டு. அங்கு
வந்து உட்கார்ந்திரும்' என்று அழைப்பார். இவ்வாறு
நீர் அங்குள்ள அனைவர் முன்னிலையிலும் உயர்மதிப்பைப்
பெறுவீர்.* ஏனென்றால், தம்மைத்தாம் உயர்த்துகிற 11
வர்கள் எவரும் தாழ்த்தப்படுவார்கள். தம்மைத்
தாம் தாழ்த்துகிறவர்களோ உயர்த்தப்படுவார்கள்''
என்றான்.*

பின்பு ஈஸா தன்னை விருந்துக்கு அழைத்தவர்க 12
ளிடம், ''நீர் விருந்தை ஏற்பாடு செய்யும் போது,
உமது நண்பர், உமது சகோதரர், உமது உறவினர்,
செல்வந்தரான அயவலர்கள் ஆகியோரை அழைக்க
வேண்டாம். ஏனெனில், அவர்கள் உமது விருந்தைத்
திருப்பி உமக்கு அளிப்பார்கள். அப்பொழுது அது
கைமாறாக ஆகிவிடும்.* அதற்குப் பதிலாக விருந் 13
துக்கு ஏழைகள், ஊனர்கள், முடவர்கள், குருடர்கள்
ஆகியோரை அழைப்பீராக.* அப்பொழுது நீர் பரக்கத் 14
துப் பெற்றவராவீர். அவர்களால் உமக்குக் கைமாறு
செய்ய முடியாவிட்டாலும் நீதிமான்களின் உயிர்த்
தெழுதலின்போது இறைவன் உமக்குக் கைமாறு அருளு
வான்.*

பெரிய விருந்தின் உவமை

ஈஸாவுடன் பந்தியிருந்தவர்களுள் ஒருவர் 15
இதைக் கேட்டபோது அவனிடம், ''இறைவனின்
இராட்சியத்தில் விருந்துண்பவர்கள் பரக்கத்துப்
பெற்றவர்கள்'' என்றார்.* அதற்கு மறுமொழியாக 16
ஈஸா பின்வரும் உவமையைக் கூறினான் :—

''ஒரு மனிதன் பெரிய விருந்தொன்றை ஆயத்தம்
செய்து, பல அழைப்பிதழ்களை அனுப்பினார்.* விருந்து 17
ஆயத்தமானபோது, 'விருந்து ஆயத்தமாகிவிட்டது
வாருங்கள்' என்று சொல்லும்படி, தன் வேலைக்காரனை
அழைக்கப்பட்டவர்களிடம் அனுப்பினார்.* ஆனால் 18
அவர்கள் எல்லோரும் சாக்குப் போக்குச் சொல்ல
ஆரம்பித்தனர். ஒருவன், 'நான் ஒரு வயலை வாங்கிய
தால் அதைக் கட்டாயமாகப் போய்ப் பார்க்கவேண்டும்'
என்று மன்னிப்புக் கோரினார்.* வேறொருவன் 'ஐந்து
ஏர் மாடுகளை வாங்கியிருக்கிறேன், அவற்றை ஏர்பூட் 19

டிச் சோதித்துப் பார்க்கப் போகிறேன்' என்ருர்.*
இன்னெருவன், 'நான் இப்பொழுதுதான் நிக்காஹ்
செய்து கொண்டேன், அதனுல் என்னுல் வரமுடியாது'
என்ருர்.* அழைக்கும்படி போன வேலைக்காரன் 20
திரும்பி வந்து, அவர்கள் கூறியதைத் தன் தலைவனுக்
குக் கூறினுர். அப்போது அவர் சினமடைந்து தம்
வேலைக்காரனிடம், 'நீர் நகரத்திற்குள் போய் வீதி
களிலும், சந்திகளிலுமுள்ள பிச்சைக்காரர். ஊனர்,
முடவர், குருடர் ஆகியோரைக் கூட்டிக்கொண்டு
வாரும்' என்று அவனை அனுப்பினுர்.* அப்படியே 21
வேலைக்காரன் போய்க் கூட்டிக்கொண்டு வந்தார்.*
பின்பு அவ்வேலைக்காரன், 'ஸெய்யிதே! நீர் கட்டளை 22
யிட்டபடி செய்துவிட்டேன். ஆனுல் இன்னும் இடம்
இருக்கிறது' என்ருர்.* அப்பொழுது தலைவன், 'நீர் 23
நாட்டுப்புறத்துக்குச் சென்று, நடைபாதைகளிலும்
வேலிகளருகிலும் இருக்கிறவர்களை வரும்படி கட்டாயப்
படுத்தி அழைத்து வாரும். என் வீடு விருந்தினரால்
நிறையவேண்டும்.* ஏனெனில், நான் முதலில் அழைத் 24
தவர்களில் ஒருவனுவது, நான் அவர்களுக்காகத் தயா
ரித்த விருந்தில் சிறிதளவேனும் சுவை பார்க்கப்போவ
தில்லை' என்ருர்.''*

ஈஸாவின் சீடன்

மக்கள் திரள்திரளாக ஈஸாவின் பின் சென்று 25
கொண்டிருந்தனர். அப்பொழுது ஈஸா அவர்களுக்குக்
கூறியதாவது:—* ''என் சீடனுக என்னைப் பின்பற்ற 26
விரும்புகிற எவனும் தன் தாய், தகப்பன், மனைவி,
பிள்ளைகள், சகோதர சகோதரரிகள், ஏன்! தன்
உயிரையும்விட மேலாக என்னை நேசிக்கவேண்டும்.
அப்படியல்லாவிடில் அவர் என்னை உண்மையாய்ப்
பின்பற்ற முடியாது.* தனக்குரிய சிலுவையைச் 27
சமந்து கொண்டு என்பின் வராதவர் என் சீடனுக
இருக்கமுடியாது.*

விளைவுகளை ஆராய்ந்து பாராமல் ஒன்றையும் ஆரம் 28
பிக்க வேண்டாம். ஏனெனில், ஒரு கட்டடவேலையை
ஆரம்பிக்குமுன் ஒருவர், அதற்காகும் செலவைக்
கணக்கெடுத்து, அதற்குப் பின்பு தம்மிடம் போதுமான
பணம் உள்ளதா என்று பார்ப்பாரல்லவா?* அப்படிச் 29

செய்யாவிடில், அடித்தளம் இட்டபின் தொடர்ந்து
கட்டுவதற்கு வழியில்லாமற் போகும்போது, பார்க்
கின்ற எல்லோரும் பரிகாசம் பண்ணுவார்களே!*
இவர் கட்டத் தொடங்கினுர்; ஆனுல் கட்டிமுடிப்ப 30
தற்குள் அவரிடம் உள்ள எல்லாவற்றையும் செல
வழித்து விட்டாரே!' என்று ஏளனம் செய்வார்கள்.*

எந்த அரசனுவது வேருேர் அரசனேடு போர் 31
புரியப் போகும்போது தன்னுடைய பதினுயிரம் போர்
வீரரைக்கொண்டு, எதிர்த்து வரும் இருபதினுயிரம்
போர்வீரரைத் தாக்குவதற்குப் போதிய சக்தியிருக்
கிறதா என்று, முதலில் அமர்ந்து ஆராயாமல் இருப்
பானு?* எதிர்க்க இயலாது என்று கண்டால், எதிரி 32
தொலேவிலிருக்கையிலேயே போரை நிறுத்துவதற்குத்
தன் பிரதிநிதியை அனுப்பி சமாதானத்திற்கு வழி
தேடுவானல்லவா?* அவ்வாறே, முதலில் ஒருவன் 33
தனக்கு உள்ள அனேத்தையும் ஆராய்ந்த பின் அவற்றை
எனக்காக விட்டுவிடாவிட்டால், அவர் என் சீடனுக
முடியாது.''*

உவர்ப்பு இழந்த உப்பு

உப்பு நல்லதுதான், ஆனுல் அது தன் உவர்ப்புத் 34
தன்மையை இழந்துபோனுல் அதனுல் என்ன பயன்?
உவர்ப்பற்ற உப்பு ஒன்றுக்கும் உதவாது.* அது நிலத் 35
திற்கோ, உரத்திற்கோ உதவாமற்போகும். எனவே
அதை வெளியே எறிந்துவிடுவார்கள். இதைக்கேட்டு
உணர்ந்துகொள்ளும் காதுள்ளவர்கள் இதைக் கவன
மாகக் கேளுங்கள்.''*

காணுமற்போன ஆடு

15 நேர்மையற்ற வரி வசூலிப்பவர்களும், மற்றும்
பேர்போன பாவிகளும் ஈஸா கூறுவதைக் கேட்க
அவனிடம் வந்தவண்ணம் இருந்தனர்.* பரிசேயரும், 2
உஸ்தாதுமார்களும், புக்கஹாக்களும், ''இவன் பாவி
களுடன் அந்நியோன்யமாய்ப் பழகுகிறதுமல்லாமல் அவர்
களுடன் சேர்ந்தும் சாப்பிடுகிறுனே!'' எனக் குறை கூறி
முறுமுறுத்தனர்.* எனவே ஈஸா அவர்களுக்குப் 3
பின்வரும் உவமையைக் கூறினுன்.

''உங்களில் ஒருவனிடம் நூறு ஆடுகள் இருந்தன 4
என்று வைத்துக்கொள்வோம். அவற்றுள் ஒன்று காணு
மற்போய்விட்டால், அவர் மற்றத் தொண்ணூற்றொன்
பது ஆடுகளையும் விட்டுவிட்டுக் காணுமற் போனதைக்
கண்டுபிடிக்கும் வரை காடுமேடு பள்ளமெல்லாம் தேடி
அலைவார் அல்லவா?* அதைக் கண்டுபிடித்தால் மகிழ்ச் 5
சியோடு தம் தோள்மீது சுமந்து வீட்டுக்குக் கொண்டு
போவார்.* வீட்டுக்கு வந்ததும் நண்பரையும், அயலா 6
ரையும் அழைத்து அவர்களிடம், 'காணுமற் போயி
ருந்த என் ஆட்டைக் கண்டுபிடித்து விட்டேன். என்
னுடன் சேர்ந்து மகிழ்ச்சி கொண்டாடுங்கள்' என்பார்.*
அவ்வாறே மனமாற்றமடையத் தேவையில்லாத 7
தொண்ணூற்றொன்பது நேர்மையானவர்களின் பொ
ருட்டு, உண்டாகும் மகிழ்ச்சியைவிட மனமாற்ற
மடைந்து இறைவனிடம் திரும்பும் ஒரு பாவியின்
பொருட்டு, இறைவனின் இராட்சியத்தில் உண்டாகும்
மகிழ்ச்சி மிகுதியாயிருக்கும் என்று நான் உங்களுக்குச்
சொல்கிறேன்.''*

காணுமற்போன வெள்ளிக்காசு

''ஒரு பெண்ணிடம் விலையேறப் பெற்ற பத்து 8
வெள்ளிக்காசுகள் இருந்தன. அவள் அதில் ஒன்றைத்
தொலைத்துவிட்டாள். அவள் விளக்கை ஏற்றி, அதைக்
கண்டடையும்வரை கூட்டிப் பெருக்கி, மூலைமுடுக்கெல்
லாம் தேடுவாள்.* அதைக் கண்டடைந்ததும் தன் 9
நண்பரையும், அயலாரையும் அழைத்து, 'காணுமற்
போன என் வெள்ளிக்காசைக் கண்டு பிடித்து விட்
டேன். என்னோடு நீங்களும் மகிழ்ந்து கொண்டாடுங்
கள்' என்பாள்.* அவ்வாறு ஒரேயொரு பாவி மனம் 10
திரும்பி இறைவனிடம் வரும்போது அவர்பொருட்டு
மலக்குகள் மத்தியில் பெருமகிழ்ச்சி உண்டாகும்.''*

கெட்டழிந்து மீண்ட மகன்

ஈஸா கூறிய மற்றுமோர் உவமை:- ''ஒரு மனி 11
தனுக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள்.* அவர்களுள் 12
இளையவன் தகப்பனிடம் சென்று, 'தந்தையே! சொத்
தில் எனக்குச் சேர வேண்டிய பாகத்தை எனக்குக்
கொடுத்துவிடுங்கள். நீங்கள் மௌத்தாகும்வரை என்

ஞல் காத்திருக்க முடியாது' என்ருர். எனவே தகப்பன்
தன் சொத்தைப் பங்கிட்டு இளைய மகனுக்குக் கொடுத்
தார்.* சில நாட்களுக்குள் இளையமகன் தனக்குரிய 13
எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தூரதேசம்
ஒன்றிற்குப் பயணமாஞர். அங்கே அவர் ஒழுக்கக்
கேடான வாழ்க்கை நடத்தித் தம் சொத்து முழுவதை
யும் பாழாக்கினுர்.* அவர் பணமெல்லாம் செலவழிந்து 14
போனவேளையில் அந்த நாட்டில் கொடிய பஞ்சம்
உண்டாயிற்று. அவர் வறுமையால் வாடி, பட்டினி
யிருக்கத் தொடங்கினுர்.* எனவே அவர் அந்நாட்டி 15
லுள்ள ஒரு பண்ணையாளிடம் சென்று வேலை தேடி
ஞர். அவரைத் தம் பன்றிகளை மேய்ப்பதற்காகப்
பண்ணையாள் அனுப்பினுர்.* அவர் மிகுந்த பசியால் 16
வாடியதால், பன்றிகளுக்குப் போடும் தவிடே மிகச்
சுவையாகத் தோன்றியது. எனவே அவர் அதைச்சாப்
பிட நினைத்தார். அவருக்கு ஒருவரும் உணவு கொடுக்க
வில்லை.*

"அவருக்குப் புத்தி தெளிந்த போது அவர், 'என் 17
தகப்பனின் வீட்டில் எத்தனையோ கூலியாட்கள் உண்டு.
அவர்களுக்கோ தேவைக்கு மேலாக உணவு கிடைக்
கிறது. நானே இங்கே பசியால் சாகிறேன்.* நான் 18
இப்பொழுதே என் தகப்பனிடம் சென்று, 'தந்தையே!
நான் இறைவனின் இராட்சியத்திற்கு விரோதமாகவும்
உங்களுக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன்.*
நான் இனி உங்களுடைய மகன் என்று சொல்லப்படு 19
வதற்குத் தகுதியற்றவன். உங்களுடைய கூலியாட்
களில் ஒருவஞக என்னை வைத்துக் கொள்ளுங்கள்'
என்பேன் என்று சொல்லிக் கொண்டு தன் தகப்பனின்
வீட்டுக்குப் புறப்பட்டுப்போனுர்.*

"தூரத்தில் வரும்போதே அவருடைய தகப்பன் 20
அவரைக் கண்டார். கண்டதும் மனதுருகி. அவரிடம்
ஓடிப்போய், அவரைக் கட்டியணைத்து, முத்தமிட்டார்.*
மகனே தகப்பனிடம், 'அருமைத் தந்தையே! நான் 21
இறைவனுக்கு விரோதமாகவும், உங்களுக்கு விரோத
மாகவும் பாவம் செய்தேன். இனி நான் உங்களுடைய
மகன் என்று சொல்வதற்குத் தகுதியற்றவன்' என்று
சொன்னுர்.

"ஆனால் அவருடைய தகப்பனோ தம் வேலைக்கார 22
ரைக் கூப்பிட்டு, 'நீங்கள் உடனே விரைந்து சென்று,
விலையுயர்ந்த உடையைக் கொண்டு வந்து, இவருக்கு
உடுத்துங்கள். இவர் கைக்கு மோதிரமும், கால்களுக்கு
காலணிகளும் போடுங்கள்.* பட்டியிலிருந்து கொழுத்த 23
கன்றைக் கொண்டு வந்து அறுத்துச் சமையுங்கள். நாம்
விருந்துண்டு மகிழ்ச்சி கொண்டாடுவோம்.* செத்துப் 24
போயிருந்த என் மகனாகிய இவர் மறுபடியும் உயிருடன்
வந்திருக்கிறார். காணாமல் போயிருந்தவர் இப்பொழுது
கிடைத்து விட்டார்' என்றார். அவர்கள் அப்படியே
செய்து விருந்துண்டு மகிழ்ச்சி கொண்டாடினார்கள்.*

"அவருடைய மூத்த மகன் அப்பொழுது வயலில் 25
வேலை செய்து கொண்டிருந்தார். அவர் வீட்டிற்குத்
திரும்பி வந்தபோது, அங்கு நடந்த ஆடல் பாடல்
அவர் காதில் விழுந்தது.* எனவே அவர், அங்கு நின்ற 26
வேலைக்காரருள் ஒருவரை அழைத்து, நடந்துகொண்
டிருப்பது என்ன?' என்று கேட்டார்.* அதற்கு அவ் 27
வேலைக்காரன், 'உம்முடைய சகோதரன் திரும்பி வந்து
விட்டான். அவர் நலமாய்த் திரும்பி வந்ததால் உம்
முடைய தகப்பன் கொழுத்த கன்றை அறுத்து விருந்தை
ஆயத்தம் பண்ணியிருக்கிறார்' என்றார்.* அப் 28
பொழுது மூத்த மகன் சினமடைந்து வீட்டிற்குள் போக
மறுத்து விட்டார். அவருடைய தகப்பன் வெளியே
வந்து அவரை வருந்தி அழைத்தார்.* அவரோ தகப் 29
பனிடம், 'இத்தனை ஆண்டுகளாக நான் உங்களுக்காக
கடினமாக உழைத்து வருகிறேன். ஒருபோதும் உங்
களது கட்டளையை மீறினதேயில்லை. அப்படியிருந்
தும், நான் என் நண்பர்களுடன் விருந்து கொண்டாடி
மகிழ, நீங்கள் ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட எனக்
கென்று ஒருபோதும் கொடுத்ததில்லை.* ஆனால், உங் 30
களுடைய இந்த மகன் விலைமகளிருடன் உங்களது
சொத்து எல்லாவற்றையும் அழித்து விட்டுத் திரும்பி
வந்திருக்கிறான். வந்தவுடனே, இவனுக்காக கொழுத்த
கன்றை அறுக்கிறீர்களே!' என்றார்.

"அதற்குத் தகப்பன், 'மகனே! நீங்கள் எப்பொ 31
ழுதும் என்னுடன் இருக்கிறீர்கள், என்னுடையவை எல்
லாம் உம்முடையவையே!* இப்போது நாம் இப்படிக் 32
களிப்புடன் கொண்டாடுவது முறையானதே! ஏனென்

ருல், இவர் உங்கள் தம்பி, செத்துப்போயிருந்தார்; இப்பொழுது உயிரோடு திரும்பி வந்திருக்கிறுர். காணு மற் போயிருந்தார்; இப்போது கிடைத்துவிட்டார்' என்று மூத்த மகனிடம் கூறிஞர்.''*

நேர்மையற்ற வேலையாள்

16 மேலும் ஈஸா தன்னுடைய முரீதீன்களுக்கு இன்னுமோர் உவமையைக் கூறிஞன்:— ''செல்வந்தன் ஒருவன், தன் கணக்கு வழக்குகளைக் கண்காணிப்பதற்காக ஒருவனை அமர்த்திஞர். அவர் நேர்மையற்ற முறையில் கணக்குகளை நிர்வாகம் செய்
வதைச் செல்வந்தன் கேள்விப்பட்டார்.* அப்பொழுது 2
அவரை வேலைக்கமர்த்திய செல்வந்தன், அவரை அழைத்து, 'நான் உன்னைக்குறித்துக் கேள்விப்பட்ட தென்ன? நீ நேர்மையற்றவனுய் இருக்கிருய் என்று கேள்விப்படுகிறேனே! உன் கணக்கை முடித்து என்னிடம் ஒப்படைத்துவிடு. இனி நீ இந்த வேலையிலிருக்க முடியாது' என்ருர்.*

''அப்பொழுது அந்த வேலையாள் தனக்குள்ளே, 3
'நான் இப்பொழுது என்ன செய்வேன்? என்னை வேலையிலிருந்து விலக்கி விடுவார்களே! மண்கொத்தி வேலை செய்ய எனக்கு வலிமையில்லை. பிச்சையெடுக்கவும்
எனக்கு வெட்கமாயிருக்கிறது.* இந்த வேலையிலிருந்து 4
என்னை நீக்கிஞலும் என்னை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக நான் செய்ய வேண்டியது என்ன என்று எனக்குத் தெரியும்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.*

''பின்பு அவர் தன்னை வேலைக்கமர்த்தியவரிடம் 5
கடன்பட்டவர்களை தன்னிடம் வரவழைத்தார். முதலாவது வந்தவனிடம், 'நீர் என் தலைவரிடம் எவ்வளவு
கடன் வாங்கினீர்?'' என்று கேட்டார்.* அதற்குக் 6
கடன்பட்டவன், 'நூறு குடம் எண்ணெய்' என்ருர். அப்பொழுது அவர், 'இதோ! நீர் கையெழுத்திட்ட கடன் பத்திரம். அதைக்கிழித்து விட்டு கடனின் அரைப் பங்கை உமது கடஞக எழுதிக்கொடும்' என்ருர்.*
அடுத்து வந்தவனிடம், 'நீர் வாங்கின கடன் எவ் 7
வளவு?' என்று கேட்க அவர், 'ஆயிரம் புசல் கோதுமை

என்றார். அதற்கு அவர் 'இதோ உம்முடைய கடன் பத்திரம் இதை எடுத்து அதற்குப் பதிலாக எண்ணூறு புசல் என்று எழுதிக்கொடும்' என்றார்.*

''நேர்மையற்றவனாகிய அந்த வேலைக்காரன் இப் 8
படித் தந்திரமாக புத்திக்கூர்மையுடன் எதிர்காலத்தை நினைத்து நடந்து கொண்டதினால் அவரை அச்செல்வந்தன் பாராட்டினார். ஒளியின் பிள்ளைகளாகிய இறைப்பற்றுள்ளவர்களைப் பார்க்கிலும், இவ்வுலகத்தின் பிள்ளைகள் தங்கள் தலைமுறைக்கேற்ப விவேகமாய் நடந்து கொள்கிறார்கள் என்பது எவ்வளவு உண்மை.*
நேர்மையற்ற முறையில் உங்களுக்கு நண்பரைச் சம் 9
பாதிக்கும்படி, நான் உங்களுக்குக் கூறவா? இதனால் உங்களுக்கென்று நித்திய வீட்டை அடைவதை நிச்சயிக்க
முடியுமா?* இல்லை, ஏனெனில் நீங்கள் சிறியவற்றில் உண் 10
மையுள்ளவர்களாய் இருந்தாற்தான் பெரியவற்றிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்கமுடியும், சிறியவற்றில் நேர்மையற்றவனாய் ஏமாற்றுகிறவன், பெரியவற்றிலும்
நேர்மையுள்ளவனாய் இருக்க முடியாது.* உலகப் 11
பொருட்களில் நீங்கள் உண்மையற்றவர்களாய் இருப்பீர்களாயின், மெய்ப்பொருளான இறைவனின் இராட்சியத்தின் உண்மைச் செல்வத்தை உங்களை நம்பி உங்
களிடம் ஒப்படைப்பவன் யார்?* பிறருடைய பொருட் 12
களில் நீங்கள் உண்மையற்றவர்களாய் இருப்பீர்களாயின் உங்களை நம்பி உங்களுக்குச் சொந்தமாக எதையும் ஏன் கொடுக்க வேண்டும்?* ஏனெனில் எவனும்
இரண்டு தலைவர்களின் கீழ் வேலைக்காரனாயிருக்க முடி 13
யாது. அவன் ஒருவனைப் பகைத்து மற்றவனுக்கு அன்புடன் உண்மையாய் பணியாற்றுவான்; அல்லது அவன் ஒருவனோடு சார்ந்துகொண்டு மற்றவனைப் புறக்கணிப்பான். இறைவனுக்கும், பணத்துக்கும் ஒரேவேளையில் பணியாற்ற முடியாது.''*

ஷரீஅத் சட்டமும் இறைவனின் இராட்சியமும்

பண ஆசை பிடித்த பரிசேயர் இவற்றைக் கேட்ட 14
தும் ஈஸாவை இகழ்ந்தார்கள்.* அப்பொழுது ஈஸா 15
அவர்களிடம், ''மனிதர் முன் நீங்கள் உங்களைப் பக்தியும், நிதியும் உள்ளவர்களாகக் காட்டிக்கொள்கிறீர்கள். ஆனால், இறைவன் உங்கள் பொல்லாத இருதயத்தை

அறிவான். உங்கள் போலிப் பக்தியினுல் மனிதரிட மிருந்து பெருமதிப்பைப் பெறுகிறீர்கள். ஆனுல் இறைவனின் பார்வையிலோ அது அருவருப்பாயிருக்கிறது.*
மூஸா நபியின் ஷரீஅத் சட்டமும், நபிமார்களின் செய் 16
திகளும், ஞானஸ்நானம் கொடுத்த யஹ்யா நபி போதிக்கத் தொடங்கிய காலம் வரைக்கும் உங்களே வழிநடத்தியது. அதற்குப் பின்பு, யஹ்யா நபி தமது நற்செய்தியில், 'இறைவனின் இராட்சியம் விரைவில் வர இருக்கிறது' என்று போதித்தார். இப்பொழுது அநேகர் ஆவலுடன் நெருக்கி அடித்துக் கொண்டு
அதனுள் நுழைகிருர்கள்.* அப்படியாயின் ஷரீஅத் 17
சட்டம் அதன் தன்மையில் சிறிதளவேனும் குறைந்து விட்டது என்று அர்த்தமல்ல. 'விண்ணும் மண்ணும் ஒழிந்தாலும், அதில் ஒரு எழுத்தின் பகுதியாகிலும் அழியாது.*

"ஒருவன் தன் மனேவியை தலாக் செய்துவிட்டு 18
வேறொரு பெண்ணே நிக்காஹ் செய்தால் அவர் விபச்சாரத்தைக் குறித்த நெறியில் தவறியவராவார். தலாக் செய்யப்பட்ட பெண்ணே நிக்காஹ் செய்கிறவனும் விபச்சாரத்தைக் குறித்தநெறியில் தவறியவராவார்" என்ருன்.*

செல்வந்தனும் லாசருவும்

மேலும் ஈஸா கூறியதாவது:- "மிகுந்த செல்வ 19
முடைய மனிதன் ஒருவன் இருந்தார். அவர் தினந்தோறும் வெகு ஆடம்பரமான விலேயுயர்ந்த உடைகளே அணிந்தும், வாழ்க்கையில் சுகபோகங்களே அனுப
வித்தும் வந்தார்.* லாசரு என்னும் பெயருடைய 20
ஏழையொருவன் உடல் முழுவதும் பருக்களும், புண்களும் நிறைந்தவனுயிருந்தார். அவர் அச்செல்வச் சீமா
னின் வீட்டு வாசலருகில் கிடந்தார்.* அவர் அங்கே 21
அச்சீமானின் மேசையிலிருந்து சிதறி விழும் சிறு துணிக்கைகளால் தன் பசியைப் போக்கலாமென்று ஆவலுடன் காத்திருந்தார். நாய்கள் வந்து அவர் புண்ணே நக்கின.*

"கடைசியில் அந்த ஏழை இறந்தபோது, மலக்குகள் 22
அவரை இப்ருஹீம் நபியின் மடியிலே இறந்த நீதிமான்களுக்குரிய இடத்திலே கொண்டு போய் விட்டார்கள்.

பின்பு அந்தச் செல்வந்தனும் இறந்து அடக்கம் பண்
ணப்பட்டார். *அவர் நரகத்துக்குப் போனூர். அங்கே 23
அவர் வேதனைப் படும்போது மேலே பார்த்தார்.
தொலைவில் இப்ருஹீம் நபியையும் அவர் மடியில் லாசரு
வையும் கண்டார்.*

''உடனே அவர், 'தந்தை இப்ருஹீமே! நீங்கள் 24
எனக்கு இரங்கி லாசரு தம் விரலைத் தண்ணீரில் தோய்
த்து என் நாவைக் குளிரப்பண்ணும்படி அனுப்புங்கள்.
இந்தத் தீச்சுடரில் நான் வேதனைப்படுகிறேனே!' 'என்று
சத்தமாய்க் கூப்பிட்டார்.* அதற்கு இப்ருஹீம் நபி, 25
'மகனே! நீர் பூமியில் வாழ்ந்தபோது, உம் வாழ்
நாளெல்லாம் உமக்கு வேண்டிய சுகபோகங்கள் யாவற்
றையும் அனுபவித்தீர். லாசருவோ யாதொரு நன்மை
யையும் அனுபவிக்கவில்லை. எனவே, இப்போது அவர்
ஆறுதலடைகிறுர். நீரோ வேதனைப்படுகிறீர்.* மேலும், 26
எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளவு
ஒன்று உண்டு. ஆகையால் இவ்விடத்திலிருந்து உங்
களிடம் வரவிரும்புகிறவர்கள் கடந்துவர முடியாது.
அவ்விடத்திலிருந்தும் எங்களிடம் ஒருவரும் இதைக்
கடந்து வரமுடியாது' என்றுர்.*

''அதற்கு அந்தச் செல்வந்தன், 'தந்தை இப்ருஹீமே! 27
அப்படியானுல் லாசருவை என் வீட்டாரிடம்
அனுப்புங்கள்.* ஏனெனில், எனக்கு ஐந்து சகோதரர் 28
கள் உண்டு. இறக்கும்போது அவர்களும் இந்த வேதனை
நிரம்பிய இடத்திற்கு வராதபடி எச்சரிக்க வேண்டும்'
என்றுர்.* ஆனுல் இப்ருஹீம் நபியோ அவரிடம். 29
(மூஸா நபியும், நபிமார்களும்) வேதவாக்கியங்களில்
மறுபடியும் மறுபடியும் அவர்களை எச்சரித்துள்ளார்கள்.
உம் சகோதரர்கள் அவற்றை வாசித்து மனமாற்றமடை
யலாமே!, என்றுர்.* அதற்குச் செல்வந்தன், 'இல்லை, 30
தந்தை இப்ருஹீமே! அவர்கள் அதை வாசிக்கமாட்டார்
கள். ஆனுல் மௌத்தானவர்களுள் ஒருவன் அவர்களிடம்
சாட்சியாகப் போனுல் தங்கள் பாவங்களிலிருந்து மனந்
திரும்புவார்கள்' என்றுர்.* அதற்கு இப்ருஹீம் நபி 31
அவரிடம், 'அவர்கள் மூஸா நபிக்கும், நபிமார்களுக்கும்
செவிசாய்க்காவிடில், மௌத்தானவர்களில் ஒருவர்
உயிரோடெழும்பிப் போனுலும் நம்பமாட்டார்கள்'
என்றுர்.''*

ஈஸாவின் சில போதனைகள்

17 ஒரு நாள் ஈஸா தனது முரீதீன்களிடம் கூறிய
தாவது :- ''பாவச்செயலில் ஈடுபடத்தூண்டும்
சோதனைகள் எப்பொழுதும் உண்டு. ஆனால்,
அவை ஏற்படக் காரணமாயிருப்பவருக்கு ஐயோ !*
அவரின் நிலையோ பரிதாபம்! இச் சிறுவருள் ஒருவன் 2
இடறலடையக் காரணமாயிருப்பவருக்குக் கிடைக்கும்
தண்டனையைப்பார்க்கிலும், அவர் கழுத்தில் திரிகைக்
கல் ஒன்றைக்கட்டிக் கடலில் தள்ளிவிடுவது அவ
ருக்கு நலமாயிருக்கும்.* நான் உங்களுக்குக் கூறும் 3
எச்சரிக்கையாவது, உமது சகோதரர் பாவம் செய்
தால் அவரைக் கடிந்து கொள்ளும். அவர் மனந்திரும்பி
னால் மன்னித்துவிடும்.* ஒரே நாளிலேயே அவர் 4
உமக்கு விரோதமாக ஏழுமுறை குற்றம் செய்ய நேர்ந்
தாலும், ஏழுமுறையும் உம்மிடம் திரும்பத்திரும்ப ஒவ்
வொரு முறையும் மன்னிப்புக் கேட்டால் அவரை மன்
னித்துவிடும்.''*

ஒருநாள் றஸூல்மார்கள் ரப்பிடம், ''எங் 5
களுக்கு அதிக விசுவாசம் தேவை. அதை நாம் எவ்வாறு
அதிகரிக்கச் செய்யலாம் என்று சொல்லும்'' என்றார்கள்*
அதற்கு ஈஸா, ''கடுகுவிதையளவு விசுவாசம் உங் 6
களுக்கு இருக்குமாயின், அதோ! காட்டத்திமரத்தைப்
பார்த்து 'நீ பெயர்ந்துபோய் கடலில் வேரூன்றி
நில்' என்றால் அது அப்படியே ஆகும்.* உங்களில் 7
ஒருவருடைய வேலையாள் வயலில் உழுதுவிட்டு விடு
திரும்பியதும் அவ்வேலையாளிடம், 'நீர் வந்து சாப்பிட
உட்கார்ந்து கொள்ளும்' என்று சொல்வாரா? இல்லை.*
முதலில் அவ்வேலையாள் தன் வீட்டுத்தலைவனுக்கு 8
உணவைத் தயாரித்து, அவர் சாப்பிடும்படி பரிமாறிய
பின்பே சாப்பிடுவார்.* அந்த வேலைக்காரன் தான் 9
கட்டளையிட்டவற்றையெல்லாம் செய்வதற்காக, தலை
வன் அவனுக்கு நன்றி கூறுவாரா? கூறமாட்டார்.* 10
அவ்வாறு நீங்களும் எனக்குக் கீழ்ப்படிந்து எல்லாவற்
றையும் செய்வதனால், புகழப்படத்தக்கவர்கள் என்று
கருதாதீர்கள். நாங்கள் எங்கள் கடமையையே
செய்தோம்' என்று நினையுங்கள்.''*

பத்து குஷ்டரோகிகள்

பின்பு அவர்கள் ஜெருஸலத்தை நோக்கிப் பிர 11
யாணம் செய்துகொண்டிருக்கையில், கலிலேயாவிற்
கும், சமாரியாவிற்கும் இடையிலுள்ள எல்லையை வந்
தடைந்தார்கள்.* அங்குள்ள கிராமத்துக்குள் அவர் 12
கள் சென்றபோது அங்கே தொலைவில் பத்துக் குஷ்ட
ரோகிகள் நின்றுகொண்டிருந்தார்கள்.* ''ஈஸாவே! எங் 13
களுக்கு இரங்குவாயாக'' என்று அவர்கள் சத்தமிட்டுக்
கூப்பிட்டனர்.* ஈஸா அவர்களிடம், ''நீங்கள் யூத 14
ஆலிமிடம்போய் உங்களை அவர்களுக்குக் காட்டுங்கள்''
என்ருன். அப்படியே அவர்கள் போய்க்கொண்டிருக்
கையில், அவர்கள் சுத்தமானுர்கள்.* சுகமடைந்ததைக் 15
கண்டதும் அவர்களில் ஒருவன் உரத்த சத்தமாய்
இறைவனைத் துதித்தவாறு ஈஸாவிடம் திரும்பி வந்தார்.*
ஈஸாவின் காலடியில் முகங்குப்புற விழுந்து, அவ 16
னுக்கு நன்றி செலுத்தினுர். அந்த மனிதன் புறக்கணிக்
கப்பட்ட சமாரியருள் ஒருவனுயிருந்தார்.* அப் 17
பொழுது ஈஸா,''நான் பத்துப் பேருக்கல்லவா சுகமளித்
தேன்! மற்ற ஒன்பதுபேரும் எங்கே?* இந்த யூதரல் 18
லாத மனிதனைத்தவிர இறைவனுக்கு நன்றிசெலுத்த
வேருெருவரும் திரும்பி வந்ததாகத் தெரியவில்லையே''
என்ருன்.* பின்பு ஈஸா அவரிடம், ''நீர் எழுந்துபோம்! 19
உமது விசுவாசம் உம்மை இரட்சித்தது'' என்ருன்.*

இறைவனின் இராட்சியத்தின் வருகை

ஒருநாள் பரிசேயர் ஈஸாவிடம் வந்து, '' இறை 20
வனின் இராட்சியம் எப்பொழுது ஆரம்பமாகும்? ''
என்று கேட்டார்கள். அதற்கு அவன், ''இறைவனின்
இராட்சியம் உங்கள் கண்களுக்குத் தெரியத்தக்கவாறு
வரமாட்டாது.* 'இதோ இங்கே!' அல்லது 'அதோ 21
அங்கே வந்துவிட்டது' என்று உங்களில் ஒருவராலும்
சொல்லமுடியாது. ஏனெனில், இறைவனின் இராட்சி
யம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது'' என்ருன்.*
பின்பு ஈஸா தன்னுடைய முரீதீன்களிடம் இதைக் 22
குறித்துக் கூறியதாவது :– ''மனிதகுமாரனுகிய நான்
உங்களுடன் ஒரு நாளாவது இருக்கவேண்டும் என்று
நீங்கள் விரும்பும் காலம் வருகிறது. ஆனுலும் நான்
அங்கு இருக்கமாட்டேன்.* நான் திரும்பி வந்துவிட் 23

டேன் என்றும், 'இதோ! இங்கே!' அல்லது 'அங்கே!
அந்த இடத்தில் இருக்கிறன்' என்றும் சொல்லுவார்கள்!
நீங்களோ அவர்களை நம்பி, அங்கு போய்த் தேடவேண்
டாம்.* ஏனெனில், மனிதகுமாரனுகிய நான் திரும்பி 24
வரும்போது, ஒருவித சந்தேகமுமின்றித் திட்டமாய்
அறிவீர்கள். வானத்தில் மின்னல் தோன்றும்போது
ஒருதிசையிலிருந்து மறுதிசைவரைக்கும் ஒளி வீசுவதைப்
போல அது இருக்கும்.* ஆனல் அதற்கு முன்பு 25
நான் பல பாடுகள் பட்டு, சமுதாயத்தினுல் தகாதவ
னென்று புறக்கணிக்கப்பட வேண்டும்.*

இறைவனின் காரியத்தில் அசட்டையாய் நூஹ் 26
நபியின் காலத்தில் இருந்தவர்களைப்போல உலகத்தி
லுள்ள மக்கள் மனிதகுமாரனின் வருகையின்போதும்
இருப்பார்கள்.* நூஹ் நபி கப்பலினுள் செல்லும் 27
வரைக்கும் அக்காலத்து மக்கள் உண்டும், குடித்தும்
வெறித்தும், நிக்காஹ் செய்தும், வழக்கம்போல
அசட்டையாய் இருந்தார்கள். பெருவெள்ளம் வந்து
அவர்களை அழித்துப்போட்டது.* அவ்வாறே லூத் நபி 28
யின் காலத்திலும் உலகோர் இருந்தார்கள். அப்பொழுது
மக்கள் உண்டார்கள், குடித்தார்கள், வாங்கினுர்
கள், பயிரிட்டார்கள், வீடுகட்டினுர்கள், இவ்வாறு
நாளாந்த அலுவல்களில் அவர்கள் ஈடுபட்டார்கள்.*
லூத் நபி சோதோமை விட்டுப் புறப்பட்ட அன்று, 29
வானத்திலிருந்து நெருப்பும் கந்தகமும் பொழிந்து
அவர்கள் எல்லோரையும் அழித்துப் போட்டது.*
ஆம், அவ்வாறே மனிதகுமாரனுகிய எனது வருகை 30
யின்போதும் தங்கள் நாளாந்த உலகத்துக்குரியவற்றில்
ஈடுபட்டிருப்பார்கள்.*

அந்நாளில் தம் வீட்டின் மேலிருப்பவர், உடை 31
மைகளை எடுப்பதற்காகத் தம் வீட்டிற்குள் போக
வேண்டாம். அதுபோலவே வயலில் இருப்பவரும் வீட்
டிற்குத்திரும்பிப் போக வேண்டாம்.* லூத் நபியின் 32
மனைவிக்கு நேர்ந்ததை நினைத்துக் கொள்ளுங்கள்.*
தம் உயிரை பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறவர் 33
அதனை இழந்து போவார். தம் உயிரை இழந்து போகிற
வர் அதனைக் காத்துக்கொள்வார்.* அந்த இரவில் 34
இரண்டுபேர் ஒரே அறையில் படுத்திருப்பார்கள். ஒரு
வர் எடுத்துக்கொள்ளப்படுவார்; மற்றவர் கைவிடப்படு

வார்.* இரண்டு பெண்கள் ஒரே திரிகையில் மாவரைத் 35
துக்கொண்டு இருப்பார்கள்.* ஒரு பெண் எடுத்துக் 36
கொள்ளப்படுவாள்; மற்றவள் கைவிடப்படுவாள்
என்று உங்களுக்குச்சொல்கிறேன்'' என்றான்.* அப் 37
பொழுது முரீதீன்கள் அவனிடம், 'ரப்பே! எடுத்துக்கொள்
ளப்பட்டவர்கள் எங்கே இருப்பார்கள்?'' என்று கேட்ட
னர். அதற்கு ஈஸா ''பிணம் எங்கேயோ, அங்கே கழுகு
கள் வந்து கூடும்'' என்றான்.*

இடைவிடாது துஆச் செய்தல்

18 ஒருநாள் ஈஸா, சோர்ந்து போகாமல் பதில்
கிடைக்கும்வரை தொடர்ந்து துஆச் செய்யவேண்
டியதன் அவசியத்தை விளக்க ஓர் உவமையைத் தன்னு
டைய முரீதீன்களுக்குக் கூறினான்.

''ஒரு பட்டணத்தில் நீதிபதியொருவர் இருந்தார். 2
அவர் இறைவனுக்குப் பயப்படாதவரும், மனிதரை
மதியாதவருமாயிருந்தார்.* அந்தப்பட்டணத்திலே 3
ஒரு விதவையும் இருந்தாள். அவள் அவரிடம் அடிக்கடி
சென்று ஒருவன் தனக்கு தீங்கிழைத்தமைக்காக நீதி
வழங்கும்படி மன்றாடினாள்.* ஆனால் நீதிபதியோ 4·5
சிறிதுகாலமாக அவள் விண்ணப்பங்களை பொருட்
படுத்தவில்லை, அவளும் விடாமல் தொடர்ந்து நச்ச
ரித்துக்கொண்டிருந்தாள். 'நான் இறைவனுக்கு அஞ்
சாதவன், மனிதனையும் மதியாதவன், இப்பெண் என்
னைத்தொடர்ந்து தொந்தரவு செய்துகொண்டிருக்
கிறதினால் இவள் நீதியைப் பெறுகிறாளாவென்பதை
நான் கவனிக்கவேண்டும். அல்லது இவள் என்னை
விடாப்பிடியாய் அலட்டிக்கொண்டே இருப்பாள்' என்று
தனக்குள் சொல்லிக்கொண்டார்'' என்றான்.*

பின்னும் ரப்பு, ''அந்தப்பொல்லாத நீதிபதி 6
கூறியதைச் சிந்தித்துப் பாருங்கள்,* இறைவன் தன் 7
னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தன்னை நோக்கி
இரவுபகலாகக் கதறும்போது அவர்களுக்குப் பொறுமை
யுடன் செவிசாய்த்து நீதி நியாயம் வழங்காதிருப்பானா?*
இல்லவே இல்லை! அவர்களுக்கு விரைவிலேயே நியா 8
யம் வழங்குவான் என்று நான் உங்களுக்குச் சொல்
கிறேன். ஆனால், மனிதகுமாரனாகிய நான் திரும்பி

வரும்போது, விசுவாசத்துடன் இருப்பவர்களாய் எத்தனை பேரைக் காண்பேன்?'' என்றான்.*

பரிசேயரும் வரி வசூலிப்பவரும்

மேலும் ஈஸா, தம்மை நேர்மையானவர்கள் என்று 9
நினைத்துக்கொண்டு பிறரை இழிவாகக் கருதுகிற சிலரிடம் கூறிய உவமையாவது:—

''இருவர் துஆச் செய்வதற்காக பைத்துல் முகத்த 10
ஸிற்குப் போனார்கள். ஒருவன் தற்பெருமைகொண்ட
பரிசேயன்; மற்றவன் பிறரை ஏமாற்றிப் பிழைக்கும்
வரி வசூலிப்பவன்.* தற்பெருமை நிறைந்த பரிசேயன் 11
அங்கே நின்று, 'இறைவனே! உனக்கு நன்றி செலுத்து
கிறேன்; ஏனெனில் நான் மற்றெல்லாரையும் போன்ற
பாவியல்ல. விசேடமாக, அதோ! அங்கே நிற்கும்
வரிவசூலிப்பவரைப்போல் பிறரை ஏமாற்றுவது
மில்லை; கொள்ளை அடிப்பதுமில்லை; கெட்ட நடத்
தையோ, அநியாயமோ செய்வதுமில்லை.* நான் 12
வாரத்தில் இருமுறை உணவை முழுவதும் தவிர்த்து
நோன்பிருக்கிறேன், என் வருமானம் அனைத்திலும் பத்
திலொன்றைச் சாணிக்கையாக இறைவனுக்குக்
கொடுக்கிறேன்' என்று தனக்குள் துஆச் செய்தார்.*
ஆனால், வரிவசூலிப்பவரோ, தூரத்தில் நின்று, 13
துஆச் செய்யும்போது வானத்தை நிமிர்ந்து பார்க்க
வும் துணிவற்றவராய், தன் மார்பில் அடித்துக்கொண்டு
இறைவனே! பாவியாகிய எனக்கு இரங்கியருள்வா
யாக' என்று துஆச் செய்தார்.* அந்தப் பரிசேயன் 14
அல்ல; பாவியாகிய இவனே, பாவங்கள் மன்னிக்கப்
பட்டவராய்த் தன் வீடுதிரும்பினார் என்று உங்களுக்
குச் சொல்கிறேன். ஏனெனில், தாம் உயர்ந்தவர்
என்று பெருமைகொள்பவர் தாழ்த்தப்படுவார். தாழ்
மையுள்ளவராய் இருக்கிறவர் எவரும் உயர்த்தப்படு
வார்.''*

ஈஸா சிறு பிள்ளைகளை ஆசிர்வதித்தல்

ஒருநாள் தாய்மாரில் சிலர் தங்கள் பிள்ளைகளை 15
ஈஸாவிடம் கொண்டுவந்து, அவன் அவர்களைத் தொட்டு
ஆசீர்வதிக்கவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால்,
முரீதீன்கள் அவர்களை அங்கிருந்து போய் விடும்படி

வற்புறுத்தினர்கள்.* அப்பொழுது ஈஸா, சிறு 16
பிள்ளைகளைத் தன்னிடம் அழைத்துப் பின்பு முரீ
தீன்களிடம், ''சிறு பிள்ளைகள் என்னிடம் வருகிறதற்கு
இடங்கொடுங்கள். அவர்களைத் தடைசெய்ய வேண்
டாம். ஏனெனில், இறைவனின் இராட்சியம் இச்சிறு
பிள்ளையைப் போன்றவர்களுக்கே உரியது.* இச்சிறு 17
பிள்ளையைப்போல இறைவனின் இராட்சியத்தை விசு
வாசத்துடன் ஏற்றுக்கொள்ளாத எவரும் அதற்குள்
ஒருபொழுதும் செல்லமுடியாது என்று உறுதியாக
உங்களுக்குச் சொல்கிறேன்'' என்ருன்.*

செல்வந்தன் ஒருவனின் கேள்வி

ஒருமுறை யூதமதத் தலைவன் ஒருவர் ஈஸா 18
விடம் வந்து, ''நல்ல உஸ்தாதே! இறைவன் வாக்கு
அளித்த நித்திய மெய்வாழ்வைப் பெறுவதற்கு நான்
என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டார்.* ஈஸா 19
அவரிடம், ''நீர் என்னை நல்லவனென்று ஏன் கூறுகிறீர்?
நீர் கூறுகிறது இன்னதென்று உணர்கிறீரா? உண்
மையில் இறைவன் ஒருவரைத்தவிர நல்லவர் எவ
ரும் இல்லை.* உமது கேள்விக்கு நான்கூறும் விடை 20
யாவது, பத்துக் கட்டளைகள் என்ன கூறுகிறதென்று
உமக்குத் தெரியும்தானே! கற்புநெறியில் தவருதீர்,
கொலை செய்யாதீர், திருடாதீர், பொய்ச்சாட்சி
சொல்லாதீர், உமது பெற்ருேரை உயர்வாக மதித்து
நடப்பீராக என்பன போன்றவை'' என்ருன்.* அதற்கு 21
அத்தலைவன், ''ஆம், இவற்றை எல்லாம் என் சிறுவயது
முதல் கடைப்பிடித்து வந்திருக்கிறேன்'' என்ருர்.*
ஈஸா அதைக்கேட்டு, ''ஆயினும், இன்னும் ஒரு 22
குறை உம்மிடம் உண்டு. நீர் உமக்குள்ள எல்லாவற்
றையும் விற்று ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து
விடும். அவை உமக்கு இறைவனின் இராட்சியத்தில்
செல்வமாக மாறும். அதன் பின்பு நீர் என்னிடம் வந்து
என்னைப் பின்பற்றி வாரும்'' என்ருன்.* இதைக் 23
கேட்ட மனிதனே செல்வச் சீமானுய் இருந்தபடியால்
மிகுந்த துக்கத்துடன் அங்கிருந்து போய்விட்டார்.

அவர் போவதைக் கவனித்து விட்டு, ஈஸா தனது 24
முரீதீன்களிடம், ''செல்வம் மிகுந்தவர்கள் இறை
வனின் இராட்சியத்திற்குள் செல்வது கடினம். அதைப் 25

பார்க்கிலும், ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது இலகு
வானது எனலாம்'' என்ருன்.* அதைக் கேட்டவர்கள், 26
''இது இந்த யூதமதத் தலைவனுக்கே முடியாததாகில்,
வேறு யாருக்குத்தான் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள
முடியும்? '' என்று கேட்டார்கள்.* அதற்கு ஈஸா, 27
''மனிதரால் இயலாதவை இறைவனுல் இயலும்'' என்
ருன்.* அப்பொழுது பேதுரு, ''இதோ! நாம் நமக் 28
குரியவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு உன்னைப்
பின்பற்றுகிருேம்'' என்ருர்.* அதற்கு ஈஸா, 29
''ஆம், உங்களைப்போல் இறைவனின் இராட்சியத்தின்
பொருட்டுத் தம் வீட்டையும், மனைவி, சகோதரர்,
பெற்ருர், பிள்ளைகள் ஆகிய தமக்குச் சொந்தமானவர்
களை விட்டுவிட்டவர் எவரும்,* இம்மையில் இதற்கு 30
மேலானவற்றையும், மறுமையில் நித்திய மெய்வாழ்
வையும் பெற்றுக்கொள்வார் என்று நான் உங்களுக்கு
உறுதியாகக் கூறுகிறேன்'' என்ருன்.*

மரணம் உயிர்த்தெழுதல் முன்னறிவிப்பு

பின்பு ஈஸா தன்னிடம் பன்னிருவரையும் அழைத்து 31
அவர்களிடம், ''நாம் இப்போது ஜெருஸலத்துக்குப்
போகிருேம் என்பதை அறிவீர்கள். நாம் அங்கு போய்ச்
சேர்ந்ததும் மனிதகுமாரனுகிய என்னைக்குறித்து நபி
மார்கள் முன்னறிவித்தவை யாவும் நிறைவேறும்.*
யூதரல்லாதவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர் 32
கள் என்னை ஏளனம் செய்வார்கள், இழிவாக நடத்து
வார்கள், என்மீது துப்புவார்கள்.* வாரிஞல் அடிப் 33
பார்கள், பின்பு கொலை செய்வார்கள். மூன்ரும்
நாளில் நான் மறுபடியும் உயிர்பெற்று எழுவேன்'' என்
ருன்.* ஆனுல் அவர்களோ, இவற்றுள், ஒன்றையும் 34
புரிந்துகொள்ளவில்லை. ஈஸா கூறியது அவர்களுக்குப்
புதிராக இருந்தது. அவன் எதைக்குறித்துப் பேசுகிருன்
என்பதையும் அவர்கள் அறியவில்லை.*

குருடன் பார்வையடைதல்

அவர்கள் எரிகோவை நெருங்கியபோது, அங்கே 35
பாதை ஓரத்தில் குருடன் ஒருவன் உட்கார்ந்துகொண்டு
இருந்தார்.* மக்கள் கூட்டங் கூட்டமாய் அவனைக் 36
கடந்து போகிற சத்தத்தைக் குருடன் கேட்டபோது,

''என்ன, இங்கே நடக்கிறது?'' என்று அவர்களை விசா
ரித்தார்.* ''நாசரேத்தூர் ஈஸா அவ்வழியே போகி 37
ருன்'' என்று சொன்னுர்கள்.* எனவே அக்குருடன் 38
உரத்த சத்தமாய், ''ஈஸாவே! தாவூது நபியின் குமா
ரனே! எனக்கு இரங்கியருளுவாயாக'' என்று கூப்பிட்
டார்.* ஈஸாவுக்கு முன்னுல் நடந்தவர்கள் அக்குரு 39
டனைச் சத்தம் போடாதிருக்கும்படி அதட்டினுர்கள்.
ஆனுல் அக்குருடனே முன்னையைவிட அதிக சத்த
மிட்டு, ''தாவூது நபியின் குமாரனே! என்மேல் இரங்
கியருளுவாயாக'' என்று திரும்பத் திரும்பக் கத்தினுர்.*
ஈஸா அவ்விடத்தை அடைந்தபோது அங்கு நின்று, 40
அந்த மனிதனை என்னிடம் கொண்டுவாருங்கள்'' என்
ருன்.* பின்பு ஈஸா அவரிடம், ''நான் உமக்கு என்ன 41
செய்யவேண்டும்'' என்று கேட்டான். அக்குருடனே,
''ரப்பே! நான் பார்வை பெறவிரும்புகிறேன்'' என்ருர்.*
அதற்கு ஈஸா, ''நீர் பார்வை பெறுவீராக, உமது 42
விசுவாசம் உம்மைக் குணப்படுத்தியது'' என்ருன்,.* 43
உடனே அக்குருடன் பார்வை பெற்ருர். இறைவனைப்
புகழ்ந்துகொண்டே ஈஸாவைப் பின்பற்றிச் சென்ருர்.
நடந்ததைக் கண்ட யாவரும் இறைவனைப் போற்றிப்
புகழ்ந்தார்கள்.*

ஈஸாவும் சகேயுவும்

19 ஈஸா எரிகோ நகருக்குள் சென்று அதன் தெரு
ஒன்றின் வழியாகப் போய்க் கொண்டிருந்தான்.*
அங்கே சகேயு என்னும் பெயருடைய ஒரு மனிதன் 2
வாழ்ந்து வந்தார். அம்மனிதன் வரிவசூலிப்பவர்களுள்
மிகுந்த செல்வம் உடையவர்.* அம்மனிதன் ஈஸா 3
வைப் பார்க்க விரும்பிப் பலமுறை முயற்சிசெய்தும்,
அந்த மனிதன் குள்ளனுய் இருந்தபடியினுல் சனக்கூட்ட
டத்தில் ஈஸாவைப் பார்க்க முடியவில்லை.* எனவே, 4
அவர்கள் எல்லோருக்கும் முன்னுக அவர் ஓடிச்சென்று,
பாதையருகே நின்ற காட்டத்தி மரம் ஒன்றில் ஏறினுர்.*
ஈஸா அவ்விடத்திற்கு வந்தபோது, அங்கே நின்று 5
அண்ணுர்ந்து பார்த்து, அம்மனிதனைப் பேர்சொல்லி
அழைத்தான். ''சகேயுவே! விரைவாக இறங்கி வாரும்.
இன்று நான் உம்முடைய வீட்டுக்கு வந்து உமது விருந்
தாளியாகத் தங்கப்போகிறேன்'' என்ருன்.* அந்த 6

மனிதன் விரைவாக இறங்கி வந்து மகிழ்ச்சிமேலிட
உணர்ச்சிவசப்பட்டவராய் ஈஸாவைத் தமது வீட்
டிற்கு அழைக்குத்துச்சென்ருர்.* ஆனுல் இதைக்கண்ட 7
சனக்கூட்டம், ''இது என்ன? பேர்போன பாவிகளுள்
ஒருவரான இந்த மனிதனின் விட்டுக்கு ஈஸா விருந்
தாளியாகப் போகிருனே!'' என முணுமுணுத்தனர்.*
அப்போது சகேயு ரப்பின் முன் வந்து, ''ரப்பே! நான் 8
இப்போதே என் செல்வத்தில் அரைப்பங்கை ஏழை
களுக்குக் கொடுத்து விடுகிறேன். நான் யார்யாரிடம்
அநியாயமாக வரி அறவிட்டிருக்கிறேனே, அதற்குத்
தண்டமாக அதைப்போல நான்கு மடங்கைத் திருப்பிக்
கொடுத்துவிடுகிறேன்'' என்ருர்.* அதற்கு ஈஸா, 9
''இன்று இந்த வீட்டாருக்கு இரட்சிப்பு வந்திருக்
கிறது என்பதை, இது காட்டுகிறது. இம்மனிதன்
இப்ருஹீம் நபியின் மக்களுள் கெட்டுப்போன ஒருவன்.*
இவரைப்போன்று கெட்டலைந்து, காணுமற்போனவர் 10
களைத் தேடுவதற்கும், அவர்களை இரட்சிப்பதற்குமே
மனிதகுமாரன் ஆகிய நான் வந்தேன்'' என்ருன்.*

பத்து வேலையாட்கள்

ஈஸா ஜெரூஸலத்துக்கு அண்மையில் இருந்த 11
தால், இறைவனின் இராட்சியம் உடனடியாகவே
ஆரம்பிக்கும் என்ற தவருன எண்ணத்தைத் திருத்து
வதற்காக, அங்கிருந்தவர்களுக்கு ஈஸா பின்வரும்
உவமையைக் கூறிஞன்.*

''உயர்குடிப்பிறந்த சீமான் ஒருவன் ஒரு பிர 12
தேசத்தில் வாழ்ந்தார். அப் பிரதேசத்தின் அரச அதி
காரத்தை அச் சீமான் பெற்றுக்கொள்ளும்படி வெகு
தொலைவிலுள்ள அத்தேசத்தின் தலைநகருக்கு அழைக்கப்
பட்டார்.* அவர் போகுமுன் தன் உதவியாளருள் 13
பத்துப்பேரை அழைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும்
பத்தாயிரம் ரூபாவைப் பகிர்ந்து கொடுத்தார். 'நான்
திரும்பி வருமளவும் இதை முதலீடு செய்து
வியாபாரம் செய்யுங்கள்' என்ருர்.*

''ஆனுல், அப்பிரதேசத்திலுள்ளவர்களில் சிலர் 14
இச்சீமானை வெறுத்தார்கள். எனவே, ' இவர் எங்கள்
பிரதேசத்தில் அரசனுயிருப்பது எங்களுக்கு விருப்பம்

இல்லை' என்பதைத் தெரிவிக்கும்படி பிரதிநிதிகளை
அவர் செல்வதற்கு முன்பாகத் தலைநகருக்கு அனுப்பி
னார்கள்.* எனினும், பிரதேச அரசனாக நியமிக்கப்பட்டு 15
அச்சீமான் அதிகாரத்துடன் திரும்பி வந்தார்.*

''திரும்பி வந்ததும், தான் பணம் கொடுத்த
வர்களை அழைத்து, அவர்கள் பணத்தை என்ன செய்
தார்கள், எவ்வளவு ஆதாயம் பெற்றார்கள் என்பதை 16
விசாரித்தார்.* அப்பொழுது முதலாம் பணியாள்
வந்து, கிடைத்த பணத்தை முதலீடு செய்து, அதைப்
பத்து மடங்காக்கியிருப்பதாகக் கூறினார்.* அதற்கு 17
அச்சீமான், 'மிக நன்று; நீர் உத்தமமானவர். நீர்
மிகச் சிறியவற்றில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்த
படியால், உம்மைப் பத்துப் பட்டணங்களுக்கு அதி
காரியாக நியமிக்கிறேன்' என்றார்.*

''அப்படியே இரண்டாம் பணியாளரும் வந்து, 18
கிடைத்த பணத்தை முதலீடு செய்ததில் லாபம்
கிடைத்ததென்றும், அது இப்போது ஐந்து மடங்காகி
உள்ளதென்றும் கூறினார்.* அப்பொழுது அப்பிரதேச 19
அரசன், 'மிகநன்று, நீர் ஐந்து பட்டணங்களின் அதி
காரியாக இரும்' என்றார்.*

''அடுத்தவர் வந்து, 'இதோ! நீர் கொடுத்த 20
பணம்; இதை நான் அப்படியே ஒரு துணியில் சுற்றிப்
பத்திரமாக வைத்திருக்கிறேன்.* ஏனெனில், நீர் மிகக் 21
கொடூரமானவர். நீர் ஆதாயத்தை வலோற்காரமாய்
எடுத்துப்போடுவீர் என்று பயந்தே இப்படிச் செய்தேன்.
நீர் முதலீடு செய்யாத ஆதாயத்தையும், உம்முடையது
அல்லாதவற்றையும் எடுக்கிறவர். விதைக்காததை
அறுவடை செய்கிறவர் என்றும் அறிவேன்' என்றார்.*
அதற்கு அப்பிரதேச அரசன், 'பொல்லாத கொடிய 22
சிந்தனையுடைய மனிதனே! உம் வார்த்தைகளைக்
கொண்டே உமக்குத் தீர்ப்பளிக்கிறேன். நான் கொடூர
மானவன் தானே! முதலீடு செய்யாது ஆதாயத்தை
எடுத்துக்கொள்கிறவன், விதைக்காதபோதிலும் அறு
வடையை எடுத்துக்கொள்கிறவன் என்பதையும் நீர்
அறிவீர்.* அப்படியானால் நீர் ஏன் என் பணத்தை வட் 23
டிக்கு வங்கியில் போட்டு வைக்கவில்லை? நான் வந்து
வட்டியோடு என் பணத்தை வாங்கியிருப்பேனே!'
என்று சொன்னார்.*

''பின்பு அங்கு நின்றவர்களிடம் அப்பிரதேச அர 24
சன், 'இம்மனிதனிடமுள்ள பணத்தை எடுத்து அதிக
ஆதாயத்தைப் பெற்றவரிடம் கொடுங்கள்' என்ருர்.*
அதற்கு அவர்கள்., 'செய்யிதே! அவரிடம்தான் மிகு 25
தியாய் உள்ளதே' என்றனர்.* அப்பொழுது அப்பிர 26
தேச அரசன், 'ஆம், உண்மையில் உள்ளவர்களுக்கே
மேலும்மேலும் கிடைக்கும். ஆனல் சிறிதளவு உள்ள
வர்கள் அதையும் விரைவில் இழந்து விடுவார்கள்.*
மேலும் நான் பிரதேச அரசனுவதை விரும்பாமல், 27
எனக்கு எதிராக எழும்பியவர்களை இங்கே இப்பொழுது
கொண்டுவாருங்கள். அவர்களை என் முன்பாக வெட்டி
வீழ்த்துங்கள்' என்ருர்.'' (இது ஈஸா கூறிய ஓர் உவமை
யாகும்).*

ஈஸாவின் பவனி

இவற்றைச் சொன்னபின்பு ஈஸா தனது முரீதீன் 28
களுக்கு முன்னக, ஜெரூஸலத்தை நோக்கிச் சென்ருர்.*
அவர்கள் ஒலிவமலேக்கு அருகிலுள்ள பெத்பகே, 29
பெத்தானியா என்னும் ஊர்களை நெருங்கியபோது,
தன்னுடைய முரீதீன்களுள் இருவரை ஈஸா தன்னிடம்
அழைத்தான்.* ஈஸா அவர்களிடம், ''உங்களுக்கு 30
எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள். அங்கு
சென்றதும், ஒருமனிதனும் இதுவரை ஏறியிராத கழு
தைக்குட்டி ஒன்றைக் கட்டியிருக்கக் காண்பீர்கள். அதை
அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்.* யாராவது உங்களிடம் 31
அதை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்று கேட்டால், நீங்கள்,
'இது ரப்புக்குத் தேவை' என்று சொல்லுங்கள், என்று
சொல்லி அவர்களை அனுப்பினுன்.* அனுப்பப்பட்டவர் 32
கள் போய் ஈஸா தங்களுக்குச் சொன்னபடியே கண்
டார்கள்.* அதை அவர்கள் அவிழ்க்கையில் அதன், 33
சொந்தக்காரர்கள், ''கழுதைக்குட்டியை ஏன் அவிழ்க்
கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.* அதற்கு அவர்கள், 34
''இது ரப்புக்குத்தேவை'' என்று சொன்னுர்கள்.* அதை 35
அவர்கள் ஈஸாவிடம் கொண்டுவந்தார்கள். பின்பு
அவர்கள் அக்குட்டியின்மேல் தங்கள் மேலுடைகளை
விரித்து ஈஸாவை அதன்மேல் உட்காரவைத்தார்கள்.*
ஈஸா அவ்வாறு பவனியாகப் போகையில் தங்கள் 36
மேலுடைகளை நிலபாவாடையாக விரித்தார்கள்.* ஈஸா 37
ஒலிவமலேச்சரிவில் ஜெரூஸலம் பட்டணத்தை நெருங்கி

வந்தான். அப்பொழுது பவனியாகச் சென்ற பெருந் தொகையான முரீதீன்கள் யாவரும் ஈஸா செய்த அற் புதமான வல்லமைச்செயல்கள் யாவற்றிற்காகவும் மகிழ்ச்சியுடன்இறைவனைப் புகழ்ந்து பாடிப் போற்றினர்.*

''ரப்பின் பெயரில் வருகிற அரசர் பரக்கத்துப் 38
பெறுவாராக. அரசர் நீடூழி வாழ்க! விண்ணுலகில்
சமாதானம்! மகிழ்ச்சி, உன்னதத்தில் இறைவனுக்கு
மாட்சிமை உண்டாகட்டும்'' என்று ஆரவாரம் செய்
தனர்.* அப்பொழுது அக்கூட்டத்திலிருந்த பரிசே 39
யரில் சிலர், ''உஸ்தாதே! உம்மைப் பின்பற்றும் முரீ
தீன்களைப் பேசாதிருக்கும்படி அதட்டும்'' என்றார்கள்.*
அதற்கு ஈஸா, ''இவர்கள் அமைதியாயிருந்தாலும் இந் 40
தக் கற்களே ஆரவாரம் செய்யும் என்று நான் உங்
களுக்குச் சொல்லுகிறேன்'' என்றான்.*

அவர்கள் ஜெருஸலத்தை நெருங்கியபோது 41
ஈஸா அப்பட்டணத்தைக் கண்டு அழுது புலம்பினான்.*
''உனக்குக் கிடைத்த இந்த நாளிலே உனக்குச் சமா 42
தானம் நெருங்கியிருந்தது. ஆனால் அதைத் தள்ளிவிட்
டாய். இப்பொழுதோ, அது உனது கண்களுக்கு
மறைக்கப்பட்டுவிட்டது.* இதோ! உனது பகைவர் 43
உன்னைச் சுற்றிலுமுள்ள மதிலில் கற்களைக் குவித்து
உன்னை எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு
நெருக்குவார்கள்.* உன்னையும் உன் அகத்தேயுள்ள 44
பிள்ளைகளையும் அடியோடழித்து விடுவார்கள். உனது
பகைவர், கல்லின்மேல் ஒரு கல்லாவது இராதபடி
உன்னைத் தரைமட்டமாக்குவார்கள். ஏனெனில் இறை
வனால் உனக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் புறக்க
ணித்தாய்'' என்றான்.*

ஈஸா பைத்துல்முகத்தஸைத் தூய்மையாக்கல்

பின்பு ஈஸா பைத்துல் முகத்தஸினுள் சென்று 45
அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தவர்களை
வெளியே துரத்தினான்.* அவன் அவர்களிடம், 46
''என் பைத்துல் முகத்தஸ் துஆச் செய்யும் ஒரு வீடு.
ஆனால் அதைக் கள்வர் குகை ஆக்கிவிட்டீர்கள் என்று
எழுதியிருக்கிறது'' என்றான்.*

இதற்குப் பின்பு ஈஸா நாள்தோறும் பைத்துல் 47
முகத்தஸில் போதித்து வந்தான். ஆனால் யூதமதத்
தலைமை உலமாக்களும், உஸ்தாதுமார்களும், புக்க
ஹாக்களும், மக்கள் தலைவர்களும் ஈஸாவைக் கொலை
செய்ய வகைதேடினர்கள்.* ஆனால் அவனுடைய 48
போதனையை மக்கள் ஆர்வத்துடன் கேட்டுவந்ததாலும்.
அவன்மேல் பற்றுவைத்திருந்ததாலும் அவர்களுக்கு
என்ன செய்வதென்றே தோன்றவில்லை.*

ஈஸாவின் அதிகாரத்தைப் பற்றிய கேள்வி

20 ஒருநாள் ஈஸா பைத்துல்முகத்தஸில் மக்களுக்
குப் போதித்து, நற்செய்தியையும், நல்மாரா
யத்தையும் அறிவித்துக்கொண்டு இருக்கையில் யூதமத
தலைமை உலமாக்களும், புக்கஹாக்களும், உஸ்தாது
மார்களும், யூத சங்கத் தலைவர்களும் அவனிடம் வந்த
னர்.* அவர்கள், ஈஸா எந்த அதிகாரத்தைக் கொண்டு 2
பைத்துல்முகத்தஸில் வியாபாரம் செய்து கொண்டிருந்த
வர்களை விரட்டினான் என்று அவனை வற்புறுத்திக் கேட்
டனர்.*

அதற்கு ஈஸா, ''உங்கள் கேள்விக்கு விடை 3
யளிக்குமுன் நானும் உங்களை ஒரு கேள்வி கேட்க
விரும்புகிறேன்.* ஞானஸ்நானம் கொடுத்த யஹ்யா 4
இறைவனிட மிருந்தா அல்லது மனித அதிகாரத்துடனா
இதைச் செய்தார்?'' என்று கேட்டான்.* அவர்கள் 5
தங்களிடையே கலந்து பேசி, ''நாம் இப்பொழுது
இறைவனிடமிருந்து வந்தவர் என்று சொல்வோமானால்,
'அப்படியானால் நீங்கள் ஏன் அவரை நம்பவில்லை?'
என்று கேட்பார்.* இறைவனால் அனுப்பப்பட்ட வில்லை, 6
மனிதனிடமிருந்து பெற்றார் என்று சொல்வோமானால்
நாம் தப்பமுடியாது. ஏனெனில், யஹ்யா ஒரு நபி
என்று மக்கள் நம்புகிறபடியால் அவர்கள் நம்மைக்
கல்லால் அடித்துக்கொன்று விடுவார்கள்'' என்று பயந்
தனர்.* கடைசியில் அவர்கள், ''எங்களுக்குத் தெரி 7
யாது'' என்று விடையளித்தனர்.* அப்பொழுது 8
ஈஸா அவர்களிடம், ''அப்படியாயின் நானும் உங்கள்
கேள்விக்கு விடையளிக்கமாட்டேன்'' என்றான்.*

திராட்சைத் தோட்டத்தின் குத்தகைக்காரன்

பின்பு ஈஸா மறுபடியும் கூடி யிருந்த மக்களுக் 9
குப் பின்வரும் உவமையைக் கூறினான்:—''ஒரு மனிதன்
திராட்சைத்தோட்டம் ஒன்றை உண்டாக்கி, அதைக்
குத்தகைக்குத் கொடுத்துவிட்டு வெளிநாட்டுக்குச்
சென்று, அங்கு பல வருடங்கள் வசித்து வந்தார்.*
பருவகாலம் வந்தபோது, தோட்டத்தின் கனியில் 10
தனது பங்கைப்பெற்றுக்கொள்ளும்படி பணியாளன்
ஒருவனைக் குத்தகைக்காரரிடம் அனுப்பினார். ஆனால்
அவர்களோ அப்பணியாளை அடித்து வெறுங்கை
யுடன் அனுப்பி விட்டார்கள்.* பின் அவர் இன்னும் 11
ஒரு பணியாளை அனுப்பினார். அவரையும் அவர்கள்
அடித்து, இழிவாக நடத்தி, ஒன்றும் கொடுக்காமல்
அனுப்பி விட்டார்கள்.* மூன்றாவது முறையும் ஒரு 12
பணியாளை அனுப்பினார். அதேபோல் அப்பணியாளை
யும் காயப்படுத்தித் துரத்திவிட்டார்கள்.*

''அதைக் கண்ட திராட்சைத் தோட்டத்தின் சொந் 13
தக்காரர், 'இப்போது நான் என்ன செய்யலாம்? ஆம்!
நான் என் அருமை மகனையே அனுப்புவேன். அவர்கள்
ஒருவேளை என் மகனுக்கு மதிப்பு அளிப்பார்கள்' என்று
தனக்குள் சொல்லிக் கொண்டார்.* ஆனால் குத்தகைக் 14
காரர் அவரின் மகனைக் கண்டபோது, 'இவனே சொத்தின்
உரிமையாளன். இந்தச் சந்தர்ப்பத்தை வழுவவிடாது
இவனைக் கொலை செய்வோம், வாருங்கள். அப்பொழுது
இவனுக்குச் சேரவேண்டிய சொத்து நம்முடையதாகும்'
என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.*
எனவே, அவர்கள் மகனைத் திராட்சைத் தோட்டத் 15
திற்கு வெளியே இழுத்துக்கொண்டு போய்க் கொலை
செய்தார்கள்.*

''அப்பொழுது திரட்சைத் தோட்டத்தின் சொந்
தக்காரன் என்ன செய்வான் என்று நினைக்கிறீர்கள்?*
அவர் வந்து அந்தக் குத்தகைக்காரரை அழித்தொ
ழித்துவிட்டு, திராட்சைத் தோட்டத்தையும் வேறு 16
ஆட்களிடம் ஒப்படைப்பார் என்று நான் உங்களுக்குச்
சொல்கிறேன்.'' இவ்வுவமையைக் கேட்டுக்கொண்டி
ருந்தவர்கள், ''அப்படி ஒருபொழுதும் நடக்கக்
கூடாது'' என்று எதிர்ப்புத் தெரிவித்தனர்.*

ஈஸாவோ அவர்களைக் கூர்ந்து பார்த்து, ''அப் 17
படியாயின், 'வீடு கட்டுகிறவர்கள் உதவாதென்று தள்ளி
விட்ட கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று' என்ற
வேதவாக்கியத்தின் கருத்து என்ன?'' என்று கேட்டான்.*
மேலும் ஈஸா தொடர்ந்து, ''அந்தக் கல்லின்மேல் 18
தடுக்கி விழுகிறவன் உடைந்து நொருங்கிப்போவான்.
அது எவன்மேலாவது விழுந்தால் அது அவனை நசுக்கித்
தவிடுபொடியாக்கி விடும்'' என்றான்.*

யூதமதத் தலைமை உலமாக்களும், உஸ்தாது 19
மார்களும், புக்கஹாக்களும் தங்களைக்குறித்தே ஈஸா
இந்த உவமையைக் கூறினான் என்று உணர்ந்தபோது
உடனே அவனைக் கைது செய்ய முயற்சி செய்தனர்.
இவர்களே இந்த உவமையில் குறிப்பிடப்பட்ட பொல்
லாத குத்தகைக்காரர். ஆனாலும் அவர்கள் ஈஸா
வைக் கைதுசெய்தால் மக்களிடையில் கலகம் ஏற்
பட்டுவிடும் என்று பயந்தனர். எனவே பல கேள்வி
களைக் கேட்டு ஈஸாவை விடையில் சிக்கவைக்க
நினைத்தனர்.*

வரி செலுத்துதலைப்பற்றிய கேள்வி

ஆகவே அவர்கள் தகுந்த சந்தர்ப்பத்திற்காகக் 20
காத்திருந்தார்கள். ஈஸாவை ரோம தேசாதிபதியின்
ஆட்சிக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டவற்றில்
அகப்படுத்த எண்ணி அவனுடைய பேச்சில் குற்றம்
கண்டுபிடிப்பதற்காக உண்மையுள்ளவர்களைப்போல்,
நடிக்கக்கூடிய வேவுகாரரை ஈஸாவிடம் அனுப்பினார்
கள்.* அவர்கள் ஈஸாவிடம் வந்து, ''உஸ்தாதே! 21
நீர் உண்மையுள்ளவர். பேச்சிலும் உபதேசத்திலும்
ஒருபொழுதும் உண்மையிலிருந்து வழுவாதவர், பிறர்
என்ன நினைப்பார்களோ என்று எண்ணி இறைவனின்
மார்க்கத்தை மாற்றாது சத்தியமாய் அறிவிக்கிறீர்.
என்றும் நாம் அறிவோம்.* ரோம அரசாங்கத்திற்கு 22
நாம் வரி செலுத்துவது சரியா என்று இப்பொழுது
எங்களுக்குச் சொல்லும்'' என்று கேட்டார்கள்.* ஈஸா 23, 24
அவர்களின் தந்திரத்தை அறிந்து, அவர்களிடம்,
''எனக்கு ஒரு நாணயத்தைக் காட்டுங்கள். இந்த நாண
யத்தில் யாருடைய உருவமும் பெயரும் பொறிக்கப்
பட்டுள்ளது?'' என்றான்.* அதற்கு அவர்கள், ''ரோமப் 25

பேரரசன் சீசருடையது'' என்ருர்கள், அதற்கு ஈஸா,
''அப்படியானுல் ரோமப் பேரரசனுடையதைப் பேரர
சனுக்கும் இறைவனுடையதை இறைவனுக்கும்
செலுத்துங்கள்'' என்று சொன்ஞன்.* மக்கள் முன்னி 26
லேயில் ஈஸாவின் பேச்சில் குற்றம் கண்டுபிடிக்க அவர்
கள் எடுத்த முயற்சி கைகூடவில்லே. ஈஸா கூறிய
விடையைக் குறித்து வியப்படைந்த அவர்கள்
மௌனமாய் இருந்துவிட்டார்கள்.*

உயிர்த்தெழுதலேப் பற்றிய கேள்வி

சதுசேயர் என்பவர்கள் ஒரு மனிதனின் 27
வாழ்வு அவன் மரணத்துடன் முடிந்துவிடும் என்றும்,
உயிர்த்தெழுதல் இல்லே என்றும் நம்புகிறவர்கள்.*
இவர்களில் சிலர் ஈஸாவிடம் வந்து, ''உஸ்தாதே! 28
மூஸா நபி (அலே) அவர்கள் கொடுத்த ஷரீஅத் சட்டத்
தின்படி ஒருவன் நிக்காஹ் செய்து பிள்ளேகள் இல்லா
மல் இறந்துபோனுல், அவரது மனேவியை அவரு
டைய சகோதரன் நிக்காஹ் செய்து, அவரது சகோ
தரன் பெயரில் சந்ததியை உண்டாக்க வேண்டும்.*
ஏழு சகோதரருள்ள ஒரு குடும்பத்தை அறிவோம். 29
அவர்களுள் மூத்தவன் ஒரு பெண்ணே நிக்காஹ் செய்
தார். ஆனுல், பிள்ளேகள் இல்லாமலேயே இறந்து
போனுர்.* பின்பு இரண்டாம் சகோதரன் அவளே 30
நிக்காஹ் செய்து, பிள்ளேகள் இல்லாமலேயே இறந்து
போனுர்.* அதற்குப்பின் மூன்ருவது சகோதரரும் 31
அவளே நிக்காஹ் செய்து அவரும் பிள்ளேகள் இல்லாமல்
இறந்துபோக, முறையே ஏழுபேரும் அவளே நிக்காஹ்
செய்து பிள்ளேகள் இல்லாமலேயே இறந்துவிட்டனர்.*
கடைசியில் அந்தப் பெண்ணும் இறந்தாள்.* இதோ! 32, 33
இதுதான் எங்கள் கேள்வி: உயிர்த்தெழுந்த பின்பு
இந்தப் பெண் யாருடைய மனேவியாய் இருப்பாள்?
ஏனெனில், அந்த ஏழு சகோதரரும் அவளே
நிக்காஹ் செய்தார்கள் அல்லவா?'' என்று கேட்டனர்.*

ஈஸா அதற்கு விடையாக, இங்கே இவ்வுலகில் 34, 35
உள்ளவர்கள் நிக்காஹ் செய்வார்கள், ஆனுல் மறு
வுலகை அடைவதற்கும் இறந்தபின், உயிர்த்தெழுவ
தற்கும் தகுதியுள்ளவர்களாகக் கருதப்பட்டவர்களோ
அங்கே நிக்காஹ் செய்வதில்லே.* அங்கே அவர்கள் 36

மறுபடியும் இறப்பதில்லை. ஏனெனில், அவர்கள் இறந்தோரிடமிருந்து புதுவாழ்வுடன் எழுப்பப்பட்டவர்களாதலால், மலக்குகளுக்கு ஒப்பானவர்களாயும், இறைவனின் பிள்ளைகளாயும் இருப்பார்கள்.*

37, 38 ''உயிர்த்தெழுதல் உண்டா என்ற கேள்விக்கு இறந்தவர்களின் உயிர்த்தெழுதல் உண்டு என்று முஸா நபியின் நூல்களில் நாம் வாசிக்கலாம். ஏனெனில், இறைவன் முட்செடியில் தமக்குக் காட்சியளித்ததை விவரிக்கையில், இறைவனை அவர் 'இப்ருஹீம் நபியின் இறைவன்' என்றும், 'இஸ்ஹாக் நபியின் இறைவன்' என்றும், 'யஃகூப் நபியின் இறைவன்' என்றும், குறிப்பிடுகிருர். ரப்பானவன் இவர்கள் ஒவ்வொருவரினதும் இறைவனுயிருந்தான் என்று கூருமல், அவர்கள் ஒவ்வொருவரினதும் இறைவன் என்று கூறும்பொழுது, அவர்கள் உயிருடன் இருக்கிருர்கள் என்று அர்த்தம் கொள்ளலாம். எனவே, இறைவன் இறந்தோரின் இறைவனல்ல; உயிருள்ளோரின் இறைவனே! ஏனென்ருல் இறைவனின் பார்வையில் எல்லோரும் உயிருள்ளவர்கள்'' என்ருன்.*

39 அங்கிருந்த யூதமத புக்கஹாக்கள், உஸ்தாதுமார்களில் சிலர் ஈஸாவிடம், ''உஸ்தாதே! நீர் நன்
40 ருகக் கூறிவிட்டீர்'' என்று கூறினர்*. அதன் பின்பு ஈஸாவிடம் வேறெந்தக் கேள்வியையும் கேட்கத் துணியவில்லை.

மஸீஹ் யார்

41 பின்பு ஈஸா அவர்களிடம், ''மஸீஹ் ஆகிய கிறிஸ்துவை தாவூதுநபியின் குமாரன் என்று கூறு
42, 43 கிருர்களே! அது எவ்வாறு பொருந்தும்?* தாவூது நபி தமது ஸபூர் வேதத்தில் 'ரப்புல்ஆலமின் மஸீஹ் ஆகிய என் ரப்பிடம், ''நான் உன்னுடைய பகைவரை உனது பாதத்தின் கீழ் போடுவேன், அதுவரை நீ என் வலது பக்கத்தில் அமர்ந்திரு'' என்ருன்' என எழுதி
44 யிருக்கிருரே!* இவ்வாறு தாவூது நபி, 'ரப்பு' என்று மஸீஹை அழைத்திருக்க, அவன் தாவூது நபியின் குமாரனுய் இருப்பது எப்படி?'' என்று கேட்டான்.

யூத ஆலிம்களின் போலிப் பக்தி

ஈஸா கூறுவதை மக்கள் கூட்டம் கவனமாய்க் 45
கேட்டுக்கொண்டிருக்கையில், தன்னுடைய முரீதீன்
களுக்குக் கூறியதாவது:-

"உஸ்தாதுமார்களையும் புக்கஹாக்களையும் குறித்து 46
எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் அவர்கள் மதிப்புக்
குரிய நீண்ட அங்கிகளை அணிந்துகொண்டு அலைந்து
திரிவதையும், வீதிகளில் மக்கள் அவர்களுக்கு
வணக்கம் கூறுவதையும், மதிப்பிற்குரிய முதன்
மையான ஆசனங்களை பைத்துல்லாஹ்களிலும்,
விருந்துகளிலும் பெறுவதையும் விரும்புகிறார்கள்.*
துஆச் செய்யும்போது வெளிப்பார்வைக்குப் பக்தி 47
உள்ளவர்களைப்போல் தெரியும்படி நீண்ட நேரம்
வேண்டுதல் செய்கிறார்கள். அதே வேளையில் விதவை
களின் நிலபுலன்களை அபகரிக்கும் திட்டங்களைத்
தீட்டி அவர்களை ஏமாற்றுகிறார்கள். ஆகையால் அவர்
கள் இறைவனிடமிருந்து கடுமையான தண்டனையைப்
பெறுவார்கள்."*

ஏழை விதவையின் காணிக்கை

21 ஈஸா பைத்துல்முகதஸில் நின்றுகொண்டிருக்
கையில் செல்வந்தர்கள் தங்கள் கொடைகளைக்
காணிக்கைப் பெட்டியில் போடுவதைக் கவனித்துக்
கொண்டிருந்தான்.* அப்பொழுது ஒரு ஏழை விதவை 2
அங்கே வந்து தன்னிடமுள்ள இரண்டு செப்புக் காசு
களைப் போட்டாள்.* அதைக்கண்ட ஈஸா, "நான் 3
உங்களுக்கோர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்.
மற்றெல்லாரும் போட்டதை ஒன்று சேர்த்த தொகை
யைவிட இந்த ஏழை விதவை போட்ட காணிக்கை
அதிகமானது.* ஏனெனில், அவர்கள் தங்கள் செல் 4
வத்திலிருந்து தேவைக்கதிகமாயுள்ளதில் சிறிதைக்
கொடுத்தார்கள். ஆனால், இவளோ தன் வறுமையிலி
ருந்து, தன்தேவைக்கென்று வைத்திருந்தது எல்லா
வற்றையும் எடுத்துப்போட்டு விட்டாள்" என்றான்.*

பைத்துல்முகத்தஸின் அழிவு - முன்னறிவிப்பு

ஈஸாவுடைய முரீதீன்களில் சிலர் பைத்துல்முகத்த 5
ஸின் அழகிய கட்டடக் கல் வேலைப்பாடுகளையும்,
ஞாபகார்த்தமாகக் கொடுக்கப்பட்ட அலங்காரப்
பொருட்களையும் குறித்துப் பேசிக்கொண்டு இருந்தார்
கள்.* அப்பொழுது ஈஸா, ''நீங்கள் வியந்து பாராட்டு 6
கிற இவைகள் எல்லாம், ஒரு கல்லின் மேல் கல்லாவது
இருக்காதவாறு இடிக்கப்பட்டு அழியும் காலம் வரு
கிறது. இவை பாழடைந்து விடும்'' என்றான்.*

அவர்கள் ஈஸாவிடம், ''உஸ்தாதே! அப்படியா 7
னால் இவை எப்பொழுது நடைபெறும்? இவற்றிற்
கான அறிகுறிகள் யாவை?'' என்று கேட்டார்கள்.*
அதற்கு ஈஸா, ''உங்களை ஒருவரும் ஏமாற்றிவிடாத 8
வாறு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில், அநேகர்
என் பெயரை வைத்துக்கொண்டு வருவார்கள்.
அவர்கள், 'நானே மஸீஹ்' என்றும்; 'இதோ வேளை
நெருங்கிவிட்டது' என்றும் சொல்வார்கள். அதை
நம்பி நீங்கள் அவர்கள் பின்னே போகாதீர்கள்.* போர் 9
களைப் பற்றியும் கலகங்களைப் பற்றியும் கேள்விப்படும்
போது, நீங்கள் திகிலடைய வேண்டாம். இவை
நடந்துதீரவேண்டும் என்பது உண்மையே! ஆனாலும்
முடிவு உடனே வந்து விடாது'' என்றான்.*

மேலும் ஈஸா அவர்களிடம் கூறியதாவது:— 10
''நாட்டிற்கு நாடும், அரசுக்கு அரசும் எதிர்த்து எழும்
பும்''.* மிகப்பெரிய பூமி அதிர்ச்சிகளும் பஞ்சங்களும் 11
பல நாடுகளில் உண்டாகும். பயங்கர நோய்களும் பல
இடங்களில் இங்கும் அங்குமாக உண்டாகும். பயங்கர
சம்பவங்கள் வானத்தில் அறிகுறியாகத் தோன்றும்.*
ஆனால் இவை எல்லாம் நடப்பதற்கு முன் நீங்கள் 12
துன்புறுத்தப்படுவீர்கள், என் பெயரின் பொருட்டு,
உங்களை இழுத்துக்கொண்டு போய், பைத்துல்லாஹ்
களின் ஜமஅத்துக்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும்
ஒப்புவிப்பார்கள். அரசருக்கும் தேசாதிபதிகளுக்கும்
முன்பாக இழுத்துச்சென்று உங்களைத் துன்புறுத்துவார்
கள்.* மஸீஹைக் குறித்து எல்லோரும் அறிவதற்கும், 13
அவனுக்குச் சாட்சியாய் இருப்பதற்கும் இதுவே ஏது
வாயிருக்கும்.* ஆகையால் உங்கள் சார்பில் எதிர் 14
வாதமாக நீங்கள் எதை எப்படிக் கூறுவோம் என்று

மனதில் கவலைகொள்ள வேண்டாம்.* ஏனெனில் 15
நானே உங்களுக்கு நாவன்மையையும், ஞானத்தையும்
கொடுப்பேன். உங்களை எதிர்ப்பவர்கள் எவராலும்
நீங்கள் கூறுவதற்கு எதிராக எதுவும் சொல்லவோ,
மறுக்கவோ இயலாது.* உங்கள் அன்புக்குரியவர்களா 16
கிய பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்
கூட உங்களைக் காட்டிக்கொடுத்துத் துரோகம் செய்து
சிறையில் அடைக்க உடந்தையாயிருப்பார்கள். உங்
களில் சிலர் மரணதண்டனையும் பெறுவீர்கள்.* நீங் 17
கள் என்னுடையவர்களாயிருப்பதால் என் பெயரின்
பொருட்டு எல்லோரும் உங்களை வெறுப்பார்கள்.*
ஆனாலும் தலையிலுள்ள ஒரு மயிர்கூட அழிந்து 18
போகாது.* ஏனெனில், நீங்கள் உங்கள் விசுவாசத்தில் 19
உறுதியாய் நின்றால், உங்கள் ஆத்துமாவைக் காத்துக்
கொள்வீர்கள்.*

ஜெருஸலத்தின் அழிவு - முன்னறிவிப்பு

''ஆனால் ஜெருஸலம் நகரம் படைகளால் சூழப் 20
பட்டிருப்பதை நீங்கள் காணும்போது அதன் அழிவின்
வேளை நெருங்கிவிட்டதென்று அறிவீர்கள்.* அப் 21
பொழுது யூதேயா நாட்டு மக்கள் மலைகளுக்கு ஓடிப்
போகட்டும். ஜெருஸலத்தில் உள்ளவர்கள் தப்பி ஓடி
விட எத்தனிக்கட்டும். நகரத்துக்கு வெளியே நாட்டுப்
புறங்களிலுள்ளோர் நகரத்துக்குத் திரும்பி வர முயற்சி
செய்ய வேண்டாம்.* ஏனெனில், அவை இறைவனின் 22
நியாயத்தீர்ப்பு நாட்கள். நபிமார்கள் எழுதி வைத்த
வேதவசனங்கள் யாவும் அப்பொழுது முற்றாக நிறை
வேறும்.* அந்நாட்களில் கருத்தரிக்கும் பெண்கள், 23
பாலூட்டும் தாய்மார் ஆகியோரின் நிலையோ, ஐயோ
பரிதாபம்! ஏனெனில், அக்காலத்தில் இத்தேசத்த
வருக்கு மிகுந்த இடுக்கணும், இந்த மக்கள் மேல் இறை
வனின் கடுஞ்சினமும் உண்டாகும்.* அவர்கள் 24
எதிரியின் ஆயுதங்களினால் கோரமாகக் கொலை
செய்யப்படுவார்கள்; அல்லது நாடுகடத்தப்பட்டோ,
சிறைப் பிடிக்கப்பட்டோ உலகின் பல நாடுகளுக்கும்
கொண்டு போகப்படுவார்கள். யூதரல்லாதோர் ஜெரு

ஸலத்தைக் கைப்பற்றி, அதை மிதித்து நாசமாக்கு
வார்கள். இறைவனுல் யூதரல்லாதவரின் வெற்றிக்
கென்று குறிக்கப்பட்ட காலம் முடியும்வரை இவ்வாறு
நடக்கும்.*

மனிதகுமாரனின் வருகை

''வானிலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் 25
ஆகியவற்றின் கெடுகுறிகளும், அடையாளங்களும்
காணப்படும். பூமியிலே கடலும், அலைகளும் இரைந்து
கொந்தளித்து எழும்பும். எனவே மக்கள் தத்தளித்து,
மனவேதனையடைவார்கள்.* வானத்தின் ஆற்றல்கள் 26
அனைத்தும் அசைக்கப்படும். ஆகையால், உலகத்தில்
இன்னும் என்ன நிகழுமோவென்ற பயத்தினுல் மனி
தரில் சிலர் தைரியம் இழந்து விழுந்துபோவார்கள்.*
அப்பொழுது மனிதகுமாரனுகிய நான், மகாவல்லமை 27
யுடனும், மாபெரும் மாட்சிமையுடனும் மேகத்
தின்மீது வருகிறதை அவர்கள் காண்பார்கள்.*
எனவே, இவை சம்பவிக்க ஆரம்பிக்கும்போது உங் 28
கள் இரட்சிப்பு நெருங்கி வருவதால் நீங்கள் நிமிர்ந்து
திடமாய் நில்லுங்கள்.''*

அத்திமரத்தின் படிப்பினை

பின்பு ஈஸா அவர்களுக்கு ஓர் உவமையைச் 29
சொன்னுன்:- ''அத்தி மரத்தையும், மற்றெல்லா மரங்
களையும் பாருங்கள்.* அவை துளிர்விடத் தொடங் 30
கியதும் கோடைகாலம் சமீபித்து விட்டது என்பதை
நீங்கள் அறிவீர்கள்.* அதேபோல, நான் கூறிய இந்தச் 31
சம்பவங்கள் நிகழும்போது, இறைவனின் இராட்சி
யம் நெருங்கிவிட்டது என்று அறிந்து கொள்ளுங்கள்.*
இவை எல்லாம் நடைபெறும் வரையிலும், இந்தத் 32
தலைமுறையினர் ஒழிந்துபோவதில்லை என்று உறுதியாக
உங்களுக்குச் சொல்கிறேன்.* விண்ணும், மண்ணும் 33
ஒழிந்து போகும் ஆனுல் என் வார்த்தைகளோ ஒருபோ
தும் ஒழிவதில்லை.*

விழிப்புடன் இருங்கள்

''சிற்றின்பங்கள், குடிவெறி, களியாட்டங்கள் 34
ஆகியவற்றில் வாழ்க்கையின் சுகபோகங்களை அனுப

விப்பதிலும், இவ்வுலகின் பிரச்சினைகளினால் உண்டா
கும் கவலைகளினாலும் உங்கள் உள்ளம் மந்தமாகாத
வாறு எச்சரிக்கையாயிருங்கள். இல்லாவிடில் நீங்கள்
எதிர்பாராத வேளையில் திடீரென்று அந்தநாள் உங்
களைச்சூழும்.* ஏனெனில் உலகில் குடியிருக்கும் அனை 35
வரையும் அது அவ்வாறு சிக்கவைக்கும்.* ஆகையால், 36
இனிமேல் நடக்கவிருக்கும் பயங்கரமான இவற்றை
அனுபவிக்காமலே மனிதகுமாரனாகிய எனது சமூகத்
தில் வந்தடைய வேண்டும் என்று தொடர்ந்து விழித்
திருந்து துஆச் செய்யுங்கள்.''*

ஈஸா அந்நாட்களில் தினந்தோறும் பைத்துல் 37,38
முகத்தஸில் போதிக்கும்படி சென்றான். அதிகாலை
யிலேயே மக்கள் ஈஸாவின் போதனையைக் கேட்பதற்
காக அங்கு கூடுவார்கள். ஒவ்வொரு நாளும் மாலையில்
ஈஸா இரவைக் கழிப்பதற்காக ஒலிவமலைக்குப் போய்
அங்கே தங்குவான்.*

யூதாஸ் உடன்படுதல்

22 யூதமத கொண்டாட்டங்களில் ஒன்றான பஸ்கா
பெருநாள் நெருங்கிக்கொண்டிருந்தது, அப்
பெருநாளில் புளிக்காத மாவில் செய்த ரொட்டி
யையே உண்பார்கள்.* யூதமத தலைமை உலமாக் 2
களும், புக்கஹாக்களும், உஸ்தாதுமார்களும், ஈஸாவைக்
கொலை செய்யத் திட்டமிடத் தொடங்கினார்கள்.
மக்கள் கலகம் செய்வார்கள் எனப் பயந்து மிகக்
கவனமாக வழிவகை தேடினார்கள்.* பன்னிருவருள் 3
ஒருவரான இஸ்காரியோத்து ஊரைச் சேர்ந்த யூதா
ஸிற்குள் ஷைத்தான் புகுந்து கொண்டான்.* அவன் 4
யூதமதத் தலைமை உலமாக்கள், ஆலயக் காவற்பணி
யாளரின் தலைவர்கள் ஆகியோரிடம் சென்று, ஈஸா
வைக் காட்டிக்கொடுப்பதற்குச் சிறந்த முறையை
அவர்களுடன் கலந்து ஆலோசித்தார்.*

யூதாஸ் அவர்களுக்கு உதவி செய்ய ஆயத்த 5
மாய் இருக்கிறதை அறிந்து அவர்கள் மகிழ்ச்சி
அடைந்தனர். எனவே, அவருக்கு வெகுமதியாக
பணம் கொடுப்பது என்று ஒப்பந்தம் செய்துகொண்
டார்கள்.* யூதாஸ் அதற்கு உடன் பட்டு, ஈஸாவுடன் 6

மக்கள்கூட்டம் இல்லாத வேளையில், அவர்களுக்கு அவனைக் காட்டிக் கொடுப்பதற்குத்தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தார்.

பஸ்கா விருந்து

பஸ்கா என்னும் புளிப்பில்லாத ரொட்டியை 7
உண்ணும் விழாவில், பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பலி
யிட வேண்டிய நாள் வந்தது.* அப்பொழுது ஈஸா 8
பஸ்கா விருந்தை உண்ணும்படி அவர்களுக்காக ஓர்
இடத்தை ஆயத்தம் செய்வதற்காகப் பேதுருவையும்,
யோவானையும் தனக்கு முன்னே அனுப்பினான்.* அவர் 9
கள் ஈஸாவிடம், ''நீ எங்கே விருந்தை ஆயத்தம்
செய்ய விரும்புகிறாய்?'' என்று கேட்டார்கள்.* அதற்கு 10
ஈஸா, ''நீங்கள் ஜெரூஸலம் நகரத்துக்குள் சென்றதும்,
தண்ணீர்க் குடம் சுமந்து செல்லும் ஒருவனைக் காண்
பீர்கள், நீங்கள், அவரைப் பின்தொடர்ந்து சென்று,
அவர் செல்லும் வீட்டிற்குள் போங்கள். * அந்த 11
வீட்டின் சொந்தக்காரரிடம், 'நான் என் முரீதீன்
களுடன் பஸ்கா விருந்தை உண்பதற்குத் தகுதியான
இடம் எங்கே?' என்று உஸ்தாது கேட்கச் சொன்
னான் என்று கூறுங்கள். * அப்பொழுது அவர் உங் 12
களுக்கு மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையைக்
காட்டுவார். அந்த அறை கம்பளம் முதலியன விரிக்
கப்பட்டு விருந்திற்கு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும்.
அங்கே நீங்கள் விருந்தை ஆயத்தம் செய்யுங்கள்''
என்றான்.* அவர்கள் நகரத்துக்குச் சென்று, ஈஸா 13
அவர்களுக்குச் சொன்னபடியே அனைத்தும் ஒழுங்
காய் இருக்கக் கண்டு, அங்கே பஸ்கா விருந்துக்கான
ஆயத்தங்களைச் செய்தனர்.

இறுதி இரவு விருந்து

குறிக்கப்பட்ட வேளை வந்தபோது, ஈஸாவும் 14
அவனுடைய பன்னிரு றஸூல்மார்களும் அங்கே
வந்து, விருந்துண்பதற்காக உட்கார்ந்தனர்.* அப்
பொழுது ஈஸா, ''நான் பாடுபடுவதற்கு முன்னே 15
உங்களுடன் இந்தப் பஸ்கா விருந்தை உண்பதற்
காக மிக ஆவலாகக் காத்திருந்தேன்.* இறைவ 16
னின் இராட்சியத்தில் இது எதைக்குறிக்கின்றதோ

அது நிறைவேறும் அளவும், நான் இதை உண்பதில்லை
என்று இப்பொழுது உங்களுக்குக் கூறுகிறேன்''
என்றான்.*

பின்பு ஈஸா திராட்சைரசம்கொண்ட பாத்திரத்தை 17
எடுத்து இறைவனுக்கு நன்றி செலுத்திய பின் அவர்
களிடம், ''இதை வாங்கி, உங்களுக்குள்ளே பகிர்ந்து
கொள்ளுங்கள்.* ஏனெனில், நான் இறைவனின் 18
இராட்சியம் வருமளவும் திராட்சைரசத்தை மறுபடியும்
அருந்துவதில்லை'' என்றான்.* பின்பு ஈஸா ரொட்டி 19
யையும் எடுத்து, இறைவனுக்கு நன்றி செலுத்தி,
அதைச் சிறு துண்டுகளாக்கி அவர்களிடம் கொடுத்து,
''இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற எனது உடல்.
என்னை நினைவுகூரும்படி இதைச் சாப்பிடுங்கள்'' என்
றான்.* உணவு உண்டபின், ஈஸா அதேபோல் திராட்சை 20
ரசம் இருந்த பாத்திரத்தையும் அவர்களிடம் கொடு
த்து, ''இந்தப் பானம், உங்களை இரட்சிப்பதற்
கென்று ஊற்றப்படுகின்ற என்னுடைய இரத்தம்.
இதுவே இறைவனது புதிய உடன்படிக்கை.* ஆனால் 21
என் சிநேகிதனைப்போல் என்னுடன் உட்கார்ந்து
இவ்விருந்தில் சாப்பிடும் ஒருவனே, எனக்குத் துரோகம்
இழைப்பான்.* மனிதகுமாரனாகிய நான் சாகவே 22
வேண்டும். இது இறைவனின் திட்டப்படியே நடக்
கிறது. ஆனால், எனக்குத் துரோகம் செய்து காட்டிக்
கொடுப்பனுக்கு ஐயோ! பயங்கரமான விளைவு காத்து
இருக்கிறது'' என்றான்.* அப்பொழுது முரீதீன்கள் 23
''இப்பேற்பட்ட துரோகச் செயலைச்செய்கிறவன் எங்
களுக்குள் யாராக இருக்கக் கூடும்?'' என்று பேசிக்
கொண்டனர்.*

அப்பொழுது தங்களுள் எவர் இனிவரப்போகும் 24
இராட்சியத்தில் மற்றெல்லாரையும் விட பெரியவராக
இருப்பார் என்ற வாக்குவாதம் அவர்களுக்குள்
எழுந்தது.* ஈஸா அவர்களிடம், ''இந்த உலகில் 25
அரசரும், பெரியோரும், தங்களுக்குக் கீழுள்ளவர்கள்
மேல் அதிகாரம் செலுத்துவதுண்டு. இவ்விதம் அதி
காரம் செலுத்துகிறவர்கள் கொடைவள்ளல்கள்
என்று அழைக்கப்படுவதுமுண்டு. இது உலக நியதியே.*
ஆனால் உங்களிடையே இப்படி இருக்கலாகாது. 26
உங்களுள் பெரியவர்கள் சிறியவர்களைப்போலவும்,

தலைவர்கள் சேவை செய்வதையே தம் பெருங்கடனாகக்
கருதுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.* வீட்டுத் 27
தலைவன் மேசையில் உட்கார்ந்து சாப்பிட வேலையாள்
அவனுக்குப் பணிவிடை செய்வான். இது உலக
வழக்கம். ஆனால் இங்கேயோ அப்படியில்லை. ஏனெ
னில் நானே உங்களுக்குப் பணிவிடை செய்கிறவனாக
இருக்கிறேன்.* எனினும், இடுக்கண் நிறைந்த இந்தப் 28
பயங்கர சோதனை நாட்களிலும் கடைசிவரை நீங்
களே எனக்கு உண்மையாயிருந்தவர்கள்.* என் பிதா 29
தனது இராட்சியத்தின் உரிமையை எனக்கு அளித்த
தைப்போல, நானும் இங்கே இப்பொழுதே உங்களுக்கு
அதை அளிக்கிறேன்.* எனவே, நீங்கள் என் இராட்சி 30
யத்தில் என்னுடன் பந்தியிலிருந்து என் விருந்தில்
உண்டுகுடிப்பீர்கள். நீங்கள் என்னுடன் சிங்காசனங்
களில் அமர்ந்து, (பனீ இஸ்ராயீலின்) பன்னிரு கோத்தி
ரங்களையும் விசாரித்து நியாயத்தீர்ப்பு வழங்குவீர்கள்''
என்றான்.*

பேதுருவின் மறுதலிப்பை முன்னறிவித்தல்

மேலும் ஈஸா, ''சீமோனே! சீமோனே! கோது 31
மையைச் சுளகில் புடைப்பதைப்போல உம்மையும்
புடைத்துப் பிரிக்க ஷைத்தான் அனுமதி பெற்றிருக்
கிறான்.* ஆனால் நானோ, நீர் உமது விசுவாசத்தில் 32
குன்றிச் சோர்ந்துபோகக் கூடாது என்று உமக்காக
துஆச் செய்து கேட்டு மன்றாடினேன். எனவே, நீர்
மனமாற்றமடைந்து என்னிடம் திரும்பியபின், உம்
சகோதரர் விசுவாசத்தில் திடன் கொண்டு வளரச்
செய்வீராக'' என்றான்.* அப்பொழுது சீமோன், 33
''ரப்பே! நான் உன்னுடன் சிறைக்குச் செல்லவோ,
அல்லது சாகவோ ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றார்.*
அதற்கு ஈஸா, ''பேதுருவே! நான் உமக்குச் சொல் 34
கிறேன்; இப்பொழுதிலிருந்து காலை சேவல் கூவு
கிறதற்கிடையில் என்னை உமக்குத் தெரியாதென்று நீர்
மூன்று முறை மறுதலிப்பீர்'' என்றான்.* பின்னும் ஈஸா 35
அவர்களிடம், ''நான் உங்களை நற்செய்தியைப் போதிக்
கும்படி அனுப்பிய போது, நீங்கள் பணத்தையோ,
மாற்று உடையையோ, காலணியையோ, பைகளையோ
உங்களுடன் எடுத்துச் சென்றீர்களா? இல்லையே, அப்படி
யிருந்தும் உங்களுக்கு ஏதாவது குறைவிருந்ததா?'' என்று

கேட்டான். அதற்கு அவர்கள். "எங்களுக்கு ஒரு
குறைவும் இருக்கவில்லை" என்றார்கள்.* ஈஸா அவர் 36
களிடம், "ஆனால் இப்பொழுதோ, பணமும், பையும்
உங்களிடமிருந்தால் எடுத்துக்கொள்ளுங்கள். வாள்
இல்லாதவன், தன் மேலுடையை விற்று வாள் ஒன்று
வாங்கிக் கொள்ளட்டும்.* ஏனெனில், என்னைக் குறித்த 37
தீர்க்கதரிசனங்கள் நிறைவேற வேண்டிய வேளை வந்து
விட்டது. 'குற்றம் செய்யும் அக்கிரமக்காரருள் ஒரு
வராகத் தீர்க்கப்பட்டார்' என்ற வேத வாக்கியம்
நிறைவேற வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லு
கிறேன். அது இப்பொழுது நிறைவேறிக்கொண்டே
இருக்கிறது" என்றான்.* அப்பொழுது அவர்கள், 38
"ரப்பே! இதோ எங்களிடம் இரண்டு வாள்கள் இருக்
கின்றன" என்று சொல்ல ஈஸா, "அது போதும்"
என்றான்.*

ஒலிவமலையில் ஈஸா

அதற்குப்பின், ஈஸா தனது முரீதீன்களுடன் 39
மேல்வீட்டறையிலிருந்து வெளியேறி, வழக்கம்
போல் ஒலிவமலைக்குப் போனான்.* அவ்விடத்தை 40
அடைந்தபோது ஈஸா அவர்களிடம், "நீங்கள் சோத
னைக்குள்ளாகாது இருக்கும்படி இறைவனிடம் மன்றாடி
துஆச் செய்யுங்கள்" என்றான்.* பின்பு ஈஸா அவர் 41
களிடமிருந்து கூப்பிடு தூரமளவு சென்று, முழங்கால்
களில் நின்று துஆச் செய்தான்.* "பிதாவே! இந்தப் 42
பயங்கர அனுபவமாகிய பாத்திரம் என்னை விட்டு நீங்கு
வது உனது விருப்பமாயின், அதை நீக்கியருள்வாயாக.
ஆயினும் என் விருப்பமன்று, உனது விருப்பமே நிறை
வேறட்டும்" என்று துஆச் செய்தான்.* அப்பொழுது 43
ஒரு மலக்குத்தோன்றி ஈஸாவுக்குப் பெலன் ஊட்டி
னார்.* ஏனெனில் ஈஸா ஆழ்ந்த துயரம் நிறைந்த 44
வனாய் இன்னும் மிகுந்த ஊக்கமாய் துஆச் செய்தான்.
அப்பொழுது ஈஸாவின் வியர்வை இரத்தப் பெரு
துளிகளாகத் தரையில் விழுந்தது.* ஈஸா துஆச் செய்து 45
முடித்த பின்பு எழுந்து தன்னுடைய முரீதீன்களிடம்
சென்றான். அவர்களோ துயரமிகுதியினால் சோர்வுற்று
நித்திரை செய்வதைக் கண்டான்.* அப்பொழுது 46
ஈஸா, "என்ன! நித்திரை செய்கிறீர்களே! எழுந்
திருந்து துஆச் செய்யுங்கள். நீங்கள் சோதனைக்கு உட்

படும்போது, அதற்குள் விழுந்து போகாது உங்களைக் காக்கும்படி இறைவனிடம் மன்றாடுங்கள்'' என்றான்.*

ஈஸாவைக் கைதுசெய்தல்

ஈஸா இவ்வாறு சொல்லிக்கொண்டு இருக்கை 47
யிலேயே, மக்கள் கூட்டமொன்று அவனை நோக்கி
வந்துகொண்டிருந்தது. அக்கூட்டத்தை வழிகாட்டி
வந்த பன்னிரு முரீதீன்களுள் ஒருவரான யூதாஸ்
என்பவர், ஈஸாவை நெருங்கி, அவனை முத்தமிட வந்
தார்.* அப்பொழுது ஈஸா அவரிடம், ''யூதாஸ்! மனித 48
குமாரனை நீர் முத்தம் செய்தா காட்டிக் கொடுக்க
வேண்டும்? நீர் இவ்வாறு துரோகம் செய்யலாமா?''
என்றான்.*

நடக்கப்போவதை மற்ற முரீதீன்கள் கண்ட 49
போது அவர்கள், ''ரப்பே! நாம் அவர்களை எதிர்த்துத்
தாக்கலாமா?'' என்று வினவினார்கள்.* அவர்களுள் 50
ஒருவர், பிரதம தலைமை உலமாவின் வேலைக்கார
னைத் தாக்கி, அவனது வலக் காதைத் துண்டித்தார்.*
அதைக் கண்ட ஈஸாவோ, ''இது போதும், நிறுத்துங் 51
கள்'' என்று சொல்லி, அம்மனிதனுடைய காதைத்
தொட்டுச் சுகமாக்கினான்.*

பின்பு ஈஸா, தன்னைப் பிடிக்க வந்த யூதமத 52
தலைமை உலமாக்கள், ஆலயக் காவற்பணியாளரின்
தலைவர், யூத சங்கத் தலைவர் ஆகியோரிடம், ''இது
என்ன! கொள்ளைக்காரனைப் பிடிக்க வருவதைப்போல
வாள்கள், தடிகளுடன் வந்திருக்கிறீர்களே!* நான் 53
பைத்துல்முகத்தஸில் நாள்தோறும் இருந்தேனே! அப்
பொழுது ஏன் என்னைப் பிடிக்கவில்லை? ஆனால் இது
இருளின் வல்லமை ஆட்சி புரியும் வேளை. அதுவே
உங்களுடைய வேளையாகவும் இருக்கிறது'' என்றான்.*

பேதுரு மறுதலித்தல்

பின்பு அவர்கள் ஈஸாவைப்பிடித்து யூதமத பிர 54
தம தலைமை உலமாவின் வீட்டிற்குக் கொண்டுபோனார்
கள். பேதுரு தொலைவிலே ஈஸாவைப் பின்தொடர்ந்து
போனார்.* அங்கு காவல் செய்து கொண்டிருந்த 55
போர்வீரர் முற்றத்தில் நெருப்பு மூட்டி அதைச்சுற்றி

உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள்.
பேதுருவும் அங்கே போய், அவர்களுடன் உட்கார்ந்
தார்.* அப்பொழுது ஒரு வேலைக்காரப் பெண் அவர் அங்கே 56
உட்கார்ந்திருக்கிறதைக்கண்டு, அவரை நெருப்பின்
ஒளியில் நன்ருக உற்றுக் கவனித்துவிட்டு, ''இந்த
மனிதன் ஈஸாவுடன் இருந்தவரே!'' என்ருள்.*
அதற்குப் பேதுரு, ''பெண்ணே! எனக்கு அந்த 57
மனிதனைத் தெரியாது'' என்று மறுதலித்தார்.* சிறிது, 58
நேரத்திற்குப் பின் வேருெருவன் அவரைக் கண்டபோது,
''நீரும் அவர்களுள் ஒருவரே!'' என்ருர். உடனே
பேதுரு ''இல்லை! நான் அவர்களுள் ஒருவரல்ல''
என்ருர்.* ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தின் பின்னர் 59
வேருெருவர் அவரைப் பார்த்து, ''உண்மையாக
இவர் ஈஸாவின் முரீதீன்களுள் ஒருவரே. ஏனெனில்
இவரும் கலிலேயன்'' என்று அழுத்தந்திருத்தமாகக்
கூறினர்.* ஆனல் பேதுரு!'' நீர் என்னசொல்கிறீர் என்று 60
எனக்கு விளங்கவில்லையே!'' என்ருர். அவர் அப்படிச்
சொல்லிக் கொண்டிருக்கையிலேயே சேவல் கூவிற்று.*
அந்த வேளை ஈஸாவும் திரும்பி பேதுருவை உற்றுப் 61
பார்த்தான். 'இன்றைக்குச் சேவல் கூவுமுன் என்னை
உமக்குத் தெரியாதென்று நீர் மூன்றுமுறை மறுதலிப்
பீர்' என்று ஈஸா அவருக்குக் கூறிய வார்த்தைகள்
பேதுருவின் நினைவிற்கு வந்தன.* எனவே, அவர் 62
முற்றத்திலிருந்து வெளியே சென்று கதறி அழுதார்.*

ஈஸாவை ஏளனம் செய்தல்

ஈஸாவைப் பிடித்தவர்கள் அவனை அடித்து ஏள 63
னம் செய்யத் தொடங்கினர்கள்.* அவனுடைய கண் 64
களைக் கட்டிப்போட்டு, அவனுக்கு அடித்தார்கள்.
பின்பு, ''உம்மை அடித்தவர் யார் என்று தீர்க்கதரி
சனம் கூறும்'' என்று ஏளனமாகக் கேட்டார்கள்.*
மேலும் பல இழிவான வார்த்தைகளை ஈஸாவுக்கு 65
விரோதமாகச் சொன்னர்கள்.*

ஆலோசனைச் சங்க விசாரணை

அடுத்தநாட்காலை விடிந்ததும், யூதமதத் தலைமை 66
உலமாக்கள், மற்றெல்லா உஸ்தாதுமார்கள்,
புக்கஹாக்கள் ஆகியோரைக் கொண்ட யூத ஆலோ

சனைச் சங்கத்தின் நீதிமன்றம் ஒன்று கூடியது. ஈஸாவை
அவர்களின் நீதிமன்றத்தின் முன் கொண்டு வந்து
நிறுத்தினார்கள்.* அவர்கள் ஈஸாவிடம், ''நீர் மஸீஹ் 67
என்றால் அதை எங்களிடம் சொல்லிவிடும்'' என்று
கேட்டபோது ஈஸா, ''நான் சொன்னாலும் நம்பமாட்
டீர்கள்.* நான் என் சார்பில் எதையும் கூறவும் 68
விடமாட்டீர்கள்.* ஆயினும் மனிதகுமாரனாகிய நான், 69
மகாவல்ல இறைவனின் பக்கத்தில் அதிகாரமுள்ள
வனாய் வீற்றிருக்கிற காலம் வெகுவிரைவில் வருகிறது''
என்றான்.* அப்பொழுது அவர்கள் எல்லோரும், 70
''அப்படியாயின் நீ இறைவனின் குமாரன் என்று கூறு
கிறாயா?'' என்று கேட்டார்கள். அதற்கு ஈஸா, ''நீங்
கள் சொல்லுகிறபடி நான் அவனேதான்'' என்றான்.*
இப்பொழுது இதற்குமேல் நமக்கு வேறு சாட்சியம் 71
எதுவும் தேவையில்லை. இவன் தன் வாயாலேயே
சொல்லக்கேட்டோம்'' என்று எல்லோரும் சத்தமிட்ட
னர்.*

பிலாத்துவின் முன் விசாரணை

23 பின்பு ஆலோசனைச் சங்கத்தினர் அனைவரும்
ஈஸாவை தேசாதிபதியாகிய பிலாத்துவிடம்
கொண்டுபோனார்கள்.* அவர்கள் எல்லோரும் ஒருமித்து 2
ஈஸாவின்மேல் குற்றம் சாட்டினார்கள். ''இந்த மனிதன்
நமது மக்கள் ரோமப்பேரரசிற்கு வரி செலுத்தக் கூடா
தென்று சொல்லி, அவர்களைக் கலகம் செய்யத்தூண்டு
கிறான். அது மாத்திரமல்ல; தானே 'மஸீஹ் என்னும் அர
சன்' என்றும் சொல்கிறதை நாம் காதால் கேட்டோம்''
என்றார்கள்.* எனவே பிலாத், ''நீ யூதருடைய அரசனா?'' 3
என்று ஈஸாவிடம் கேட்டார். அதற்கு ஈஸா, ''ஆம்,
நீர் சொல்கிறபடி நானே!'' என்றான்.* பின்பு 4
பிலாத் யூதமத தலைமை உலமாக்களையும் மக்களையும்
பார்த்து, ''இந்த மனிதனிடம் நான் ஒரு குற்றமும்
காணவில்லை'' என்று கூறினார்.* அப்பொழுது அவர்கள், 5
''இவன் கலிலேயா தொடக்கம் ஜெரூஸலம் வரைக்
கும், யூதேயா முழுவதிலும் போதனை செய்து, மக்
களை அரசாங்கத்திற்குக் விரோதமாக கலகம் செய்யும்
படி தூண்டினான்'' என்று மிகவும் அழுத்தம் திருத்த
மாகச் சொன்னார்கள்.*

ஏரோதுவின் முன் விசாரணை

அப்பொழுது பிலாத், ''இவன் கலிலேயனா ?'' 6
என்று கேட்க * அவர்கள் ''ஆம்'' என்று கூறினார்கள். 7
எனவே பிலாத் ஈஸாவை ஏரோதிடம் கொண்டு
போகும்படி கூறினார். ஏனென்றால் கலிலேயா ஏரோதின்
அதிகாரத்திற்குட்பட்டதாய் இருந்தது. இவ்விசாரணை
நடந்துகொண்டிருந்த வேளை ஏரோதும் ஜெரூஸலத்தில்
இருந்தார்.* ஏரோது ஈஸாவைக்குறித்து ஏற்கனவே 8
கேள்விப்பட்டிருந்ததால், ஈஸாவைப் பார்க்க வேண்
டும் என்றும் நெடுநாட்கள் ஆவலாயிருந்தார். ஈஸா
செய்யும் அற்புதம் ஒன்றையாவது காணவேண்டும்
என்று விரும்பினார். ஆகையால் அவர் ஈஸாவைக்
கண்டதும் மிக மகிழ்ச்சியடைந்தார்.* அவர் ஈஸா 9
விடம் பல கேள்விகளைக் கேட்டார். ஆனால் ஈஸாவோ
ஒன்றுக்கும் விடையளிக்கவில்லை.* அதேவேளையில் 10
யூதமத தலைமை உலமாக்களும், உஸ்தாதுமார்களும்,
புக்கஹாக்கள் எல்லோரும் மும்முரமாக ஈஸாவின்
மேல் குற்றம் சுமத்திக்கொண்டு, நின்றார்கள்.* அப் 11
பொழுது ஏரோதும் அவரது போர்வீரரும் ஈஸாவை
ஏளனம்செய்து இழிவாக நடத்தினார்கள். ஈஸாவுக்கு
அரசனுக்குரிய பகட்டான உடையைப்போர்த்து, மறுபடி
யும் ஈஸாவை பிலாத்திடம் அனுப்பிவிட்டார்கள்.*
முன்னே ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த 12
பிலாத்தும் ஏரோதும் அன்று நண்பர்களானார்கள்.*

மீண்டும் பிலாத்தின் முன் ஈஸா

அப்பொழுது பிலாத், யூதமத உலமாக்களையும் 13
யூதமத தலைவர் யாவரையும், மக்களையும் கூடிவரச்
செய்தார்.* அவர்களிடம் பிலாத் கூறியதாவது:- 14
''ரோம அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய
தூண்டுகிறான் என்று குற்றம் சாட்டி இம்மனிதனை
என்னிடம் கொண்டு வந்தீர்கள். நான் இவனை உங்கள்
முன்பாக விசாரணை செய்த போது, இவன் மீது
நீங்கள் சுமத்துகிற குற்றங்களுள் ஒன்றையும்
இவனிடம் நான் காணவில்லை.* ஏரோதும் இதே முடி 15
வுக்குத்தான் வந்தார். இவன் குற்றமற்றவன். எனவே
தான் என்னிடம் மறுபடியும் அனுப்பினார். இவன் மரண
தண்டனைக்கு ஏற்ற குற்றம் எதுவும் செய்யவில்லை.

நான் இவனைக் கண்டித்து விடுதலை செய்கிறேன்''* 16
(ஏனெனில் யூதகொண்டாட்டங்களின்போது ஒரு குற்ற 17
வாளியை விடுதலைசெய்வது வழக்கமாயிருந்தது.)*
ஆனால் அவர்களோ, ''இவனை ஒழித்துக்கட்டும் 18
எங்களுக்குப் பரபாசை விடுதலைசெய்யும்'' என்று ஒரு
மித்துச் சத்தமிட்டனர்.* (பரபாஸ் என்பவன் அரசாங் 19
கத்திற்கு எதிராக ஜெரூஸலத்தில் கிளர்ச்சி ஒன்றை
ஆரம்பித்ததற்காகவும், கொலைக்காகவும் சிறையில்
அடைக்கப்பட்டான்.)* பிலாத் ஈஸாவை விடுதலை 20
செய்வதற்காக அவர்களுடன் எவ்வளவோ வாதா
டிப் பார்த்தார்.* ஆனால் அவர்களோ, ''அவனைச் 21
சிலுவையிலறையும், சிலுவையிலறையும்'' என்று சத்தம்
இட்டனர்.*

இன்னுமோர் தடவை மூன்றாம் முறையாகப் 22
பிலாத், '' ஏன்? இவன் என்ன குற்றம் செய்துவிட்
டான்? மரண தண்டனைக்குரிய குற்றம் ஒன்றையும்
நான் இவனிடம் காணவில்லை! எனவே, நான் இவ
னுக்கு ஏற்ற தண்டனையளித்து விடுதலை செய்கிறேன்''
என்றார்.* ஆனால், அவர்களோ பெருங்கூச்சலிட்டு 23
விடாப்பிடியாக, ஈஸாவைச் சிலுவையிலறையும்படி
கேட்டனர்.* முடிவில் அவர்களின் கோரிக்கையின்படியே 24
ஈஸாவுக்குத் தீர்ப்பளித்தார்.* கொலையும் கிளர்ச் 25
சியும் செய்ததற்காகச் சிறையிலிருந்த பரபாசை
அவர்களின் விருப்பப்படி விடுதலை செய்தார். ஆனால்
ஈஸாவையோ அவர்கள் விருப்பம்போல் செய்யும்படி
அவர்களிடம் ஒப்படைத்தார்.*

ஈஸாவை சிலுவையில் அறைதல்

அவர்கள் ஈஸாவைக்கூட்டிக்கொண்டு செல்கையில்,
சிரேனே ஊரானாகிய சீமோன் தன் கிராமத்தில் இருந்து 26
ஜெரூஸலத்துக்கு வந்துக்கொண்டிருந்தார். அவரை
ஈஸாவின் பின்னே சிலுவையைச் சுமந்துகொண்டு
வரும்படி வற்புறுத்தினார்கள்.*

பெருந்திரளான மக்கள் ஈஸாவின் பின்னே சென் 27
றார்கள். அநேக பெண்களும் அவன்பின்னே மாரடித்
துப் புலம்பியவாறு சென்றார்கள்.*

ஆனால் ஈஸாவோ அவர்களைத் திரும்பிப்பார்த்து, 28
''ஜெரூஸலத்தின் குமாரத்திகளே! எனக்காக நீங்கள்
அழவேண்டாம். ஆனால் உங்களுக்காகவும், உங்கள்
பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.* ஏனெனில் 'ஒரு 29
பொழுதும் பாலூட்டாதவர்களும், பிள்ளைப்
பேறற்ற பெண்களும் பாக்கியம் பெற்றவர்கள்'
என்று கருதப்படும் காலம் வருகிறது.* மலைகள் 30
தங்கள்மேல் விழுந்து நசுக்கிப்போடவும், குன்றுகள்
தங்களை மூடிவிடவும் விரும்பி மனிதர் இரந்து கேட்
பார்கள்.* உயிர் உள்ள மரம் ஆகிய நான் பச்சையாய் 31
இருக்கையிலேயே இவ்வாறு செய்வார்களாயின்
உலர்ந்துபோனபோது உங்களுக்கு என்னதான் செய்ய
மாட்டார்கள்?'' என்றான்.*

ஈஸாவுடன் மரணதண்டனையைப் பெறும்படி 32
வேறு இரண்டு குற்றவாளிகளையும் கொண்டுபோனார்
கள்.* 'தலையோடு' என்று சொல்லப்படும் (கொல் 33
கொதா என்னும்) இடத்திற்கு அவர்கள் வந்தபோது,
அவர்களைச் சிலுவையில் அறைந்தார்கள். ஈஸாவை
நடுவிலும், மற்றிரு குற்றவாளிகளை அவனின் இருபக்
கங்களிலும் சிலுவையில் அறைந்தார்கள்.* அப்பொ 34
ழுது ஈஸா, ''பிதாவே! இவர்களை மன்னிப்பாயாக!
ஏனெனில், இவர்கள் தாங்கள் செய்வது இன்ன
தென்று அறியாது செய்கிறார்கள்'' என்றான். போர்
வீரர்கள் ஈஸாவின் உடையின்மேல் ஒவ்வொன்றாக
சீட்டுக் குலுக்கிப்போட்டுப் பகிர்ந்துகொண்டார்கள்.*
மக்கள் நின்று பார்த்துக்கொண்டிருக்க, யூதத்தலை 35
வர்கள் ஏளனமாகச் சிரித்தவாறு, ''இவன் பிறரை
இரட்சித்தான். உண்மையில் இவன் இறைவனால்
தெரிந்து கொள்ளப்பட்டவனாகிய மஸீஹ் என்றால்
தன்னைத்தானே இரட்சிக்கட்டும்'' என்று இகழ்ந்தனர்.*

போர்வீரரும் அவனை இகழ்ந்தனர். ஈஸாவுக்குப் 36
புளிப்பான காடியைக் குடிக்கக்கொடுத்து.* ''நீர் 37
யூதருடைய அரசனென்றால், உம்மை நீரே இரட்சித்
துக்கொள்ளும்'' என்று சொன்னார்கள்.* சிலுவை 38
யில் ஈஸாவுடைய தலைக்குமேல், 'இவன் யூதருடைய
அரசன்' என்று ஒருபலகையில் எழுதித்தொங்கவிட்
டார்கள்.* அவனுக்குப் பக்கத்தில் சிலுவையில் அறையப் 39
பட்ட குற்றவாளிகளில் ஒருவன் ஈஸாவை இகழ்ந்து

''நீர் மஸீஹ்யானுல் உம்மையும் காப்பாற்றி, எங்களை
யும் காப்பாற்றுவதால் அதை நிரூபியும்'' என்றார்.*
ஆனால் மற்றவரோ அவரிடம், ''நீர் மரணதண்டனை 40
யைப்பெற்றிருந்து, இறக்கும்போதாவது இறைவனுக்
குப் பயப்படுவதில்லையா?* எங்களுடைய கொடிய 41
செயல்களுக்காக நாம் தண்டிக்கப்படுவது முறையே!
ஆனால், இவனோ ஒரு பிழையும் செய்யவில்லை'' என்றார்.*
பின்பு ஈஸாவிடம், ''ரப்பே, நீ மறுபடியும் வரும் 42
போது உன்னுடைய இராட்சியத்தில் என்னை நினைத்
தருளும்'' என்று வேண்டினார்.* அதற்கு ஈஸா, ''இன்று 43
நீர் என்னுடன் இறைவனடியில் இருப்பீர் என்று நான்
உமக்கு உறுதியாகச்சொல்கிறேன்'' என்றான்.*

ஈஸாவின் மரணம்

அப்பொழுது நண்பகல் வேளையாயிருந்தது. 44, 45
எனினும் சூரியன் ஒளியற்றுப்போனதால் பூமியெங்கும்
இருள் சூழ்ந்தது. இவ்விருள் மாலை மூன்று மணிவரை
நிலைத்திருந்தது. பைத்துல்முகத்தஸின் பெருந்திரைச்
சீலை திடீரென்று நடுவில் இரண்டாகக்கிழிந்தது.* அவ் 46
வேளையில் ஈஸா உரத்த சத்தமாய், ''பிதாவே! உன்னு
டைய கைகளில் என் ரூஹை ஒப்படைக்கிறேன்''
என்று சொல்லி உயிர் துறந்தான்.* ரோமப் படைத் 47
தளபதி நடந்தவற்றைக் கண்டபோது, பயபக்தி
மேலிட்டவராக. ''உண்மையிலேயே இந்த மனிதன்
குற்றமற்றவன். நீதிபரன்'' என்று இறைவனைப் புகழ்ந்
தார்.* சிலுவையில் அறைவதைப் பார்ப்பதற்கென்று 48
ஒன்றுகூடிய மக்கள் ஈஸா உயிர் விட்டதைக் கண்ட
போது தாங்கமுடியாத துயரத்துடன் திரும்பிப்
போனார்கள்.* ஆனால் ஈஸாவின் நண்பர்கள், கலிலேயா 49
விலிருந்து அவனைப் பின்தொடர்ந்து வந்த பெண்கள்
உட்பட, தூரத்தில் நின்று இவற்றைப் பார்த்துக்
கொண்டே நின்றார்கள்.*

அடக்கம் செய்தல்

யூஸுபு எனும் பெயர்கொண்ட யூதேயாவில் 50, 51
உள்ள அரிமத்தியா ஊரைச்சேர்ந்த மனிதன் ஒருவர்
இருந்தார். இவர் யூத ஆலோசனைச் சங்கத்தில் உறுப்
பினர். நேர்மையும் நற்பண்புமுடையவர். இவர்

இறைவனின் இராட்சியத்தின் வருகைக்காக ஆவலுடன்
எதிர் நோக்கியிருந்தவர். மற்ற யூத தலைவர்களின்
செயல்களுக்கும் இம்மரணத்தீர்ப்பிற்கும் அவர் உடன்
படவில்லை.* அவர் பிலாத்திடம் போய் ஈஸாவின் உட 52
லைத் தன்னிடம் கொடுக்கவேண்டுமென்று அனுமதி
பெற்று வந்தார்.* எனவே, அவர் ஈஸாவின் உடலைச் 53
சிலுவையிலிருந்து இறக்கி, மெல்லிய துணியில் சுற்றி,
கற்பாறையில் குடைந்து வெட்டப்பட்ட ஒரு புதிய
கல்லறையில் வைத்தார். அக்கல்லறையில் இதுவரை
ஒருவரும் அடக்கம் செய்யப்படவில்லை.* இந்த 54
நாள், யூத ஓய்வு நாளுக்கு முந்தின நாளாகிய ஆயத்த
நாள் மாலையாயிருந்தது.* உடலை அவர்கள் எடுத்துக் 55
கொண்டுபோகையில் கலிலேயாவிலிருந்து வந்த பெண்
களும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அவர்
கள் ஈஸாவின் உடலைக் கல்லறையில் வைத்ததைக்
கண்டார்கள்.* பின்பு அவர்கள் தங்கள் வீட்டுக்குத் 56
திரும்பிச்சென்று, நறுமணப் பொருட்களையும், நறு
மண தைலங்களையும் ஆயத்தம் செய்தார்கள். ஆயத்தம்
செய்தபின்பு ஓய்வுநாளாயிருந்தபடியால், யூதச்சட்டத்
தின்படி ஓய்ந்திருந்தார்கள்.*

ஈஸா உயிர்த்தெழுதல்

24 ஆனால் ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் தாங்
கள் ஆயத்தம் செய்த நறுமணப் பொருட்களை
அவர்கள் எடுத்துக்கொண்டு கல்லறைக்குச் சென்றார்
கள்.* அவர்கள் அங்கு வந்ததும் கல்லறை வாயிலை 2
மூடியிருந்த பெரிய கல்லானது உருட்டித் தள்ளப்பட்
டிருந்ததைக் கண்டார்கள்.* எனவே அவர்கள் 3
உள்ளேசென்று பார்த்தபோது, ரப்புல் ஆலமின் ஈஸா
வின் உடல் அங்கு இல்லாததைக் கண்டார்கள்.*
அதைக்குறித்து அவர்கள் மனக்கலக்கமுற்று, என்ன 4
நடந்திருக்குமோ என்று சிந்தித்துக்கொண்டிருக்கை
யில், திடீரென இருவர் அவர்கள் முன் தோன்றினார்கள்.
அவ்விருவரின் உடைகளும் ஒளிரும் வெண்மையாயிருந்
தன.* அப்பெண்கள் மிகப் பயந்து, அவர்களை நிமிர்ந்து 5
பார்க்கமுடியாது தரையைப் பார்த்தவாறு நின்றனர்.
அந்த இருவரும் அப்பெண்களிடம், ''உயிரோடு இருக்கிற
வரை, நீங்கள் ஏன் கல்லறையில் தேடுகிறீர்கள்?''

அவன் இங்கே இல்லை! அவன் உயிர்த்தெழுந்தான்.* 6
அவன் கலிலேயாவிலே உங்களுக்குக் கூறியது ஞாப 7
கம் இல்லையா?, மனிதகுமாரன் பொல்லாத மனிதரின்
அதிகாரத்திற்குள் தந்திரமாக ஒப்படைக்கப்படவும்,
சிலுவையில் அறையப்படவும், மூன்றும் நாளில் அவன்
உயிருடன் எழுந்திருக்கவும் வேண்டும்' என்று அவன்
சொன்னான் அல்லவா?'' என்றார்கள்.*

அப்பொழுது ஈஸா கூறிய வார்த்தைகள் அவர்களின் 8
நினைவிற்கு வந்தன.*உடனே அவர்கள் கல்லறையைவிட்டு 9
ஜெரூஸலத்துக்கு விரைந்து சென்று, நடந்தவற்றைப்
பதினொருவருக்கும் மற்ற யாவருக்கும் அறிவித்தார்
கள்.* கல்லறைக்குச் சென்ற பெண்களின் பெயர் 10
களாவன:- மஜ்தலியா மரியா, யோவன்னாள், யஃகூ
பின் தயாகிய மரியா. இவர்களுடன் வேறுசில பெண்
களும் சென்றனர்.* ஆனால் அவர்கள் றஸூல்மார் 11
களுக்கு அச்செய்தியைச் சொன்னார்கள். அச்சம்பவம்
ஆதாரமற்ற கதைபோல் தோன்றியதால் அதைக்
கேட்டவர்கள் நம்பவில்லை.* என்றாலும் பேதுரு இது 12
உண்மையா என்று பார்ப்பதற்குக் கல்லறைக்கு ஓடி
னார். அங்கு சென்ற அவர் உள்ளே குனிந்து பார்த்த
போது, ஈஸாவின் உடலைச்சுற்றிவைத்த துணியை மாத்
திரம் கண்டு, நடந்ததைக் குறித்து வியந்தவாறு வீடு
திரும்பினார்.*

எம்மாவுக்குச் செல்லும் பாதையில்

அதேநாளில் ஈஸாவின் முரீதீன்களுள் இருவர் 13
ஜெரூஸலத்திலிருந்து ஏழு மைல் தூரம் தொலைவி
லுள்ள எம்மாவு எனும் ஊருக்குச் சென்றுகொண்
டிருந்தார்கள்.* அவர்கள் நடந்துபோகையில் ஈஸா 14
வின் மரணத்தைக் குறித்து ஒருவரோடொருவர்
பேசிக்கொண்டே போனார்கள்.* இவர்கள் இவ்வாறு 15
நடந்துகொண்டிருக்கையில், திடீரென்று ஈஸா அவர்
களருகே போய் அவர்களோடு நடந்து சென்றான்.*
ஆனால், அவன் இன்னான் என்று கண்டுகொள்ளாத 16
வாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.*
அவர்களிடம் ஈஸா, ''நீங்கள் எதைக்குறித்தோ 17
ஆழ்ந்த கவலையுடன் கலந்துரையாடிக்கொண்டு செல்
கிறீர்கள் போல் தோன்றுகிறதே! அப்படி என்ன நடந்து

விட்டது?'' என்று அவன் கேட்டதும், அவர்கள் வியப்பட்
புடன் நின்றுவிட்டார்கள். அவர்களுடைய முகங்கள்
துயரத்தினல் வாட்டமுற்றிருந்தன.* அவர்களுள் 18
ஒருவரான கிலேயோப்பா, ''ஜெரூஸலத்துக்கு நீர்
புதியவரா? அங்கு கடந்தவாரம் நடந்த பயங்கரச்
சம்பவத்தை எல்லோரும் அறிவார்களே!'' என்று ஈஸா
விடம் கேட்டார்.* ''நடந்த சம்பவமா?'' என்று ஈஸா 19
அவர்களைக் கேட்டான். அதற்கு அவர்கள், ''நாசரேத்
தூர் ஈஸாவுக்கு நடந்தவற்றைத்தான் சொல்கிறோம்.
அவன் ஒரு நபியாக விளங்கினன். வல்ல அற்புதங்களைச்
செய்தான். அவன் இறைவனுக்கு முன்பாகவும்,
மக்களுக்கு முன்பாகவும் செயலிலும், சொல்லிலும்,
வல்லமையுள்ளவனுயிருந்தான்.* ஆனல் அவனை யூத 20
மத தலைமை உலமாக்களும் யூதமதத் தலைவர்களும்
கைதுசெய்து ரோம அரசாங்கத்திடம் ஒப்படைத்
தார்கள். அதுமட்டுமல்ல அவனுக்கு மரண
தண்டனையும் வழங்கிச் சிலுவையில் அறைந்தார்கள்.*
நாங்களோ, இவனே மஸீஹ் எனவும் பனீஇஸ்ராயீல் 21
மக்களை இரட்சிக்க வந்தவன் எனவும் நம்பியிருந்
தோம். இது தவிர இப்பொழுது இவை நடந்து இன்
ருேடு மூன்று நாட்களாகி விட்டன.* இதுமாத்திர 22,23
மல்ல! இன்று அதிகாலையில் எங்கள் பெண்களிற் சிலர்
கல்லறைக்குப் போனர்கள். அவர்கள் அவனுடைய
உடலை அங்கே காணவில்லை என்னும் எங்களைத் திகைக்க
வைக்கும் செய்தி ஒன்றுடன் திரும்பி வந்தார்கள்.
'அவன் உயிரோடெழுந்தான்' என்று தங்களுக்குச்
சொன்ன மலக்குகளைக் கண்டதாகவும் கூறினர்கள்.*
எங்களுடன் இருந்த ஆண்களிற் சிலர் கல்லறைக்கு 24
ஓடிச்சென்று பார்த்தபோது பெண்கள் கூறியபடியே
கண்டார்கள். ஆனல் அவனைக் காணவில்லை'' என்றார்கள்.

அதைக்கேட்ட ஈஸா அவர்களிடம், ''அறிவற்ற 25
வர்களே! நீங்கள் எவ்வளவு மதியீனராயிருக்கிறீர்
கள்? நபிமார்கள் எழுதியவற்றை நம்ப இயலாத அள
விற்கு உங்கள் உள்ளம் மந்தமாகி விட்டதே!*
மஸீஹ் மாட்சிமையடைவதற்கு முன் இந்தப் பாடுகள் 26
எல்லாவற்றையும் அடைந்து தீரவேண்டுமென்று நபி
மார்கள் விளக்கமாக எழுதியிருக்கிறதை நீங்கள்
வாசிக்கவில்லையா?'' என்று கேட்டான்.* பின்பு ஈஸா, 27
மூஸா (அலை) அவர்களும், நபிமார்களும் வேதாகமத்தில்

எழுதியுள்ளவற்றிலிருந்து, ஆதியாகமம் தொடங்கி
முடிவு வரை பல வேதவசனங்களை எடுத்துக்கூறி,
அவை தன்னைக் குறித்து என்ன கூறுகிறது என்று
விளக்கினான்.*

இவ்வாறு அவர்கள் பேசியவாறு தாங்கள் போய்ச் 28
சேரவேண்டிய எம்மாவூருக்கு அருகில் வந்தார்கள்.
ஈஸாவோ அதற்கப்பாலும் செல்பவனைப் போல்காணப்
பட்டான். அப்பொழுது அவர்கள் ஈஸாவிடம், 29
''பொழுது போய்விட்டது. அதிகநேரமும் ஆகிவிட்டபடி
யால் நீர் எங்களோடு இன்றிரவு தங்கவேண்டும்''
என்று கெஞ்சிக்கேட்டார்கள். ஈஸாவும் உடன்பட்டு
அவர்களுடன் தங்கினான்.* பிறகு அவன் அவர்களுடன் 30
உணவு சாப்பிட அமர்ந்தபோது, உணவுக்காக இறை
வனுக்கு நன்றி செலுத்தி உணவை ஆசீர்வதித்தபின்,
அவன் ரொட்டியை எடுத்துச் சிறுதுண்டுகளாக்கி
அவர்களுக்குக் கொடுத்தான். அப்பொழுது அவர்
கள் கண்கள் திறக்கப்பட்டன.* அவன் இன்னான் என் 31
பதை அறிந்து கொண்டார்கள். உடனே திடீரென்று
ஈஸா அவர்களிடமிருந்து மறைந்துபோனான்.*

அப்பொழுது அவர்கள், ஒருவரையொருவர் 32
பார்த்து, ''வழியிலே ஈஸா நம்முடன் பேசி, நமக்கு
வேத வாக்கியங்களை விளக்கிக் கொண்டிருக்கையில்
நமது உள்ளம் கொழுந்து விட்டு எரிவதைப்போலிருக்க
வில்லையா?'' என்று சொல்லிக்கொண்டார்கள். அந் 33
நேரமே அவர்கள் எழுந்து ஜெரூஸலத்துக்குத் திரும்
பிப் போனார்கள். அங்கே! பதினொருவரும், மற்றும்,
ஈஸாவைப் பின்பற்றிய பலரும் ஒன்றுகூடியிருந்ததைக்
கண்டார்கள்.* ''உண்மையிலேயே ரப்புல் ஆலமீன் 34
உயிர்த்தெழுந்து விட்டான். அவன் பேதுருவுக்குக் காட்சி
அளித்தான்'' என்று அவர்கள் சொன்னார்கள்.* அப் 35
பொழுது இவர்களிருவரும், தாங்கள் எம்மாவுக்குப்
போகும் வழியில் ஈஸா தங்களுக்குக் காட்சியளித்த
தையும் அவன் ரொட்டியைத் துண்டுகளாக்கிக் கொடுக்
கையில் எப்படித் தாங்கள் அவனை இன்னான் என்று
அறிந்துகொண்டார்களென்றும் அவர்களுக்குக் கூறி
னார்கள்.*

ஈஸா முரீதின்களுக்குக் காட்சியளித்தல்

அவர்கள் இவற்றைக் கூறிக்கொண்டிருக்கையில் 36
ஈஸாவே அவர்கள் மத்தியில் திடீரென்று வந்து நின்
ருன். ''உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக''
என்று அவர்களை வாழ்த்தினன்.* ஆனல் அங்கிருந்த 37
அனைவரும், தாங்கள் ஓர் ரூஹானியத்தைக் காண்பதாக
நினைத்து, மிகுந்த திகைப்பும் அச்சமும் கொண்டனர்.*
அப்பொழுது ஈஸா, '' ஏன் பயப்படுகிறீர்கள்? உண் 38
மையிலேயே நானேதான். ஏன் சந்தேகப்படுகிறீர்கள்?*
இதோ! என் கைகளைப் பாருங்கள்! என் கால்களைப் 39
பாருங்கள்! எனக்குத் தசையும் எலும்பும் கொண்ட
உடல் இருக்கிறதே! இவை ரூஹானியத்திற்கு
இருக்காதே! '' என்ருன்.* அவன் இப்படிக் கூறிய 40
வாறு தன்னுடைய கைகளிலும் கால்களிலுமுள்ள
ஆணிகளின் அடையாளத்தை அவர்களுக்குக் காட்டி
ஞன்.* அவர்களோ அளவு கடந்த ஆச்சரியமும், 41
மகிழ்ச்சியும் அடைந்த நிலையில் இருந்தார்கள். எனவே
தாங்கள் கண்டதையும் கேட்டதையும் நம்பமுடியாமல்
திகைத்து நின்றனர். அப்பொழுது ஈஸா, '' உங்களி
டம் இங்கே உணவு ஏதாவது இருக்கிறதா? '' என்று
அவர்களிடம் கேட்டான்.* அவர்கள் பொரித்த மீன் 42
துண்டை அவனுக்குக் கொடுத்தார்கள்.* ஈஸா 43
அதை அவர்களிடமிருந்து வாங்கி அவர்கள் கண்ணெ
திரே சாப்பிட்டான்.*

பின்பு ஈஸா, '' நான் உங்களுடன் இருந்த காலத் 44
தில் உங்களுக்குக் கூறியது நினைவில்லையா? மூஸாவின்
தௌராத்வேதத்திலும், தீர்க்கதரிசனங்களிலும். ஸபூர்
வேதத்திலும் என்னைக்குறித்துக் கூறப்பட்டவை
யாவும் நிறைவேற வேண்டும் என்று கூறினேன் அல்
லவா?'' என்ருன்.* அப்படிக்கூறி, வேதவாக்கியங்களை 45
அவர்கள் புரிந்துகொள்ளும்படி அவர்களுடைய
மனதைத் திறந்தருளினன்.* ஈஸா அவர்களிடம், 46
''ஆம்! அல் மஸீஹ் பல பாடுகள்பட்டு, இறந்து மூன்ரும்
நாளில் இறந்தோரிடமிருந்து உயிருடன் எழுந்திருக்க
வேண்டும்.* அத்துடன், மனமாற்றமடைந்து என் 47
னிடம் வரும் யாவருக்கும் பாவமன்னிப்பு உண்டு
என்ற இந்த இரட்சிப்பின் நற்செய்தி ஜெரூஸலத்திலிரு
ந்து எல்லா நாட்டினருக்கும் அறிவிக்கப்பட வேண்டும்

எனவும், எழுதியிருக்கிறது.* இத்தீர்க்கதரிசனங்கள் 48
நிறைவேறியதற்கு நீங்களே சாட்சிகளாயிருக்கிறீர்கள்.* 49
என்பிதா உங்களுக்கு வாக்களித்தபடி நான் இப்பொழுது
ரூஹுல் குதுஸானவனை உங்கள் மேல் அனுப்புவேன்.
இப்பொழுது நீங்கள் நற்செய்தியைக் கூற ஆரம்பிக்க
வேண்டாம். பரலோகத்திலிருந்து ரூஹுல் குதுஸானவன்
வந்து, உங்களை வல்லமையினால் நிரப்பும்வரை நீங்கள்
இங்கு, ஜெரூஸலத்திலேயே தங்கியிருங்கள்'' என்றான்.*

பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல்

பின்பு ஈஸா அவர்களை பெத்தானியா வரைக்கும் 50
அழைத்துக்கொண்டு போனான். அங்கே அவன் தன்னு
டைய கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தான்.*
அவன் ஆசீர்வதிக்கையிலேயே அவர்களிடமிருந்து 51
வானத்திற்கு உயர்த்தப்பட்டு, இறைவனின் இருப்பிட
மாகிய பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.*
அவர்கள் ஈஸாவைத் தொழுதார்கள். பின்பு அவர்கள் 52
மகிழ்ச்சி ததும்ப ஜெரூஸலத்திற்குத் திரும்பிச்சென்றார்
கள். அவர்கள் தினமும் பைத்துல்முகத்தஸில்
இடைவிடாது இறைவனைப் புகழ்ந்து போற்றினார்கள்.*